அரசறிவியல்

A-Level / GAQ / BA
மாணவர்களுக்கு உகந்தது

# அரசியல் எண்ணக்கருக்கள்
# கோட்பாடுகள்
# மனிதவுரிமைகள்

ACM. Faleel (MA)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Yalini

# அரசறிவியல்

க.பொ.த (உயர்தர) மாணவர்களுக்கும்
பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி
பட்டப்படிப்பு மாணவர்களுக்கும்
உகந்தது

அரசியல் எண்ணக்கருக்கள்
உரிமையும், மனிதவுரிமையும்
அரசியல் சமூக மூலக் கோட்பாடு

ஆக்கம்:
ஏசீஎம். பளீல் MA

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூற் குறிப்பு


| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | அரசறிவியல் |
| முதற்பதிப்பு | : | 2004 |
| ஆசிரியர் | : | ஏ.சீ.எம். பளீல் BA, MA,<br>Dip. in. Ed.,<br>Dip. in. Mass Communication,<br>Zahira National School,<br>Kalmunai.<br>(067 - 2221401) |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கே |
| பக்கங்கள் | : | 102 |
| பிரதிகள் | : | 1000 |
| அச்சுப்பதிப்பு | : | றோயல் ஓப்செற் பிரிண்டர்ஸ்,<br>பிரதான வீதி, சாய்ந்தமருது - 09.<br>மொபைல் : 0777 488477 |
| பக்க வடிவமைப்பு | : | ஏ.எஸ்.ஏ. பௌஸர் Dip. in. GD, NCE |
| வெளியீடு | : | தென்கிழக்கு மனிதவள அமைப்பு,<br>கல்விப்பிரிவு. |
| விலை | : | ரூபா. 150.00 |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# என்னுரை

அரசறிவியல் என்பது அரசாங்க செயற்பாடுகளுடன் தொடர்புபடுகின்ற மனித நடத்தை பற்றியதாகும். சமூகத்தையும், சமூகத்தில் வாழும் மனிதர்களின் நடத்தை, மனப்பான்மை, அறிவு, பொருளாதாரப் பிரச்சினைகள் என்பவற்றை அரசாங்க நடவடிக் கைகளுடன் தொடர்புபடுத்துவதற்கும் சர்வதேச நிலவரங்களை சரியாகப் புரிந்து கொள்வதற்கும் அரசறிவியல் பற்றிய அறிவு அவசியமானது.

இன்று அரசறிவியல் பற்றிய நூல்கள் தமிழில் போதுமான அளவு இல்லாமையினால் க.பொ.த உயர்தர மாணவர்களும், பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி மாணவர்களும் பெரும் சிக்கல்களையும், இடர்பாடுகளையும் எதிர்நோக்குகின்றனர். இந்த குறைபாட்டை அரசறிவியல் என்ற இந்நூல் நிபர்த்தி செய்யும் என நினைக்கின்றேன்.

இந் நூலில் அரசியல் எண்ணக்கருக்கள், உரிமைகள், மனிதவுரிமைகள், அரசியல் சமூக மூலக்கோட்பாடுகள் போன்ற விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது சிறப்பம்சமாகும். எனவே, க.பொ.த உயர்தர மாணவர்களுக்கும் பல்கலைக்கழக உள்வாரி, வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர்களுக்கும் அரசறிவியலில் ஆர்வங் கொண்ட அனைவருக்கும் இந்நூல் பயனளிக்கும் என்பதில் சந்தேகமில்லை.

இந்நூலை சரி பிழை பார்ப்பதற்குதவிய ஓய்வுபெற்ற ஆசிரியர் கலாபூஷணம் யூ. எல். ஆதம்பாவா அவர்களுக்கும், கணனி வடிவமைத்த ஏ. எஸ். ஏ. பௌஸர், முஹம்மட் நௌபர் ஆகியோர்களுக்கும், இந்நூலை அச்சிட்டுத்தந்த சாய்ந்தமருது றோயல் ஓப்செற் பிரிண்டர்ஸ் நிறுவனத்தினருக்கும் எனது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

நன்றி

ஏ. சீ. எம். பளீல் MA.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பொருளடக்கம்

01. அரசியல் பங்குபற்றுதல்
02. அரசியல் கலாச்சாரம்
03. அரசியல் அமைப்பு வாதம்
04. நீதித்துறை
05. நீதித்துறை சுதந்திரம்
06. சட்டம்
07. சட்டமும் சுதந்திரமும்
08. சட்டத்தின் ஆட்சி
09. மரபு ரீதியான அணுகுமுறை
10. நடத்தை வாதம்
11. ஜனநாயகம்
12. ஜனநாயகத்தின் குறைபாடுகள்
13. நேரடி ஜனநாயகக் கருவிகள்
14. அமுக்கக் குழுக்கள்
15. பிரச்சாரம்
16. ஒப்பங்கோடல் அல்லது மக்கள் தீர்ப்பு
17. குடிமுனைப்பு
18. உரிமைகள்
19. அரசியல் உரிமைகள்
20. மணித உரிமைகள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசியல் பங்குபற்றுதல்

எல்லா அரசியல் முறையமைவுகளிலும் மக்கள் ஏதாவது ஒரு வகையில் அரசியலில் பங்கேற்கின்றனர். மக்களுக்கு அரசியலில் பங்கேற்கும் வாய்ப்பு எதேச்சாதிகார முறையமையில் குறைவாய் உள்ளது. அரசியல் பங்கேற்பிற்கான வாய்ப்புக்கள் மக்களாட்சி அரசியல் முறைய மையில் அதிக அளவில் உள்ளது. மக்களாட்சி நாடுகளில் தம்மை ஆள்பவர் களை மக்கள் குறிப்பிட்ட இடைவெளிக்குள் தேர்ந்தெடுக்கின்றனர். அவர் களைக் கட்டுப்படுத்தி பொறுப்புடையவர்களாய் செயல்பட வைக்கின்றனர். தவறிழைக்கும் போது அவர்களை பதவியிலிருந்து வெளியேற்று கின்றனர். இவ்வாறு ஆளுபவர்களை தேர்ந்தெடுக்க, கட்டுப்படுத்த, வெளியேற்ற மக்கள் மக்களாட்சி அரசியலில் பங்கேற்கின்றனர்.

அரசியல் பங்குபற்றலைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விதமான கருத்துக்களைக் கூறுகின்றனர்.

01) "அரசியல் தீர்மானம் செய்யும் நடவடிக்கைகளில் ஒரு சமூகத்தி லுள்ள மக்களை பங்கேற்கச் செய்தலை அரசியல் பங்கேற்பு குறிக் கின்றது". என்று ஆல்மெண்ட் (G. A. Almand) கூறுகிறார்.

02) "கொள்கை உருவாக்குதல் தீர்மானம் செய்தல் போன்றவற்றில் மக்களை பங்கேற்கச் செய்தல் அரசியல் பங்குபற்றலாகும்" என்று பவல் (Powell) கூறுகிறார்.

03) "அரசியல் பங்கு பற்றலுக்கு ஜனநாயகம் இன்றியமையாதது" என்று 'ரேயினி' என்பவரும் 'கேண்டல்' என்பவரும் கூறுகின்றனர்.

04) "அரசியல் ஜனநாயகமானது மக்களிடம் உள்ளது அல்லது அரசியல் தீர்மானம் எடுப்பதற்கு திறமையுள்ளவர்களின் பங்குபற்றல் அவசியம்" என்று நியூபக் என்பவர் கூறுகிறார்.

அரசியலில் மக்கள் பங்கேற்கும் அளவு நாட்டுக்கு நாடு வேறு படுகிறது. பொதுவாக ஐந்து செயல்முறைகளின் மூலம் மக்கள் அரசிய லில் பங்கு பற்றுகின்றனர் என உட்வூட் (J. L. Woodword), ரோவட் (E. Robert) ஆகிய இரு அறிஞர்களும் கூறுகின்றனர். அவையாவன;

1) தேர்தலில் வாக்களித்தல்.
2) தன்னலக் குழுக்கள் அல்லது செல்வாக்கு குழுக்களில் பங்குபற்றல்.
3) சட்டமன்ற உறுப்பினருடன் தொடர்பு கொள்ளல்.
4) கட்சி நடவடிக்கைகளில் பங்கு கொள்ளல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5) அரசியல் கொள்கைகளையும், கருத்துக்களையும் மக்கள் மத்தியில் பரப்புதல்.

செயற்பாட்டின் அடிப்படையில் அரசியல் பங்கேற்பினை பேராசிரியர் பிராத் 3 வகையாக வகைப்படுத்தியுள்ளார், அவை:

**1) முழுநேரச் செயற்பாடுகள் / செயல்கள் :**
கட்சியில் உறுப்பினராய் இணைதல், தேர்தலில் போட்டியிடல், கட்சி நடவடிக்கைகளில் பங்கு கொள்ளல் என்பன முழு நேரச் செயல்களாகும்.

**2) இடை நிலை செயற்பாடுகள் / செயல்கள் :**
கட்சிக்கு நிதி திரட்டல், ஆதரவாளராய் செயற்படல், பொருளுதவி செய்தல், கட்சி கூட்டங்களில் பங்கெடுத்தல் போன்றவற்றை இடைநிலை செயல்களில் அடக்குகிறார்.

**3) பார்வையாளர் செயற்பாடுகள் / செயல்கள் :**
தேர்தலில் வாக்களித்தல், அரசியல் விவாதங்கள் மற்றும் கலந்துரையாடல்களில் பங்கேற்றல் போன்றவை பார்வையாளர் செயல்கள் என இவர் பாகுபடுத்துகிறார்.

**பிராத் இன்னொரு வகையிலும் அரசியல் பங்கேற்பை இரு வகையாக வகைப்படுத்துகிறார். அவை:**

**01. தீவிர பங்கேற்பு :-** பெறுமதியான நேரத்தினையும், பொருளையும் அரசியலுக்கு செலவிட்டு பங்பேற்றல் அது தீவிர பங்கேற்பு ஆகும்.
**02. மந்த நிலையான பங்கேற்பு :-** பிற வகையில் சாதாரணமாக பங்கேற்பது என அரசியற் பங்கேற்பை நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு இரு வகையாகப் பாகுபடுத்தலாம்.

(I) ஒரு குறிப்பிட்ட குறிக்கோளை எய்த அரசியலில் பங்கேற்பது காரண பங்கேற்பாகும்.
(II) எவ்வித குறிக்கோள் அற்ற நிலையில் அரசியலில் பங்கேற்பது அடையாளப் பங்கேற்பாகும்.

இவ்விதமாக பிரிக்கப்படும் அரசியல் பங்குபற்றலானது ஒவ்வொரு பிரஜையினதும் பொதுவான பிரதிநிதித்துவத்தை குறிக்கின்றது. அது நீதியை அல்லது கீழ் படிதலை பொது நலனுக்காக பகிர்ந்து கொள்ளலைக் குறிக்கவும் உதவுகிறது. அவர்களின் செயல்கள் சமுதாயத்தை பிரதிபலிப்பதிலேயே தங்கியுள்ளது. தனிப்பட்டவர்கள் மத்தியில் கவனமாக நட்புறவை வளர்த்தல், பொதுசன தொடர்பு மூலம் பொதுசனங்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

களைப் பற்றிய விவாதங்களை மேற்கொள்ளல், அவ்வாறான செய்கைகளை சமுதாயத்தில் மக்களைப் பற்றி அறிய உதவுகிறது. மேலும், அரசியல் பங்கு பற்றலானது ஒவ்வொருவரின் உரிமைகளையும் கடமைகளையும் பாதுகாப்பதுடன் அதிகாரத்துக்கான போட்டியையும் ஏற்படுத்துகின்றது.

அரசியல் பங்குபற்றலானது ஆட்சியாளர்களைத் தெரிந்தெடுக்கும் செயலாக இருப்பதால், அது மறைமுகமாக கொள்கை திட்டங்கள் உருவாக வழிவகுக்கிறது.

## அரசியல் பங்குபற்றுதலை நிர்ணயிக்கும் காரணிகள்

அரசியல் பங்குபற்றலை நிர்ணயிக்கும் காரணிகளுள் கல்விஅறிவு, அரசியல் அறிவை புகட்டுகிறது. அரசியலில் அக்கறை கொள்ளச்செய்து பொதுக்கடமை ஆற்ற வேண்டும் என்ற ஈடுபாட்டை கொடுக்கின்றது. ஒரே வகையான உயர் தொழில் புரிவோர் தமக்கிடையே ஒரு தொடர்பை ஏற்படுத்தி, அத்தொடர்பினால் அரசியல் பிரச்சினைகளை விவாதிக்கின்றனர்.

மேலும், அரசியல் ஈடுபாட்டை வளர்த்து தேர்தலில் தீவிரமாய் பங்கேற்கின்றனர். ஆசிரியர் சங்கம், அரசாங்க ஊழியர் சங்கம் ஆகியவற்றை இதற்கு சிறந்த எடுத்துக் காட்டாகக் கூறலாம். உயர் தொழில் புரிவோருக்கு அரசியலில் பங்கேற்க காலம் இருப்பதில்லை. இவர்களுள் சிலர் தமது வருமானத்தைக் காக்கும் நோக்குடன் அரசியலில் தீவிரமாய் பங்கேற்கின்றனர்.

வயது, அரசியல் ஈடுபாட்டை நிர்ணயிக்கும் ஒரு சமுகக் காரணியாக கருதப்படுகின்றது. அமெரிக்கா, பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய நாடுகளில் நடாத்தப்பட்ட ஆய்வுகளில் வயதின் அடிப்படையிலான சில உண்மைகளை வெளிப்படுத்தியது. பொதுவாக இளைஞர்களையும், முதியவர்களையும் காட்டிலும் நடுத்தர வயதுடையோர் தாம் அரசியலில் அதிகமாக ஈடுபாடு கொள்கின்றனர்.

மேலும், அரசியல் ஈடுபாட்டை நிர்ணயிக்கும் காரணிகளுள் மக்கள் பின்பற்றும் பண்பாடும் அவர்களது கலாசாரமும் பாதிப்புச் செலுத்துகிறது. அவர்களது பண்பாடு, கலாசாரம் பாதிக்கும் வண்ணம் ஓர் அரசியல் நடத்தை அமையுமாயின் அல்லது தமது கலாசார மேம்பாட்டை உயர்த்திக் கொள்வதற்காகவும், பண்பாட்டை வளர்த்துக் கொள்வதற்காகவும் அதனை நடத்தையாகக் கொண்டு அரசியலில் பங்கேற்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் ஈடுபாட்டை நிர்ணயிக்கும் காரணிகளுள் மதமும் பிரதான காரணியாக அமைகிறது. மக்கள் பின்பற்றும் மதங்கள் வெவ்வேறு விதமான தூண்டுதல்களை வழங்குவதனாலும் அரசியலில் ஈடுபடு வதன் மூலம் தமது மதக் கருத்துக்களையும் மக்கள் முன் பரப்பிக் கொள்வதற்காகவே அரசியலில் ஈடுபடுகின்றனர். அதே நேரம் பொது வாக எடுத்து நோக்கினால் இஸ்லாம் மதத்தில் பெண்களைக் காட்டி லும் ஆண்களே அரசியலில் ஈடுபடுவதை விரும்புவதைக் காணலாம். பெண்கள் அரசியலில் ஈடுபடக் கூடாது என்று எவ்வித தடையும் அம் மதத்தில் இல்லாவிடினும் ஆண்களுக்கே முன்னுரிமை வழங்கப் பட்டுள்ளதைக் காணலாம். இவ்விதமாக மதங்களும் அரசியல் ஈடுபாட்டை நிர்ணயிப்பதாக அமைகிறது.

தென்னாசிய பிராந்திய நாடுகளான இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அதிகமான மக்கள் அரசியலில் பங்கு பற்றுகின்றவர்களாக இருக்கின்றனர். இவர்கள்,

01. தேர்தல்களில் வாக்களித்தல்
02. கட்சிச் செயற்பாடுகளில் ஈடுபடல்
03. அரசியல் கருத்துக்களை மக்கள் மத்தியில் பரப்புதல்

போன்றவற்றின் அடிப்படையில் பங்குபற்றுகின்றனர்.

இலங்கையிலே 1947ம் ஆண்டில் இருந்து இன்றுவரையில் நடைபெற்ற பொதுத்தேர்தல்களிலும் ஜனாதிபதித் தேர்தல்களிலும் வாக்களிப்பில் கலந்து கொண்ட வீதங்களில் கண்டுகொள்ள முடியும்.

| பொதுத்தேர்தல் நடைபெற்ற ஆண்டுகள் | வாக்களித்த வீதம் |
|---|---|
| 1947 | 55.8 % |
| 1952 | 70.7 % |
| 1956 | 69 % |
| 1960 March | 77.6 % |
| 1960 July | 79.9 % |
| 1965 | 82.1 % |
| 1970 | 85.1 % |
| 1977 | 87.7 % |
| 1989 | 89.9 % |
| 1994 | 76.23 % |
| 2000 | 75.62 % |
| 2001. 12. 05 | 80.4 % |



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்ற ஆண்டுகள் | அளிக்கப்பட்ட மொத்த வாக்குகள் | மக்கள் வாக்களித்த வீதம் |
| --- | --- | --- |
| 1982 | 6602617 | 81.06 % |
| 1988 | 5186223 | 55.32 % |
| 1994 | 7713232 | 70.52 % |
| 1999 | 8635290 | 73.31 % |

இந்தியாவிலே மக்களின் அரசியல் பங்குபற்றுதல் கட்சிகளின் அடிப்படையில் அதிகமாகக் காணப்படுகின்றது. இதனை ஒவ்வொரு பொதுத் தேர்தல்களிலும் மக்கள் அரசியல் கட்சிகளுக்கு வாக்களித்த வீதங்களில் கண்டுகொள்ளலாம்.

| பொதுத் தேர்தல் நடந்த ஆண்டு | அரசியல் கட்சிகள் | வாக்களித்த வீதம் |
| --- | --- | --- |
| 1971 | இந்தியக் காங்கிரஸ் கட்சி | 43.6 % |
| 1977 | இந்தியக் காங்கிரஸ் கட்சி | 34.5 % |
| 1980 | இந்தியக் காங்கிரஸ் கட்சி | 43 % |
| 1984 | இந்தியக் காங்கிரஸ் கட்சி, V. J. P., பாரதிய ஜனதாக் கட்சி | 50 %, 7.7 % |
| 1989 | பாரதிய ஜனதாக் கட்சி | 11.5 % |
| 1991 | பாரதிய ஜனதாக் கட்சி | 20.9 % |
| 1996 | இந்தியக் காங்கிரஸ் கட்சி<br>பாரதிய ஜனதாக் கட்சி | 29.7 %<br>20.3 % |
| 1998 | இந்தியக் காங்கிரஸ் கட்சி<br>பாரதிய ஜனதாக் கட்சி | 25.7 %<br>25.6 % |

இதேபோல பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற நாடுகளிலும் மக்களின் அரசியல் பங்குபற்றல் அதிகமாகக் காணப்படுகிறது. காலத் துக்குக் காலம் நடத்துகின்ற பொதுத் தேர்தல்களில் மக்கள் அதிகப் படியான வாக்குகளை தேசிய ரீதியான கட்சிகளுக்கும், பிராந்தியக் கட்சிகளுக்கும் அளிக்கின்றனர். ஆனால், இந்த இரண்டு நாடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இராணுவ ஆட்சிக்கு உட்பட்டிருந்தது குறிப்பிடத்தக்க அம்சமாகும்.

## அரசியல் பங்கு பற்றலில் பெண்களின் பங்கு

ஆண்களோடு ஒப்பிடும் போது பெண்கள் அரசியலில் பங்கு பற்றுவது குறைவு என்றாலும் இது விகிதாசாரமாக படிப்படியாக அதிகரித்துக் கொண்டே வருகின்றது. பெண்கள் கல்வி முன்னேற்றம், பெண்களின் உரிமைகள் மறுப்பு என்பன பெண்களை அரசியலில் பங்கு கொள்ள தூண்டுகின்றன. இன்று உலகில் அரசியலில் பல பெண் தலைவர்கள் செல்வாக்கு செலுத்தியும், செல்வாக்கு செலுத்திக் கொண்டும் இருக்கின்றனர். அவர்களில் சிலர் வருமாறு;

01) இந்திரா காந்தி (இந்தியா)
02) மாக்ரட் தச்சர் (இங்கிலாந்து)
03) சோனியா காந்தி (இந்தியா)
04) திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா (இலங்கை)
05) திருமதி சந்திரிக்கா குமாரதுங்க (இலங்கை)
06) சேக் ஹசினா முஜிபுர் ரஹ்மான் (பங்களாதேஷ்)
07) பேகம் காலிதாசியா (பங்களாதேஷ்)
08) பெனாசிர் பூட்டோ (பாக்கிஸ்தான்)
09) செல்வி ஜெயலலிதா ஜெயராமன் (தமிழ் நாடு)
10) சுஹார்ணோ புத்திரி மேகவதி (இந்தோனேசியா)
11) பேரியல் அஷ்ரஃப் (இலங்கை)
12) அஞ்ஞா உம்மா (இலங்கை)
13) சுமேதா ஜெயசேகர (இலங்கை) - மொனராகலை மாவட்டம்
14) பவித்ரா வன்னியாராச்சி (இலங்கை) - இரத்தினபுரி மாவட்டம்
15) சுஜாத அழகக்கோன் (இலங்கை) - மாத்தளை மாவட்டம்
16) தலதா அத்துக்கொரள (இலங்கை) - இரத்தினபுரி மாவட்டம்
17) அமர பியசிறி ரத்னாயக்க (இலங்கை) - குருநாகல் மாவட்டம்
18) சாந்தனி பண்டா (இலங்கை) - அநுராதபுரம் மாவட்டம்
19) தங்கேஸ்வரி கதிராமன் (இலங்கை) - மட்டக்களப்பு மாவட்டம்
20) பத்மினி சிதம்பரநாதன் (இலங்கை) - யாழ்ப்பாணம் மாவட்டம்

## அரசியல் கலாச்சாரம்

அரசறிவியலில் அரசியல் கலாச்சாரம் முக்கியமான ஒன்றாகக் காணப்படுகிறது. அரசியல் கலாச்சாரம் பற்றிய ஆய்வு 1950ம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்டது. ஒரு நாட்டிலுள்ள மக்கள் அல்லது அந்த நாட்டிலுள்ள சமுகம் இருக்கின்ற அரசாங்கத்தின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை, மனப்பாங்கு, பெறுமானம் என்பவற்றையே அரசியல் கலாச்சாரம் என வரையறை செய்யலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் கலாச்சாரம் என்ற எண்ணக்கரு சட்ட ரீதியான நிறுவனங்களுக்கும் மனித நடத்தைகளுக்கும் இடையிலான தொடர்புகளை அறிந்து கொள்ளும் நோக்கில் அபிவிருத்தி அடைந்த ஒரு எண்ணக்கருவாகும்.

2ம் உலக யுத்தத்தின் பின்பு உலக நடைமுறை அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களுக்கு சமாந்தரமாக அரசியல் ஆய்வு முறைகளிலும் மாற்றங்கள் ஏற்படத் தொடங்கின. இம் மாற்றங்களையும் அபிவிருத்தியையும் வழங்குவதற்கு பாட நெறியும் புதிய வழிமுறைகளை பின்பற்றத் தொடங்கியது. அதுவரை காலமும் அரசியலில் அரசு என்ற எண்ணக்கருவிற்கு கொடுக்கப்பட்டு வந்த முக்கியத்துவம் பின் தள்ளப்பட்டு அரசியலை ஒரு முறையாகக் கருதி ஆய்வுகளின் பால் கவனம் செலுத்தப்பட்டதோடு அரசியல் தீர்மானம் எடுத்தல் என்ற அம்சத்திற்கும் முக்கியத்துவம் கொடுக்கப்பட்டது. எனவே, புதிதாக ஆய்வாளர்களின் கவனத்தை ஈர்த்துக்கொண்ட விடயங்களை மேலும் விஸ்தரிக்க இவ்விடயங்களுக்குப் பின்னணியில் நின்று சக்தியாகத் தொழிற்படும் விடயங்களுக்குக் கவனமும் முக்கியத்துவமும் கொடுக்கப் பட்டது. இதனடிப்படையில் அரசியல் நவீனத்துவம், அரசியல் அபிவிருத்தி, நடத்தைவாதம் போன்ற அமைப்புக்களின் பகுப்பாய்வு, அரசியல் கலாச்சாரம் போன்றவை புதிய ஆய்வு விடயங்களாக கருக்கொள்ளத் தொடங்கின. இப்புதிய விடயங்கள் யாவும் ஏனைய சமூக விஞ்ஞானங்களில் இருந்து பெறப்பட்டு அரசியல் விஞ்ஞானத்துக்கு என்ற வகையில் அபிவிருத்தி செய்யப்பட்டது.

எனவே, புதிதாகத் தோன்றிய அரசியல் கலாச்சாரம் தொடர்பான ஆய்வாளர்கள், ஸ்தாபகர்கள் யார் என நோக்கின் முதல் முதலாக அமெரிக்க அரசியல் சிந்தனையாளர்களாகிய Gabrial Almond, Sidry Verba ஆகியோர்கள் தமது குடிமைக் கலாசாரம் என்ற நூலை (1963) வெளியிட்ட பின்னர் தான் அரசியல் கலாச்சாரம் என்ற விடயம் அரசறிவியலில் பிரபல்யம் பெறத் தொடங்கியது. இருந்தாலும் அரசியல் கலாச்சாரம் பற்றிய ஆய்வுக்கு இவர்களுக்கு முன்னர் வாழ்ந்த பல அறிஞர்கள் பங்களிப்புகளும் தூண்டுதல்களாக அமைந்திருக்கின்றது என்பதினை இவர்கள் இருவரும் ஒப்புக் கொண்டிருக்கின்றார்கள். மொன்டேஸ் கியூ, டொக்குவில் (Tocgueville), பேரேட் (Begehot) ஆகியோருடைய ஆய்வுகள் அரசியல் கலாச்சாரம் பற்றிய ஆய்வின் விருத்திக்கு பங்களிப்புச் செய்துள்ள போதிலும் இவர்களுடைய ஆய்வுகள் அரசியல் கலாச்சாரம் ஓர் தனியான கோட்பாடாக வளர்ச்சியடைய உதவவில்லை என்று கூறுவதிலும் பார்க்க அரசியல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கலாச்சாரத்தை ஓர் தனியான கோட்பாடாக வளர்ச்சியடையச் செய்வதில் இவர்கள் அக்கறையுடையவர்களாக இருக்கவில்லை என்று கூறுவதே பொறுத்தமுடையது எனலாம். எனவே, அரசியல் கலாச் சாரத்தின் தனித்த ஒரு பாட நெறியாக அரசியலுக்கு அறிமுகம் செய்தவர்கள் என்ற பெருமை சிட்னி வேபா, கபிரியல் அல்மன்ட் என்பவர்களையே சாரும். மேலும், சிட்னி வேபா அரசியல் கலாச்சாரம் பற்றி விமர்சிக்கும் போது அதன் 'அரச முறையின் உயிர்' (Spitit of Politiy) என்று குறிப்பிட்டார்.

மேற்கூறிய கருத்துக்களிலிருந்து அரசியல் கலாச்சாரம் பற்றிய ஆய்வின் சுவடுகள் முன்னரே பதிக்கப்பட்ட போதிலும் அது அரச றிவியலின் கோட்பாட்டு ரீதியான ஆய்வுப் பரிமாணத்தை அண்மைக் காலத்தில் தான் குறிப்பாக 2ம் உலக யுத்தத்தின் பின்னர்தான் பெறத் தொடங்கியது என்பதையும் உணர்ந்து கொள்ள லாம். ஆகவே, 2ம் உலக யுத்த காலம் வரைக்கும் இடம்பெற்று வந்த அரசியல் நிறுவனங்களின் கட்டமைப்புக்கள் பற்றிய ஆய்வில் இருந்து மாறிய அரசாங்கம், அரசியல் கட்சிகள், தேர்தல், அரசியல் ஒழுங்குகள் போன்றவற்றில் மக்கள் மனதில் எவ்வகையான பெறுமானங்கள் நம்பிக்கைகள் உள்ளன என்பன போன்ற விடயங்களிலேயே அரசியல் கலாசாரம் பற்றிய ஆய்வு மக்களோடு தொடர்புடைய ஓர் ஆய்வு எனலாம்.

**அரசியல் கலாச்சாரத்தைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு விதமான கருத்துக்களைக் கூறுகின்றனர்.**

1) V. Wright என்பவரின் வரைவிலக்கணமானது 'ஒரு நாட்டினுடைய அரசியல் கலாச்சாரம் பற்றிய ஆய்வு அரசியலுக்கான மக்களின் பயிற்சியைப் பற்றிய ஆய்வாகும்.' என்று கூறுகின்றது. அதாவது ஒரு அரசியல் முறையை நோக்கி மக்கள் எவ்வாறு பயிற்றுவிக் கப்படுகின்றனர் என்பதையே இவ்வரைவிலக்கணம் குறிக்கின்றது.

2) அரசியல் கலாச்சாரம் என்பது சமுதாயத்தின் அங்கத்துவர்களி டையே அரசியல் மனப்பாங்குகள், விவேகம், பெறுமானங் கள் என்பவற்றை குறிப்பாக உள்ளடக்குகின்றது, என Khan, Mcwiven என்பவருடைய மற்றுமொரு வரைவிலக்கணம் கூறுகின்றது.

3) அரசியல் காலச்சாரத்தின் மூலகர்த்தா என கருதப்படுகின்ற Sidny Verba, Gahrial Almond ஆகியோர்கள் அரசியல் கலாச்சாரம் என்ன என்பதை வரையறை செய்யும் போது 'அரசியல் ஒழுங்குகள் மீதான மனப்பாங்குகளும் உணர்வுகளும் ஆகும்.' என்ற அடிப் படையில் வரைவிலக்கணம் செய்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4) சிட்னி வெபா (Sidny Verba) என்பவரின் கருத்துப்படி ஒரு சமுகத்தினுடைய அரசியல் கலாச்சாரம் என்பது அனுபவம் சார்ந்த நம்பிக்கைகள் வெளிப்படுத்தத்தக்க அம்சங்கள் பெறுமானங்கள் என்பவற்றை உள்ளடக்குகிறது என்றும் இவைகள் அரசியல் சூழ் நிலைகள் இடம்பெறுகின்ற இடங்களைப் பொறுத்து வரையறை செய் யப்படுகின்றதென கூறுகின்றார்.

அரசியல் கலாச்சாரத்தின் பயன்களை நோக்கும் போது

01. அரசியல் அமைப்புப் பற்றி அறிவதற்கு அரசியல் கலாச்சாரம் சிறந்ததொரு ஆயுதமாக அமைந்துள்ளது.

02. ஒரு தேசத்தின் அரசியல் கலாச்சாரம் அத்தேச மக்களின் உளப் பாங்கு அறிவுரைகளை அடிப்படைக் கொள்கைகளை விளங்கு வதாய் உள்ளது.

03. ஏற்றுக் கொள்ளப்பட்ட இலட்சியங்கள் சட்டங்கள் அதில் அடங்கும் சமுக எண்ணக்கருக்களுக்கிடையே பல்வேறுபட்ட அரசியல் கலாச் சாரங்கள் உள்ள மக்களின் எண்ணோட்டங்களை கொள்கைகளை இவை எடுத்துக் காட்டுகின்றன.

## அரசியல் கலாச்சாரத்தின் வகைகள்

அரசியல் கலாச்சாரம் தொடர்பான பொதுவாக எல்லோராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட வகைப்படுத்தல் ஒன்று இல்லாமையினால் அரசியல் கலாச்சாரத்தை எவ்வாறு வகைப்படுத்துவது என்ற கேள்வி எழுகின்றது. இதனால், இது தொடர்பான ஆய்வில் ஈடுபட்டவர்கள் எவ்வாறான வகையாக்கத்தில் கவனம் செலுத்தினர் எனக் கண்டு கொள்வது அவசியமாகும். இந்த வகையில் அரசியல் கலாச்சாரத்தின் ஆரம்ப கர்த்தாக்கள் எனக் கருதப்படுகின்ற ஆல்மன்ட், வெபா ஆகியோர்கள் தமது நூலாகிய சிவில் கல்ட்சர் (Civil Culture) என்ற நூலில் மூன்று வகையான அரசியல் கலாச்சார வகைகள் பற்றி விளக்குகின்றனர்.

01. குறுகிய நோக்கிலான அரசியல் கலாச்சாரம்
02. கீழ் படிந்து போகும் அரசியல் கலாச்சாரம்
03. பங்கேற்கும் அரசியல் கலாச்சாரம்

இதில் முதலாவது வகையினை எடுத்துக் கொண்டால் மரபு ரீதியான சமூக அமைப்புக்களிலேயே இவ்வகையான கலாச்சாரம் காணப்படுகின்றது என்கின்றன. மரபு சமூகங்களில் வாழ்கின்ற மக்கள் அரசியல் முறை அமர்வில் உள்ள அமைப்புக்கள் பற்றியோ அல்லது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவ்வமைப்புக்கள் என்ன பணியை புரிய வேண்டும் என்பது பற்றியோ அறிவித்தவர்கள் அல்ல. அதிகாரத்தில் உள்ளவர்கள் சொல்லுகின்ற படியே இம்மக்கள் செயல்படுபவர்களாக உள்ளனர்.

தனிப்பட்டவர்கள் இக்கலாச்சாரத்தில் குறைந்த அளவு அரசியல் அறிவுடையவர்களாகக் காணப்படுவர். இங்கு அரசியல் விசேட புலமை யுடையோர் காணப்படமாட்டார்கள். ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் காணப்படும் புலனமர்வு சமூகத்தில் இத்தகைய அரசியல் கலாச்சாரம் காணப்படலாம்.

கீழ்ப்படிந்து போகும் கலாசாரம் என்னும் போது பதவியில் உள்ள அரசாங்கம் தங்களுக்கு குறைந்த பட்ச வசதியாவது செய்து தர வேண்டும் என்று மக்கள் எதிர்பார்ப்பார்களேயானால் அதிக கீழ்ப்படிந்து போகும் கலாச்சாரம் எனலாம். இவர்கள் உயிர், உடைமை, சொத்து போன்றவைகளை அரசாங்கம் பாதுகாக்க வேண்டும் என எதிர்பார்க்க லாம். ஆனால், அவர்கள் அரசாங்கத்தை தமது செல்வாக்கிற்கு உட்படுத்தி கொள்கைகளில் தீர்மானிக்க உரிமை பெற்றிருக்க மாட்டார்கள். அரசாங்கம் சொல்வதை ஏற்றுக் கொள்பவர்களாகவே இருப்பார்கள்.

பங்கேற்பு அரசியல் கலாச்சாரம் என்னும் போது இவ்வாறான கலாச்சாரம் நிலவும் நாடுகளில் உள்ள மக்கள் அரசியல் முறைமை யின் நோக்கங்கள் அவை செய்ய வேண்டிய வேலைகள் முதலிய வற்றை அறிவார்கள். அரசாங்கம் மேற்கொள்ளும் முடிவுகளில் அவர்கள் பங்கேற்பார்கள். அரசியல் கொள்கைகளை எடுப்பதிலும் அவர்கள் செல்வாக்குச் செலுத்துவார்கள்.

இக்கலாச்சாரம் தொடர்பில் உலக நாடுகளை அவதானிக்கும் போது சில நாடுகளில் இக்கலாச்சார வகைகள் ஒன்று சேர்ந்து செயற் படலாம். வேறு சில நாடுகளில் இவை தனித்தும் செயற்படலாம். அமெரிக்காவை உதாரணத்துக்கு எடுத்துக் கொண்டால் அங்கு குறுகிய பங்கேற்கும் கலாச்சாரம் இரண்டும் சேர்ந்து செயற்படுகிறது. ஏனெனில், அமெரிக்க மக்கள் அரசாங்க கொள்கை யாக்கத்தில் பங்கு கொள்கின்றனர். அதனால் சிறு பங்கேற்கும் கலாச்சாரமாக கணிக்கப் படுகிறது. அதேவேளை, நீக்றோ மக்கள் மரபு சார்ந்த கலாச்சாரத்தை பின்பற்றுபவர்களாக இருக்கின்றனர். அரசாங்கத்தின் நடவடிக்கை களைப் பற்றி தெளிவாக அறியாதவர்களாக இருக்கின்றனர். இது குறுகிய கலாசாரப் போக்காகும். எனவே, அமெரிக்காவில் இரு வகை கலாச்சாரப் போக்குகள் காணப்படுகின்றன எனலாம். அதேவேளை அபிவிருத்தி அடைந்து வருகின்ற நாடுகளில் கீழ்படிந்து போகும் கலாசாரமும், குறுகிய கலாசாரமும் கலந்து காணப்படுகிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்ற முடிவுக்கு அரசியல் அறிஞர்கள் வருகின்றனர். மேலும், இந்த நாடுகள் பங்கேற்கும் அரசியல் கலாச்சாரத்தை இன்னும் அடைய முடியவில்லை என்றே இவர்கள் கருதுகின்றனர். இதற்கு மூன்றாம் உலக நாடுகளில் அனேகமானவை இராணுவ ஆட்சிக்கு உட்பட்டதை இவர்களே உதாரணங்களாக கூறுகின்றார்கள்.

### உப அரசியல் கலாச்சாரம்

ஒரு குறிப்பிட்ட சமுகத்தின் அரசியல் கலாச்சாரத்தை விளங்கிக் கொள்ளும் போது உப கலாச்சாரம் பற்றிய கருத்து முக்கியமான தாகும். அதற்குக் காரணம் எந்தவொரு சமுகத்திலும் ஒரே வகையான அரசியல் கலாச்சாரம் காணப்பட பல உப கலாச்சாரங்களைக் காண லாம். அதனால் ஒரு நாட்டில் காணப்படும் பல உப கலாச்சாரங்களின் கூட்டு மொத்தமே அந்த நாட்டின் அரசியல் கலாச்சாரம் என்று ஒரு வகையில் கூறலாம். எனினும் சமூகத்திற்குச் சமூகம் அரசியல் கலாச் சாரம் பல தடவையில் வேறுபடலாம். உதாரணமாக இங்கிலாந்தின் அரசியல் கலாச்சாரம் ஒருமை தன்மை வாய்ந்ததென்று கூறப்படு கின்றது. இங்கு குறைபாடுகள் காணப்பட்டாலும் இலங்கை போன்ற ஒரு நாட்டுடன் ஒப்பிடும் போது ஒரு புரட்சியாக உள்ளமை காணப் படுகின்றது. இலங்கை போன்ற ஒரு நாட்டின் அரசியல் கலாச்சாரத்தில் காணப்படும் ஒரு பண்பு அங்கு காணப்படும் பல தன்மையாகும்.

### உப அரசியல் கலாச்சாரத்தை நிர்ணயிக்கும் காரணிகள்

I ஒரு நாட்டின் வர்க்க அமைப்பு, பல வர்க்கங்களுடன் தொடர்பான அரசியல் கலாச்சார அம்சங்களைக் காணலாம். இதன் பொருள் என்னவெனில் அரசியல் பெறுமதிகள் ஏற்றுக் கொள்ளுதல், மனப் பாங்குகள், உணர்வுகள் போன்றவை வர்க்க முறையின்படி வேறு படுகின்றன. மேலும்,

II நாட்டின் சனத்தொகையின் இனரீதியான அமைப்பின் படியும், வெவ் வேறாகக் காணக்கூடிய உப அரசியல் கலாச்சாரங்களைக் காணலாம்.

III பொது அபிவிருத்தியுடன் இணைந்த கிராமப்புற, நகர்ப்புற வேறு பாடும் வெவ்வேறான உப கலாச்சாரங்கள் தோன்றுவதில் பாதிப்புச் செலுத்துகின்றன.

IV பிரபுக்களும், பொதுமக்களுக்குமிடையே காணப்படும் பிரிவினை யின் படியும் அரசியல் கலாச்சாரம் வேறுபடலாம் என்று சிலர் கூறு கின்றனர். தலைமுறைகளுக்கிடையிலான இடைவெளியும் ஒரு சமூகத்தின் அரசியல் கலாச்சாரம் வேறுபடுதலைக் காட்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அரசியல் அமைப்பு வாதம்

ஒப்பீட்டு அரசாங்கம் என்ற பாடத்துறையில் யாப்புறுவாதம் பற்றிய எண்ணக்கரு ஒரு முக்கிய பகுதியாக விளங்குகின்றது. ஏனெனில், அரசின் இறைமையதிகாரத் தினை நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிக்கக்கூடிய அமைப்பாக அரசியல் யாப்பு இருத்தலாகும். ஓர் அரசின் வளர்ச்சிக்கும் அமைதிக்கும் சில நிறுவனங்கள் இன்றியமையாததாக விளங்குகின்றன. அவ்வாறான நிறுவனங்களை அரசியல் யாப்பு உருவாக்கு வதனால் அரசியல் யாப்புக்களைப்பற்றிய ஆய்வு அரசியல் விஞ்ஞானத் தில் முக்கியம் பெறுகின்றது. இதனை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்ற ஒரு எண்ணக்கருவே யாப்புறுவாதமாகும்.

யாப்புறுவாதம் என்பது அரசறிவியலில் அண்மையில் தோற்றம் பெற்ற ஒரு எண்ணக்கருவாகும். 19ம் நூற்றாண்டில் தாராண்மை ஜனநாயகம் வளர்ச்சியடைந்த பொழுது நாட்டின் இறைமையதிகாரம் சட்டரீதியாக கட்டுப்படுத்தப்பட வேண்டும் என்ற கருத்து வலியுறுத்தப் பட்டது. அதற்காக ஜனநாயகம் அறிமுகப்படுத்திய கருவியே அரசியல் யாப்பாகும். கட்டுப்பாடற்ற வகையில் அரசியல் அதிகாரத்தைப் பிர யோகித்த ஐரோப்பிய குடியரசுகளின் அதிகாரத்தை வீழ்த்திவிட்டு ஜனநாயகம் பற்றிய கருத்துக்கு சமாந்தரமான வகையில் யாப்புறு வாதம் தோற்றம் பெற்றது. இது தனி நபர்களின் விருப்பு வெறுப்பிற்கு முக்கியத்துவம் வழங்காமல் சட்டத்திற்கு முக்கியத்துவம் வழங்கும் ஓர் அரசியல் முறையினைக் குறிக்கின்றது.

## முக்கியத்துவம்

தேசிய உணர்வு, மக்களாட்சி, வரையறுக்கப்பட்ட அதிகாரங் களையுடைய அரசாங்கம் ஆகிய கருத்துக்களை இக்கோட்பாடு வலியுறுத்துகின்றது. அரசாங்க அதிகாரம் ஓரிடத்தில் குவிக்கப்படாமல் பங்கீடு செய்யப்பட வேண்டும் என்று இது குறிப்பிடுகின்றது. மொன்டஸ்கிவ்யின் கருத்துப்படி அரசாங்கத்தின் முத்துறை அதிகாரங் களும் ஓரிடத்தில் குவிந்திருந்தால் சர்வதிகாரம் தோன்றி மனித சுதந்திரம் கட்டுப்படுத்தப்படும் என்றும் அதனால் அவ்வதிகாரம் சட்டம், நீதி, நிர்வாகம் என்ற வகையில் பிரிக்கப்பட்டு அதற்கென தாபிக்கப் பட்டுள்ள தாபனங்களிடம் ஒப்படைக்கப்பட வேண்டும் என்று கூறினார். இதன்படி தான்தோன்றித்தனமான ஓர் அதிகாரத்தினைக் கட்டுப் படுத்தும் ஒரு வழிமுறை என்ற வகையில் அதிகார வேறாக்கக் கோட்பாட்டினை யாப்புறுவாதம் வலியுறுத்துகின்றது. இதனை வரை யப்பட்ட யாப்பொன்றின் மூலமே ஏற்படுத்தலாம். சுருங்கச் சொன்னால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யாப்புறுவாதம் என்பது நாட்டின் அடிப்படைச்சட்டமாக ஓர் அரசியல் அமைப்புச் சட்டமாக இருக்க வேண்டும். அதன் நோக்கங்கள் அரசாங் கத்தின் எதேச்சாதிகாரப் போக்கைக் கட்டுப்படுத்தல், மக்களுக்கு சில உரிமைகளை உறுதிப்படுத்தல், இறைமையதிகாரம் செயற்படும் முறை யை நிர்ணயித்தல் போன்ற இன்னோரன்ன விடயங்களை வற்புறுத்து கின்றது. இவ்விடயங்கள் ஜனநாயகக் கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு தோற்றம் பெற்றவையாகும்.

யாப்புறுவாதம் பற்றி பல அறிஞர்களும் வெவ்வேறு பொருள்களில் விளக்கியுள்ளனர். Thomas Phire, Bryce, Laslel, H. Finer போன்ற மேற்கத்திய அறிஞர்கள் யாப்புறுவாதம் என்பது ஒரு குறிக்கோளையும் வழிமுறைகளையும் கொண்ட ஓர் அமைப்பு என்று வர்ணிக்கின்றனர். இது அரசியல் யாப்பொன்றின் தேவையை வலியுறுத்துகின்றது. அரசியல் யாப்பு அரசாங்கத்தின் பலவிதமான உறுப்புகளை உருவாக்கி அவற்றுக்குத் தேவையான அதிகாரங்களை வழங்குவதோடு மக்களின் உரிமைகள், சுதந்திரம், சமத்துவம், நீதி ஆகியவற்றை உறுதிசெய்து பாதுகாக்கும் ஒரு கருவி என மேற்கத்திய அறிஞர்கள் குறிப்பிடு கின்றனர். அரசியல் யாப்பு என்பது எழுதப்பட்ட ஒரு ஆவணமாகவோ அல்லது மரபுகள் பழக்கவழக்கங்கள் சம்பிரதாயங்கள் ஆகிய வற்றினைக் கொண்ட ஒரு தொகுப்பாகவோ இருக்கலாம். ஆனால் எழுதப்படாத மரபுகள் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றின் விதிகளும் எழுதப்பட்ட விதிகளும் சமமாக அங்கீகரிக்கப்பட்டு கடைப்பிடிக்கப்படும். எனவே, யாப்புறுவாதத்தின்படி அரசியல் யாப்பு என்பது முழுமையாக எழுதப்பட்டதாகவோ முழுமையாக எழுதப்படாததாகவோ இருப்பதில்லை.

மேற்கத்திய அறிஞர்களின் கருத்துப்படி அரசியல் யாப்பிற்கும் அரசாங்கத்திற்குமிடையே வேறுபாடு உண்டு. அதில் யாப்புக்கு அவர்கள் அதிக முக்கியத்துவத்தைக் கொடுத்துள்ளனர். அரசியலமைப்பு போதிய கட்டுப்பாடுகளை உருவாக்கி அரசாங்கத்தைக் கட்டுப்படுத்துகின்றது. இந்தக் கட்டுப்பாடுகள் இல்லையெனில் அரசாங்கம் எதேச்சாதிகாரப் போக்கில் செயற்படலாம். அதன் காரணமாக அரசியல் அமைப்பின் குறிக்கோள்களை அடைய முடியாமல் போகலாம்.

யாப்புறுவாதம் என்பது ஒரு அரசாங்கத்திலேயே சட்டத்துறை, நீதித்துறை, நிர்வாகத்துறை ஆகிய 3 பிரிவுகள் இருக்க வேண்டும் என்றும் அவை ஒவ்வொன்றினதும் அதிகாரங்கள் திட்டவட்டமாக வரையறுக்கப்பட்டிருக்க வேண்டும் என்றும் கூறுகின்றது. அரசியல் யாப்பில் ஏதேனும் மாற்றம் ஏற்படுமாயின் அம்மாற்றம் சட்டதிட்டங் களுக்கு உட்பட்டு அமைதியான முறையில் ஏற்படுத்தப்பட வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் அனைவருக்கும் சட்டத்தையும் சுதந்திரத்தையும் உறுதிசெய்ய சட்டத்தின் ஆட்சி நிலவ வேண்டும். பத்திரிகைச் சுதந்திரம், போச்சுச் சுதந்திரம், உயிர்வாழ் சுதந்திரம் போன்ற சுதந்திரங்களை வலியுறுத் துவதாக இருக்க வேண்டும் போன்ற இன்னோரன்ன விடயங்களை இது வலியுறுத்துகின்றது. எனவே சுருங்கச் சொன்னால் மேற்கத்திய கருத்துப்படி ஜனநாயக அரசியல் முறை செம்மையாகச் செயற்பட வேண்டுமாயின் யாப்புறுவாதம் இன்றியமையாத ஓர் அம்சமாகும்.

தாராண்மை ஜனநாயகம் தோன்றி வளர்ச்சியடைந்து கொண் டிருந்த ஆரம்ப காலப்பகுதியில் மேற்கூறிய ஜனநாயகப் பண்புகளையும் தாற்பரியங்களையும் வலியுறுத்துவதற்கு யாப்புறுவாதம் என்ற எண்ணக்கரு அத்தியவசியமான ஒரு அம்சமாக இடம்பெற்றாலும், தற்காலத்தில் ஏனைய நிறுவனங்களின் வளர்ச்சியின் காரணமாக யாப்புறுவாதம் முக்கியத்துவம் இழந்து காணப்படுகின்றது. இன்று யாப்புக்களிலே எழுத்துருப்படுத்தப்படுகின்ற சகல விடயங்களும் நடைமுறையில் அவ்வாறு இடம்பெறுவதில்லை. அந்தந்த நாடுகளின் சமூக, பொருளாதார, அரசியல், மொழி ஆகியவற்றின் தேவைகளுக் கேற்ப அரசியல் திட்டத்திற்கு வெளிவாரியான செயற்பாடுகளும் இடம்பெறுவதனால் மேற்கூறிய அம்சங்களின் நடைமுறைத்தன்மை பாதிக்கப்படுகின்றது. அதன் மூலம் அரசாங்கங்கள் எதேச்சாதிகாரமாக செயற்படுவதற்கான வாய்ப்பும் அதிகரித்துக் காணப்படுகின்றன. ஆனால், அந்த வாய்ப்பினைக் கட்டுப்படுத்தும் வகையில் அரசியல் யாப்புக்கு மேலதிகமாக பொதுஜன அபிப்பிராயம், அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள், வாக்காளர்கள் போன்றவை வளர்ச்சியடைந்து அரசாங் கத்தின் எதேச்சாதிகாரப் போக்கினைக் கட்டுப்படுத்துவனவாகக் காணப் படுகின்றன. எனவே, தற்காலத்தில் அரசியலமைப்பு என்பது நடை முறைப்படுத்தப்படும் போது உயிர்பெறுகிறது. அதன் தாற்பரியங் களுக்கு எதிரான செயற்பாடுகள் இடம்பெறும் போது அரசியல் அமைப்பு என்பது வெறும் ஆவணமாகவே காட்சியளிக்கின்றது.

அரசியல் அமைப்பு வாதம் ஒரு நாட்டில் இருக்கவேண்டுமாயின் அது பின்வரும் பண்புகளைக் கொண்டிருக்க வேண்டும்.

01. அரசாங்கத்தின் மூன்று துறைகளையும் தெளிவாக பிரித்து அடை யாளப்படுத்தல் வேண்டும்.

02. அரசியல் அமைப்பு ஒன்றை ஏற்படுத்திக் கொள்ளல்.

03. பிரஜைகளின் அடிப்படை உரிமைகளை எடுத்துக்கூறுதல் வேண்டும்.

04. சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்தல் வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மேற்கூறிய நான்கு விடயங்களும் ஒரு நாட்டில் முறையாகப் பேணப்படல் அந்நாடு அரசியல் அமைப்பு வாதத்திற்கு முக்கியத்துவம் வழங்குகின்றது எனலாம்.

அரசியல் அமைப்பு வாதம் இறைமையாளர்களிடமிருந்து மக்களைப் பாதுகாக்க முயற்சிக்கப்பட்ட ஒரு நடவடிக்கையாக இருந்த போதிலும் பொதுசன அபிப்பிராயம், அரசியல் கட்சிகள், அமுக்கக் குழுக்கள் என்பவற்றின் துரிதமான வளர்ச்சியின் காரணமாக இந்த அரசியல் அமைப்பு வாதம் என்பது நலிவடைந்து செல்கின்ற ஒன்றாகக் காணப்படுகின்றது. எவ்வாறாயினும், அரசியல் அதிகாரத்தின் மீதான ஒரு கட்டுப்பாடு என்ற வகையில் ஏனைய புதிய வளர்ச்சிகளோடு அரசியல் யாப்பும் பிரதான இடத்தினைப் பெறுகின்றது.

## நீதித்துறை (Judiciary)

நீதிமன்றம் நிர்வாகம் செய்தல் அரசாங்கத்தின் அடிப்படைப் பணியாகும். பாதுகாப்பும், நீதி நிர்வாகமுமே பண்டைய அரசுகளின் முக்கிய பணிகளாக இருந்தன. தற்கால அரசாங்கங்களில் சட்டமியற்றுதல் நிர்வாகம் செய்தல் சமூக நலப் பணிகள் போன்ற பணிகள் முக்கியத்துவம் பெற்றுவிட்டன. எனினும், நீதித்துறை சரியாகச் செயற்படாவிட்டால் மேற்கூறிய பணிகள் எவ்விதப் பயனும் தராது.

நீதித்துறை ஒன்று செயற்படுகின்றதென்றால் அதன் பொருள் என்னவெனில் சட்டமன்றம் இயற்றிய சட்டங்களுக்கு விளக்கமளித்து வழக்குகளைத் தீர்த்து வைத்து நடைமுறையில் உள்ள சட்டங்களின் அடிப்படையில் நீதி வழங்கும் அமைப்பு நீதித்துறை எனப்படும். நீதித்துறை அரசின் மிக முக்கியமான மூன்றாவது அங்கமாகும்.

### நீதித்துறையின் முக்கியத்துவம்

ஒரு சிறந்த அரசாங்கத்தின் ஆதாரமே அதன் திறமையான நீதித்துறை அமைப்புத்தான் என்று பிரைஸ் பிரபு (Lord Bryce) குறிப்பிடுகிறார். குடி மக்களின் உரிமைகளையும் சுதந்திரத்தையும் பாதுகாக்கும் உயர்ந்த பணியை நீதித்துறை செய்கின்றது. சட்டமன்றம் நிர்வாகத்துறை ஆகியவைகளின் பணிகளைச் சோதனை செய்யும் ஆய்வு கூடமாகவும் நீதித்துறை விளங்குகின்றது. கூட்டாட்சி நாடுகளின் அரசியலமைப்பைப் பாதுகாக்கும் பொறுப்பும் நீதித்துறையிடமே உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதித்துறையின் அமைப்பு

நீதிமன்றங்களின் அமைப்பு அவை செயற்படும் நாடுகளைப் பொறுத்து மாறுபடுகிறது. நாடுகளின் பரப்பளவு மக்கள் தொகை ஆகியவற்றுக்கு ஏற்ப நீதித்துறை அமைக்கப்பட்டு நீதிமன்றங்கள் நிறுவப்படுகின்றன. உலக நாடுகளில் தற்போது இரண்டு வகையான நீதிமன்ற அமைப்புக்களைக் காணலாம்.

ஒரே சீரான பலபடி நிலைகளில் அமைக்கப்பட்ட நீதிமன்றங்கள் ஒரே அமைப்பாக இயங்கும் முறை ஒரு வகை அமைப்பு. இந்தியா, இங்கிலாந்து, இலங்கை ஆகிய நாடுகளில் காணப்படுகின்றது. எடுத்துக் காட்டாக இந்தியாவில் நீதித்துறை அமைப்பானது உச்ச நீதிமன்றம், மாநில உயர் நீதிமன்றங்கள், மாவட்ட நீதிமன்றங்கள், நகர உரிமை யியல் மற்றும் குற்றவியல் நீதிமன்றங்கள், துணை நிலை நீதி மன்றங்கள் என்ற வரிசையில் அமைந்துள்ளது.

சில கூட்டாட்சி நாடுகளில் நீதித்துறை இரு பிரிவு நீதிமன்ற வரிசைகளைக் கொண்டதாக அமைந்துள்ளது. அவை

01. கூட்டாட்சி நீதிமன்றங்கள்
02. மாநில நீதிமன்றங்கள் என்பனவாகும்.

இது இரண்டாவது வகை நீதிமன்ற அமைப்பு ஆகும். எடுத்துக் காட்டாக அமெரிக்க ஐக்கிய நாடுகளின் நீதிமன்ற அமைப்பைக் கூறலாம். இந்நாட்டின் மத்திய சட்டமன்றமான காங்கிரஸின் சட்டங்கள் தொடர்பாக எழும் வழக்குகள், மாநிலங்களுக்கிடையில் ஏற்படும் தகராறுகள் ஒரு வெளிநாட்டுத்தூதர் பற்றிய பிரச்சினைகள் போன்ற வைகளை கூட்டாட்சி நீதிமன்றங்கள் விசாரித்து வழங்கும் மாநில சட்ட மன்றங்களியற்றும் சட்டங்கள் சார்ந்த வழக்குகள், மாநில அளவிலான குடிமக்கள் பிரச்சினைகள் போன்றவற்றை மாநில நீதிமன்றங்கள் விசாரித்து நீதி வழங்கும்.

## நீதித்துறையின் கடமைகள்

நீதித்துறை தன் இயல்பிற்கேற்ப பல வகையான பணிகளைச் செய்கின்றது. நீதி வழங்குதல், சட்டங்களுக்கு விளக்கமளித்தல், மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல், நாட்டின் அரசியலமைப்பைப் பாதுகாத்தல் போன்ற பணிகளையும் வேறுசில பணிகளையும் நீதித்துறை செய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நேரடி நீதி வழங்குதல்

தனி மனிதர்களுக்கிடையே ஏற்படும் பிரச்சினைகளையும். தனி மனிதர்களுக்கும் அரசாங்கத்திற்கும் இடையே ஏற்படும் பிரச்சினை களையும் தீர்த்து வைப்பது நேரடி நீதி வழங்கல் எனப்படும். வழக்குகளை நன்கு விசாரித்து சாட்சியங்களை ஆராய்ந்து பிறகு சரியான சட்டங்களை எடுத்தாண்டு நீதிபதிகள் தீர்ப்பு வழங்குகிறார்கள்.

## ஆலோசனை வழங்குதல்

இந்தியா, கனடா போன்ற நாடுகளில் குடியரத் தலைவர்களுக்குச் சட்டம் பற்றிய ஆலோசனை வழங்கும் பணியை நீதிபதிகள் செய்கிறார்கள். இந்தியாவில் ஏதாவது ஒரு சட்டமோ, சட்டமன்றத்தில் விவாதத்திலிருக்கும் மசோதாவோ பொது முக்கியத்துவம் வாய்ந்த தாக இருக்கக்கூடும் என்று குடியரசுத் தலைவர்கள் கருதினால் அது பற்றி ஆலோசனை வழங்குமாறு உச்ச நீதிமன்றத்திடம் கேட்கலாம். அத்தகைய சமயங்களில் தங்கள் சட்ட அறிவின் துணையைக் கொண்டு தகுந்த ஆலோசனையை நீதிபதிகள் வழங்குவர்.

## அரசியலமைப்பிற்கு விளக்கம் அளித்தல்

சில நாடுகளில் அரசியலமைப்பிற்கு விளக்கம் . அளிக்கும் பணியையும் நீதித்துறை செய்கின்றது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் உச்ச நீதிமன்றம் அந்நாட்டு அரசியலமைப்பிற்கு விளக்கம் அளிக்கின்றது.

## சட்டங்களுக்கு விளக்கமளித்தல்

சட்டத்தின் பொருள் என்ன? எல்லை என்ன? என்பவற்றை நீதி மன்றங்கள் விளக்குகின்றன. பல சட்டங்களுக்கிடையே வேற்றுமை எழும்போது எந்தச் சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்குவது என்பதை நீதிமன்றம் முடிவு செய்கின்றது.

## சட்டம் இயற்றுதல்

சில சிக்கலான வழக்குகளில் எந்தச் சட்டத்தையும் நேரடியாகப் பயன்படுத்த முடியாத நிலை ஏற்படலாம். அத்தகைய வழக்குகளை விசாரிக்கும் நீதிபதிகள் தமது பொதுவான அனுபவ அறிவு, சம நீதி ஆகியவற்றின் அடிப்படையில் தீர்ப்பு வழங்குவர். இத்தகைய வழக்குகளின் தீர்ப்புகள் பிற்காலத்தில் எழக்கூடிய இதே மாதிரியான வழக்குகளை தீர்த்து வைக்க முன்னோடி (Precedents) களாகப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பயன்படுத்தப்படும். இத்தகைய 'முன்னோ'டிகள் காலப்போக்கில் சட்டங்களாகவே மாறியும் விடுகின்றனர். இவை தனி தொகுப்புகளாக நீதிபதிகள் இன்றிய சட்டங்கள் (Judge made laws) என்ற பெயரால் வழங்கப்படுகின்றன.

## மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாத்தல்

மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்கான நீதி ஆணைகள் (Writs) நீதிமன்றங்கள் பிறப்பிக்கலாம். எடுத்துக்காட்டாக, இந்தியாவில் உச்ச நீதிமன்றமும், மாநில உயர் நீதிமன்றங்களும் கீழ்காணும் நீதி ஆணைகளைப் பிறப்பிக்கின்றன.

01. ஆட்கொணர் நீதி ஆணை (Hebeas Corpus)

02. கட்டளை நீதி ஆணை (Mandamus)

03. தடை நீதி ஆணை (Prohibition)

04. தடை மாற்று நீதி ஆணை (Quo - Warrents)

05. உரிமை வினா நீதி ஆணை (Ceriorari)

## அரசியலமைப்பைப் பாதுகாத்தல்

ஒரு நாட்டின் அரசியலமைப்பைப் பாதுகாக்கும் பொறுப்பு நீதித்துறையைச் சார்ந்ததேயாகும். கூட்டாட்சி நாடுகளில் மத்திய சட்ட மன்றமோ, மாநில சட்ட மன்றங்களோ அரசியலமைப்பிற்கு முரணான சட்டங்களை இயற்றினால் அவற்றை அரசியலமைப்பிற்கு புறம்பானவை என்று ஒதுக்கிவிடும் அதிகாரம் அந்த நாட்டில் உச்ச நீதிமன்றத்திற்கு உண்டு. இவ்வதிகாரம் நீதிப்புனராய்வு (Judicial Review) எனப்படுகிறது. அமெரிக்க ஐக்கிய நாடுகள், கனடா, இந்தியா, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் உச்ச நீதிமன்றங்கள் இவ்வதிகாரத்தைப் பெற்றுள்ளன.

## ஏனைய கடமைகள்

தனி நபர் அல்லது நிறுவனங்களின் சொத்துரிமை பற்றிய பிரச்சினைகளில் முடிவு எட்டப்படும் வரை சம்பந்தப்பட்ட சொத்துக்கள் நிர்வகிக்கும் பொறுப்பை நீதிமன்றமே ஏற்றுக்கொள்ளலாம். மைனர் சொத்துக்களுக்குத் தகுந்த பாதுகாவலரை நியமிக்கும் அதிகாரத் தையும் நீதித்துறை பெற்றுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதித்துறை சுதந்திரம்

நீதி வழங்குவதிலும், சட்டங்களுக்கு விளக்கமளிப்பதிலும், எந்த விதமான பயமோ, யாருடைய கட்டுப்பாடோ இன்றி தங்கள் ஆழ்ந்த சட்ட அறிவின் துணையோடும், நடுநிலையோடும், பக்கம் சாராமல் செயற்படுவதற்கும் நீதிபதிகளுக்கு உள்ள உரிமை நீதித்துறை சுதந்திரம் எனப்படும்.

## நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாக்க வேண்டிய அவசியம்

நீதித்துறை சுதந்திரமாகச் செயற்பட்டால்தான் நேர்மை, நியாயம் ஆகியவற்றின் அடிப்படையில் நீதி வழங்க முடியும். நீதிபதிகள் சட்டமன்றத்தினாலோ, செயற் குழுவினாலோ கட்டுப்படுத்தப்பட்டால் பொதுமக்களுக்கு சரியான நீதி கிடைக்காது. அரசாங்கத்தின் விருப்பத்திற்கு எதிராக நீதி வழங்கினால் பதவி பறிக்கப்படும் அபாயமோ, ஊதியம் குறைக்கப்படும் சாத்தியமோ இருந்தால் நீதிபதிகள் நடுநிலைமையோடு சட்டத்தின் அடிப்படையில் நீதி வழங்க முடியாது. நடுநிலையான சுதந்திரமான நீதித்துறை ஒரு நல்ல அரசாங்கத்திற்கு மிகவும் அவசியமானதாகக் கருதப்படுகின்றது. நீதிபதிகள் சுதந்திரமாகப் பயமின்றி தங்கள் மனச்சாட்சிக்கேற்பவும் சட்டத்திற்கும் அரசியலமைப்பிற்கும் உட்பட்டு செயற்பட முடியாவிட்டால் நீதி கிடைப்பது எவ்வகையிலும் சாத்தியமில்லை. எனவே, நீதித்துறை சுதந்திரம் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியமாகிறது.

## நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாக்கும் வழிகள்

நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாக்கும் பல வழிகள் உள்ளன. நீதிபதிகள் எந்த அடிப்படையில் பதவியிலமர்த்தப்படுகிறார்கள்? நீதிபதிகளாகத் தேர்வு செய்யப்படுவதற்கான தகுதிகள் யாவை? நீதித்துறை தனித்து இயங்குகின்றதா? என்பவற்றைப் பொறுத்துத் தான் ஒரு நாட்டில் நீதித்துறை சுதந்திரமாக செயற்படுகிறதா? இல்லையா? என அறிய முடியும்.

மாநிலத்திலிருப்பவர் வேறொரு மாநிலத்திலிருக்கும் சொத்துக் களைப் பற்றி கோரும் உரிமைகள்.

## நீதிபதிகளைப் பதவியிலமர்த்தும் முறை

தற்கால அரசாங்கங்களில் நீதிபதிகளைப் பதவியிலமர்த்துவதற்கு மூன்று விதமான முறைகள் பின்பற்றப்படுகின்றன. அவையாவன:



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

1. மக்களால் தேர்ந்தெடுக்கப்படுதல்.
2. சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுதல்.
3. தகுதி அடிப்படையில் நிர்வாகக் குழுவால் நியமிக்கப்படுதல்.

## மக்களால் தேர்ந்தெடுக்கப்படுதல்

அமெரிக்க ஐக்கிய நாடுகளில் சில மாநிலங்களிலும், சுவிட்சர் லாந்தில் சில கேன்டன்களிலும் (Cantons) நீதிபதிகள் மக்களால் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர். மக்களால் தேர்ந்தெடுக்கப்படும் முறை தான் நீதிபதிகளைத் தேர்ந்தெடுக்கும் முறைகளிலே மிகவும் மோசமானதாகும். ஏனெனில், தேர்ந்தெடுக்கப்படும் நீதிபதிகள் மக்களின் விருப்பத்திற்கேற்ப நீதி வழங்க வேண்டிய கட்டாயம் ஏற்படலாம். மக்களைத் திருப்திப்படுத்தினாலன்றி மறுமுறை தேர்ந்தெடுக்கப்பட முடியாது. அதனால் நீதிபதிகள் நடுநிலைமையோடு செயற்பட முடியாது.

## சட்டமன்றத்தால் தேர்ந்தெடுக்கப்படுதல்

சுவிட்சர்லாந்திலும், ரஷ்யாவிலும் இம்முறை பின்பற்றப்படுகின்றது. சட்டமன்றத்தால் நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்படுவது அதிகாரப் பிரிவினைக் கொள்கைக்கு எதிரானது. இம்முறையில் பதவியேற்கும் நீதிபதிகள் சட்ட மன்றத்தின் விருப்பத்திற்கேற்ப நடந்து கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்படுகிறது. எனவே, சட்ட மன்றத்தால் தேர்ந் தெடுக்கப்படும் முறையும் சிறந்த முறையாகாது.

## நிர்வாகக் குழுவால் நியமிக்கப்படுதல்

இம்முறையில் நீதிபதிகளின் தகுதி, அனுபவம் ஆகியவற்றின் அடிப்படையில் தேர்வு செய்யப்பட்டு நிர்வாகக்குழுத் தலைவரால் பதவியில் அமர்த்தப்படுகின்றார்கள். இம்முறையில் பதவியில மர்த்தப்படும் நீதிபதிகள் யாருடைய உதவியோ அல்லது வாக்கோ பெற்று தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. பதவியில் நிலைத்திருக்க யாரையும் திருப்திப்படுத்த வேண்டிய அவசியமும் இல்லை. எனவே, நீதிபதிகள் நிர்வாகக் குழுவால் நியமிக்கப்பட்டால் நீதித்துறை சுதந்திரமாக இயங்க முடியும்.

## நீதிபதிகளின் பதவிக்காலம்

நீதிபதிகள் சுதந்திரமாகச் செயற்பட அவர்களுக்கு பதவிக்கால பாதுகாப்பு அவசியம். அவர்கள் நியமிக்கப்படாமல் தேர்ந்தெடுக் கப்பட்டால் ஒரு குறுகிய காலத்திற்குத்தான் பதவியிலிருக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குறுகிய பதவிக்காலம் நீதிபதிகள் நடுநிலைமையின்றி செயற்படக் காரணம் ஆகலாம். அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நீதிபதிகள் தேர்ந்தெடுக்கப்பட்ட பின் உயிருள்ளவரை பதவியிலிருக்கலாம். இந்தியாவில் உச்ச நீதிமன்ற நீதிபதிகள் 65 வயதுவரை பதவியிலி! ருக்கலாம். பயமின்றி நடுநிலைமையோடு நீதி வழங்க ஊக்கமளிக்கும். ஆழ்ந்த சட்ட அறிவும், நீதி முன்னோடிகள் பற்றிய அறிவும் பெற நீண்ட பதவிக்காலம் அவசியம். நீதிபதிகள் சிறப்பாகப் பணியாற்றும் போது அவர்களின் பதவிக்காலத்தைக் குறைப்பதற்கு யாருக்கும் அதிகாரம் கிடையாது. நீதிபதிகளுக்கு நீண்ட பதவிக் காலமும், பதவிப் பாதுகாப்பும் அளிக்கப்பட்டால் அவர்கள் சுதந்திரமாகவும், திறமையாகவும் செயலாற்ற முடியும்.

## நீதிபதிகளின் பதவி விலக்கம்

நீதிபதிகளை பதவியிலிருந்து விலக்குவது எளிதாக இருக்கக் கூடாது. தனி மனிதன் அல்லது ஒரு குழுவின் விருப்பு வெறுப்பைப் பொறுத்து நீதிபதிகள் நியமிக்கப்பட்டாலோ அல்லது விலக்கப்பட்டாலோ அவர்கள் நடுநிலைமையுடன் செயற்பட முடியாது. அமெரிக்க ஐக்கிய நாடுகளில் நீதிபதிகள் 'குற்றப் பிரேரணை' (Impeachment) மூலம் பதவி விலக்கு அளிக்கப்படுகிறார்கள். இந்தியாவில் நீதிபதி களை நீக்க வேண்டுமெனில் அதற்கான தீர்மானத்தை பாராளுமன்றம் நிறைவேற்ற வேண்டும். அத்தீர்மானம் பாராளுமன்றத்தின் ஒவ்வொரு அவையிலும் அந்த அவையின் மொத்த உறுப்பினருள் பெரும்பான்மை யோராலும் அவையில் அமர்ந்து வாக்களித்தவருள் மூன்றிலிரண்டு பகுதியினராலும் ஆதரவளிக்கப்பட்டு நிறைவேற்றப் பட்டால் குறிப்பிட்ட நீதிபதிக்கு பதவி விலக்கு அளிக்குமாறு குடியரசுத் தலைவர் கேட்டுக் கொள்ளப்படுவார்.

## நீதிபதிகளின் ஊதியம்

செல்வத்தால் தீய வழிகளில் கவரப்படாமல் இருக்கும் அளவுக்கு ஓர் உயர்ந்த போதுமான ஊதியம் நீதிபதிகளுக்கு அளிக்கப்பட வேண்டும். உயர்ந்த ஊதியம் வழங்கப்படுமானால் அதிக தகுதியும், திறமையும் உள்ளவர்கள் நீதிபதிகளாக நியமனம் பெற முன்வருவார் கள். அதிகப்படியான, போதுமான ஊதியம் நீதிபதிகள் நடுநிலைமை யோடு செயற்பட உதவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீதிபதிகளின் தகுதி

நீதிபதிகள் உயர் தகுதி பெற்றவர்களாக இருக்க வேண்டும். அத்தகையவர்கள் தான் நடுநிலைமையோடும் சுதந்திரமாகவும் செயலாற்றுவார்கள். பொதுவாக ஆழ்ந்த சட்ட அறிவும், அனுபவமும் பெற்றவர்கள்தான் நீதிபதிகளாக நியமிக்கப்படுவர். எடுத்துக் காட்டாக இந்திய உச்ச நீதிமன்ற நீதிபதிகளாக நியமிக்கப்பட வேண்டுமாயின் மாநில உயர் நீதிமன்றங்களில் நீதிபதிகளாக ஐந்து ஆண்டுகளோ அல்லது உச்ச நீதிமன்றத்திலோ, உயர் நீதி மன்றங்களிலோ வழக்கறிஞர்களாக பத்து ஆண்டுகள் பணியாற்றி இருக்க வேண்டும். மேலும், அவர்கள் தங்களது சுதந்திரமான கருத்துக்களுக்குப் பெயர் பெற்றவர்களாக இருக்க வேண்டும்.

## நீதித்துறையின் தனித்தன்மை

நீதித்துறை பிற துறைகளால் கட்டுப்படுத்தப்படக் கூடாது. குறிப்பாக நிர்வாகக்குழு எந்த வகையிலும் நீதித்துறையைக் கட்டுப்படுத்தக் கூடாது. 'எங்கு அதிகாரப் பிரிவினைக் கொள்கை செயற்படுகின்றதோ அங்கு நீதித்துறை சுதந்திரமாக செயற்பட முடியும்' என்று லாஸ்கி என்னும் அரசியலறிஞர் குறிப்பிடுகிறார். தற்கால அரசாங்கங்களின் பணிகள் பெருகிவிட்டன. அதனால் செயலாட்சிக் குழு அதிக அதிகாரம் உடையதாகக் காணப்படுகின்றது. இத்தகைய சூழ்நிலையில் நடுநிலை மையோடு செயற்படும் நீதித்துறையால் மட்டுமே மக்களின் உரிமை களைக் காக்க முடியும். அதற்கு நீதித் துறை சுதந்திரமாக செயற் படுவது அவசியம். நீதிபதிகள் சுதந்திரமாக செயற்பட வேண்டுமாயின் அவர்கள் தகுதி அடிப்படையில் செயலாட்சிக் குழுவால் நியமிக்கப்பட வேண்டும். மேலும், அவர்களுக்கு உயர்ந்த போதுமான ஊதியம் அளிக்கப்படுவதுடன் பதவியில் இருந்து அவர்களை விலக்க மிகவும் கடினமான முறை பின்பற்றப்பட்டால் அதிகாரப் பிரிவினைக் கொள்கை நாட்டில் பின்பற்றப்பட்டால் நீதித்துறை சுதந்திரத்தைப் பாதுகாக்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சட்டம்

ஒரு அரசில் உள்ள அங்கத்தவரின் நடத்தை பற்றிய விதி சட்டம் எனப்படும். சட்டம் என்பது ஒரு வகை கட்டாயப்படுத்தும் முறையாகும். "ஒழுங்கமைந்த மனித சமூகத்தில் மனிதனின் பொது வாழ்க்கையைக் கட்டுப்படுத்துவதற்காக அரசு பிறப்பிக்கும் கட்டளை களில் இடம் பெறும் நிபந்தனைகளே சட்டங்களாகும்". சட்டத்தின் விசேட பண்பு பலவந்தப் படுத்துவதன் மூலம் கீழ்ப்படிவினைப் பெற்றுக் கொள்ளும் திறனாகும். இவ்விடையத்தின் படியே அரசின் சட்டம் அவசியமானது. அது மட்டுமல்ல நவீன அரசுகள் தன்னுடைய பணிகளை சட்டம் என்ற கருவியினூடாக நிறைவேற்றுகின்றது. அமைதியான முறையில் மாற்றங்களை நீதியை நிலைநாட்டுவதற்கு சட்டம் ஒரு கருவியாக உள்ளது. ஆகவே, சட்டம் அரசினுடைய முக்கிய அம்சமாகக் கருதப்படுகின்றது.

MACIVVER (மெக்ஐவரின்) கருத்துப்படி "அரசு சட்டத்தினுடைய தந்தையும் தனயனுமாகும்" சட்டம் அரசை நிர்வாகம் செய்கின்றது. இச்சட்டத்தின் மூலமாக அரசு நிர்வாகம் செய்கின்றது. இவரின் கூற்றின் படி "சட்டம் இல்லையென்றால் ஒழுங்கு இல்லை. ஒழுங்கு இல்லை என்றால் மக்கள் தாங்கள் என்ன செய்கின்றோம். எங்கு செல்கின்றோம் என்று அறியாமல் செயல்பட்டு இறுதியில் மக்களே இருக்கமாட்டார்கள்" என்றார். எனவே சட்டம் இல்லாத சமூகத்தில் அராஜகநிலை காணப் படும். சனநாயக அரசுகளில் விருப்புக்கள் சட்டத்தின் மூலமே வெளிப்படுத்தப்படுகின்றன.

சட்டம் பற்றிய பின்வரும் அம்சங்களை அடையாளப்படுத்துக.

1. சட்டம் அரச அதிகாரத்தினால் பிறப்பிக்கப்படுகின்றது.
2. மனித குலத்தின் சமூக வாழ்க்கையினைக் கட்டுப்படுத்துவதற்காகப் பிறப்பிக்கப்படுகின்றது.
3. பொது சமூக நலன்களின் இலக்காகக் கொண்டு செயற்படுகின்றது.
4. சட்டம் மனிதனுடைய புற நடவடிக்கைகளோடு மட்டும் தொடர்பு கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

5. சிவில் சமூகத்தில்தான் சட்டங்கள் இருக்கும்.
6. சட்டங்கள் அரசினால் அங்கீகரிக்கப்பட்டு, இயற்றப்பட்டு செயற் படுத்தப்படுகின்றது.
7. விதிகளின் தொகுப்புத்தான் சட்டமாகும்.
8. சட்டம் அதிகார பலமுடையது.
9. சமூதாயத்திலே தனியாளர்களின் நடத்தையைக் கட்டுப்படுத்தும்.
10. மாற்றத்திற்குள்ளாகிக் கொண்டிருக்கும் சமூதாயத் தேவைகளுக்கும் அபிலாசைகளுக்கும் ஏற்ப சட்டம் மாற்றத்திற்குள்ளாகும்.

பொதுவாகச் சட்டத்தைப் பற்றி ஒரு தெளிவான வரையறையினைக் காண்பது கடினமானது. அதற்குக் காரணம் "சட்டத்தின் தன்மை பல்வேறாக இடம் பெறுவதாகும். இறைமைக்கோட்பாடுகளின் கருத்துப்படி" சட்டம் என்பது இறையின் ஆணையாகும்" (COMMAND OF THE SOVEREIGN) இறைமை என்பது உச்ச அதிகாரமாகும். அது வரம்பற்றது. இவ்வதிகாரத்தினைப் பெற்றவன் அல்லது பெற்றவர்கள் பிறப்பிக்கும் கட்டளைகள் சட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுகின்றன.

இவ்வாறுவிலக்கணத்தை சட்டத்தளத்திலிருந்து பார்க்கும் போது உன்னதமாகத் தென்பட்டாலும் ஒருதலைப்பட்சமாகவே காணப்படுகின்றது. முறைப்படி சட்டம் இறையின் ஆணையாக இருப்பினும் அவ்வாணைகள் சமூகத்தின் பல்வேறு சக்திகளின் செயற்பாட்டின் விளைவாகும். எனவே தற்காலத்தில் இக்கருத்து வலுவிழந்ததனால் இறைமை பிழைத்துள்ளது என்ற நிலை தோன்றியுள்ளது. சட்டம் என்பது இன்று பல்வேறு மூலாதாரங்களினால் நிச்சயிக்கப்படுகின்றதை அவதானிக்க முடியும்.

1. சட்டத்தின் இயல்பை அரசுடன் தொடர்புபடுத்திப் பார்க்கும் போது அரசின்றி சட்டத்திற்கு இருப்புக் கிடையாது. அரசு இருப்பதாலே மக்கள் சட்டத்துக்கு அடிபணிகின்றார்கள். எனவே சட்டம் என்பது அரசிலிருந்து தோற்றம் பெற்றதும் ஒழுங்கமைக்கப்பட்டதும் ஏற்றுக் கொள்ளப்பட்டதுமான எண்ணங்கள், வழக்கங்கள் போன்றவற்றின் கூற்றாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. வரலாற்று ஆசிரியரின் கருத்துப்படி சட்டம் என்பது இயற்கை விதி களிலிருந்தோ அரசின் கட்டளையிலிருந்தோ தோற்றம் பெறவில்லை. மாறாக மக்களின் சித்தத்திலிருந்துதான் தோன்றுகின்றது. அதாவது, ''சட்டம் என்பது பொதுச்சித்தத்தின் வெளிப்பாடகும்'' என ரூஸோ குறிப்பிட்டார்.

3. சட்டத்தை சமூகத்தோடு தொடர்புபடுத்தி பார்கும் போது ''சட்டம் என்பது மனித வாழ்க்கையை ஒழுங்குபடுத்தும் ஒன்று'' அது சமயம், அறமாண்பு ஆகியவற்றின் பாற்படுகின்றது. ஒரு குறிப்பிட்ட காலத்தில் பலர் ஒன்றிணைந்து சமூக வளர்ச்சிக்கேற்ற சட்டங்களை உருவாக்கி கொண்டனர். எனவே சமூக ஒற்றுமையிலிருந்தே தோற்றம் பெறு கின்றது.

4. தனிமனிதனின் ஒப்புதலே சட்டத்துக்கு ஆதாரமாகும்.

5. மாக்கசியக் கருத்தின்படி ''சட்டம் என்பது ஒருவர்க்கக் கருவி'' இவ்வாறு சட்டம் என்பது பல மூலாதாரங்களில் இருந்து தோற்றம் பெறுகின்றது.

அரசுதான் சட்டத்தில் ஆதாரங்கள் என எளிதாகக் கூறிவிடலாம். ஆனால் சட்டம் தோன்றுவதற்கு பல காரணங்களும் உண்டு:

i. பழக்கவழக்கங்களும், மரபுகளும் பழக்க வழங்கங்கள் அடிப்படை மூலங்களாகும். பிரதான சமூகத்தில் எல்லாவகையான சிக்கல்களும் சச்சரவுகளுமிருந்தன. இவைகள் தீர்த்து வைக்கப்பட்டது அங்கு காணப்பட்ட மரபுகளின் அடிப்படையில்தான் மரபுக்கு எதிராக ஒரு நடத்தை காணப்பட்டால் அது சட்டத்திற்கு விரோதமானதென கணிக்கப்படும்.

ii. மதம் : புராதன சமூகத்தில் சட்டம் மரபாக இருந்தாலும், அதற்கு ஆதரவு மதமேதான் புராதன மக்களுக்கு மதம்தான் சமூக நடத்தையை ஒழுங்குபடுத்தும் ஒரு சக்தியாக இருந்தது. மதத்தின் போதனையின் படி நடக்காவிடில் இறைவன் தகுந்த தண்டனையை தருவானென்ற நம்பிக்கை இருந்து வந்தது. மக்கள் மத போதனைக்கு ஏற்ப நடந்து வந்துள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

iii. நீதி அல்லது நியாய விளக்கங்கள் :
நீதி சமூகத் தொடர்பு சாதனங்கள் நாளடைவில் விருத்தியடைந்து நாளடைவில் சிக்கல்களை ஏற்படுத்திய போது மரபுகள், பழக்க வழக்கங்கள் மதம் சார்ந்த போதனைகள் போதாமல் இருந்தது. அப்போது அவர்கள் தங்களது பொது அறிவைப் பாவித்து மரபுகளுக் கும். பழக்க வழக்கங்களுக்கும் வினாக்கள் கொடுத்து அவற்றை சூழலுக்கு ஏற்ப மாற்றிக் கொண்டனர். இந்த விளக்கங்கள் பின்பு சட்டமாக மாறியது.

iv. அறிவியல் விமர்சகர்கள், எழுத்தாளர்கள், நீதிபதிகள் திறனாய் வாளர்கள் மேற்கொண்ட விமர்சனங்கள் தத்துவ ரீதியில் புதுவிதமான சட்டங்களை உருவாக்கியது.

v. நியாயம் : நியாயம் என்பது நீதி நேர்மையைக் குறிக்கும். ஒரு நீதிபதியின் கடமை நியாயமான தீர்ப்பை வழங்குவதாகும். ஆகவே, சட்டம் தெளிவாக இருக்காத வேளையில் நீதிபதிகள் ஒரு நேர்மையான முறைகளில் தீர்ப்பை வழங்க தகுதியுடையதாக இருக்க வேண்டும். ஆகவே, அவர்களது விளக்கங்கள் சட்டத்தை உருவாக்க தகுதியானதாக இருக்க வேண்டு. தற்கால அரசுகளில் சட்டங்கள் சட்ட சபையிலிருந்து பெறப்பட்டதாகும்.

வாழ்விற்கு இன்றியமையாத சட்டங்களை மட்டும் இயற்றுவார்கள். ஆகவே சட்டசபை சட்டங்கள் தோன்றுவதற்கு ஒரு ஆதாரமாகும்.

சட்டத்தை பின்வருமாறு வகைப்படுத்தலாம் :

1. தேசிய சட்டம்
2. சர்வதேச சட்டம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேசிய சட்டமென்பது ஒரு அரசுக்குள் வாழும் மக்கள் அனைவரையும் கட்டுப்படுத்தும் சட்டம் தேசிய சட்டமாகும். இச்சட்டத்திற்கு எல்லோரும் அடிபணிய வேண்டும். இதை மீறுபவர்கள் கடுமையாகத் தண்டிக்கப்படுவார்கள். அரசாங்கத்தின் இறைமை அதிகாரத்தின் மூலம் தேசிய சட்டம் செயல்படுகிறது.

## தேசிய சட்டம் இருவகைப்படுகிறது

1. அரசியலமைப்புச் சட்டம்

2. சாதாரண சட்டம்

அரசியலமைப்புச்சட்டமென்பது அரசாங்கத்தில் சட்டமன்றம், ஆட்சித்துறை, நீதித்துறை எனும் மூன்று பிரிவுகளில் அமைப்பு, கடமை ஆகியவைகளை நிர்ணயிக்கும் அடிப்படைச் சட்டமாகும். இச்சட்டம் எழுதப்பட்டதாகவோ, எழுதப்படாததாகவோ இருக்கலாம்.

ஒரு அரசியல் நிர்ணய சபை மூலம் வரையப்பட்டிருந்தால் அது எழுதப்பட்ட சட்டமென்றும், வழக்கங்கள் மரபுகள் போன்றவற்றின் அடிப்படையில் காலப்போக்கில் வளர்ச்சியடைந்ததாக இருந்தால் அவை எழுதப்படாத சட்டமாக இருக்கும்.

## சாதாரண சட்டம் :

அரசு பணியாற்றும் போது பின்பற்றும் சட்டங்களே இவையாகும். மக்களுக்கும் அரசுக்கும் இடையிலுள்ள தொடர்பினையும் ஒழுங்கு படுத்துகிற சட்டமே இச் சட்டமாகும். நாட்டின் சட்டமன்றமே நாட்டுக்கு தேவையான சட்டங்களை இயற்ற முடியும். சாதாரண வழக்குகளை விசாரிப்பதற்கு நீதி மன்றங்கள் இச்சட்டங்களை பின்பற்றுகின்றன. சாதாரண சட்டத்தை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. பொதுச் சட்டம் 2. தனியார் சட்டம்

**பொதுச் சட்டம் :** பொதுச்சட்டம் என்பது தனிமனிதனுக்கும், சமூதாய அரசுக்கும் இடையேயுள்ள தொடர்பினை ஒழுங்கு படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட சாதாரண சட்டமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனியார் சட்டம் : தனியார் சட்டம் என்பது தனிநபருக்கும், இன்னொரு மனிதனுக்குமிடையிலுள்ள தொடர்பினை ஒழுங்குபடுத்துவதற்கு வரையறுக்கப்பட்ட சட்டமாகும். அரசுக்கும். தனிமனிதனுக்குமிடையே உள்ள தொடர்பினை பொதுச்சட்டம் ஒழுங்குபடுத்துவது போல் தனிநபர்களுக்கு மிடையிலுள்ள தொடர்புகளை தனியார் சட்டம் ஒழுங்குபடுத்துகிறது. ஒவ்வொரு தனி மனிதனுக்கும் சட்டத்தின் மூலம் உரிமைகள் அளிக்கப் படுகின்றன. இவ்வுரிமைகள் முழுமையான ரீதியில் அவை பாவிக்கக் கூடியவை என்று சொல்ல முடியாத ஒரு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டிருந்தால் தனி மனிதன் இந்த உரிமைகளை பெற்றுக்கொள்ள வேண்டும்.

Eg : ஒரு இனத்தின் உரிமை தனிநாடு அமைப்பதென்று கூறினால் அவ்வினம் ஒரு சில நிபந்தனைகளுக்கு உட்பட்டிருக்கும். அதாவது, அவன் தேடிய தனிநாடு நாட்டின் நில ஒற்றுமையையும், இறைமையை யும் பாதுகாத்துக் கொண்டே தனி நாட்டைப் பெறவேண்டும்.

**பொதுச்சட்டம் என்பது இரண்டு வகைப்படும் :**


1. நிருவாகச் சட்டம்
2. பொதுச் சட்டம்

நிர்வாகச் சட்டமென்றால் நிர்வாக அதிகாரிகளின் நிலைகளையும் அவர்களின் கீழுள்ள பணியாளர்களுடன் கொண்டிருக்கவேண்டிய தொடர்புகளை ஒழுங்குபடுத்தும்.

பொதுவான சட்டமென்பது அதிகாரிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தி பொதுமக்களுக்கு ஒழுக்கத்தை ஏற்படுத்த பயன்படுத்தப் படுகின்றது. ஆகவே, சுருங்கக் கூறின் பின்வருமாறு சட்டத்தின் வகைகளைக் காட்டலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## சர்வதேச சட்டம்

உலகின் பல அரசுக்கும் ஒன்றுடன் ஒன்று சேர்ந்து ஏற்படுத்திக் கொள்ளும் தொடர்புகளை நிர்ணயிக்கும் சட்டம் சர்வதேச சட்டம் எனப்படும். தேசிய சட்டம் அரசின் வலிமையில் ஆக்கப்படுவது போல் சர்வதேச சட்டம் வலிமையின் கீழ் ஆதரவைப் பெறுவதில்லை. அதாவது, சர்வதேசச்சட்டத்திற்கு அடிபணியுமாறு எந்த அரசையும் கட்டுப்படுத்த முடியாது. ஆனால், ஐ.நா. சபை இன்று சர்வதேச சட்டத்தை அமுல் படுத்தும் சக்தியை கொண்டுள்ளது. இச்சட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு அரசும் சுதந்திர இறைமையுள்ள நாடு என்று கணிக்கப் படுகின்றது. ஆகவே, பெரிய நாடாக இருந்தாலும் சரி, சிறிய நாடாக இருந்தாலும் சரி ஒவ்வொரு நாடும் சுதந்திர நாடாக இயங்க சர்வதேச சட்டம் அனுமதியளித்துள்ளது. ஒரு பெரிய நாடு ஒரு சிறிய நாட்டை பலாத்காரமாக ஆக்கிரமிக்கும் போது அந்நடத்தை சர்வதேச சட்டத்திற்கு விரோதமானதாகும். இப்படி ஏற்படும் போது ஐ.நா. சபை வழக்கு சொல்லி விசாரணை செய்து தண்டணை விதிக்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்குமிடையிலான தொடர்பு

சட்டத்தின் தன்மையை கவனத்தில் எடுக்கும் போது சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்குமிடையிலான தொடர்பும் பிரதான இடத்தினைப் பெறுகின்றது. இத் தொடர்பின் மூலம் சட்டம் இறையின் ஆணையா அல்லது வேறுபட்ட தன்மையுடையதா என்பதை நாம் அறியலாம். சட்டம் சமுகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட பொது நலனுக்கு ஏற்புடையதாக இல்லாவிடில் அச்சட்டத்தில் செல்லுபடியாகும் தன்மை பிரச்சினைக்குரியதாக மாறிவிடும். Montesgue இன் கருத்துப்படி சட்டம் என்பது நிலமைகளின் தன்மையால் தோன்றும் கட்டாயத் தொடர்புகள் ஆகும். அரிஸ்டோடில் மனிதனின் சிறப்பான வாழ்க்கையை அபிவிருத்தி செய்யவே அரசு செயற்படுகின்றது என்றும் அரசின் சட்டங்களின் நோக்கமும் அதுவாகவே இருக்கின்றது எனவும் குறிப்பிடடார். இவ்வாறு மனித சமூதாயத்தின் நன்மை கருதியே சட்டத்தின் செயற்பாடு இடம் பெறுகின்றது. என்பதை அறியலாம்.

சட்டத்திற்கான மனிதனின் அடிபணிவு சட்டத்தின் இறைமை தன்மையால் அன்றி சமூக ஒழுக்கத்தோடு தொடர்பான வகையிலோடு இடம்பெறுகின்றது. இன்று பெரும்பாலான மனிதர்கள் தன்டணைக்குப் பயந்து அன்றி சமூக ஒழுக்கத்தின் மீதுள்ள பயத்தின் காரணமாகவும் சட்டமென்பது சமூகத்திற்கும், தனக்கும் நன்மை பயக்கின்றது என்று கருதுவதினாலேயே சட்டத்திற்கு அடி பணிகின்றான். அதன்படி சட்டத்திற்கும் சமூக ஒழுக்கத்திற்குமிடையில் நெருங்கிய தொடர்பு காணப்படுவதால் சட்டம் பற்றிய இறைமைக் கோட்பாடு பொருளற்று விளங்குகின்றது.

சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்குமிடையில் ஒற்றுமைகளும் காணப்படுகின்றன. சட்டம் ஒழுக்கத்திலிருந்து பூரணமாக வேறுபட்டிருக்க முடியாது. சட்டமும் ஒழுக்கமும் ஒரே வகையில் தோன்றலாம் ஒரே நோக்கம் காணப்படலாம். ஆனால், அவற்றின் அபிவிருத்தி வேறுபட்ட வகையில் இடம் பெறலாம். நடைமுறையில் காணப்படும் ஒழுக்க முறையின்படி ஒழுங்கமைந்திருக்கும் நல்லது கெட்டது பற்றிய ஒப்புதல்கள் நிகழும், சட்டத்தினால் வெளிக் கொணரப்படலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அவையிரண்டினதும் நோக்கம் ஓர் அரசினதும் பிரஜைகளினதும் ஒழுக்க ரீதியான வாழ்க்கையை அபிவிருத்தி செய்வதாகும். அதனால் சட்டமும் ஒழுக்கமும் ஒன்றையொன்று ஆதரித்து நிற்கின்றன. ஆனால், இறைமைக் கோட்பாடு அரசின் அதிகாரத்தை உறுதிப்படுத்தும் வகையிலேயே சட்டம் பற்றிய விளக்கத்தை முன்வைக்கின்றது. அங்கு சமூக ஒழுக்கத்திற்கும் எந்தவித முக்கியத்துவம் வழங்கப்படுவதில்லை அதனால், சட்டம் பற்றிய இறைமைக் கோட்பாடு தற்காலத்தில் பலம் இழந்துள்ளது.

ஒழுக்கக் கோட்பாடுகள் வலியுறுத்தும் சிறப்பான சமூக வாழ்க்கையை உறுதிப்படுத்தும் நோக்கிலேயே அரசு சட்டங்களை பிறப்பிக்கின்றது. இதன்படி சட்டத்தைப் பிறப்பித்தல் ஒழுக்கக் கோட்பாடுகள் பாதிப்புச் செலுத்துகின்றன.

உதாரணமாக: ஹென்றி மெயினின் கருத்துப்படி மனிதனின் ஒழுக்க ரீதியான எண்ணங்கள் அரச சட்டங்களுக்கு அடிப்படையாக அமைகின்றன. ஜேலினெக் என்பவரின் கருத்துப்படி மனிதரின் சமூக இருப்போடு தொடர்பான ஒழுக்கங்களும் சித்தார்த்தங்களும் அரச சட்டங்களின் மூலங்களாக அமைகின்றன. வூட்டோ வில்சனின் கருத்துப்படி சட்டம் என்பது சமூகத்தில் வேரூன்றியுள்ள பழக்கவழக்கங்களினதும் எண்ணங்களினதும் அத்தியவசியப் பகுதியாகும்.

## சட்டத்திற்கும் ஒழுக்கத்திற்கும் இடையிலான வேறுபாடு

1. சட்டம் அரசியல் சார்ந்ததாகயிருக்கும் ஆனால், ஒழுக்கம் பெறுமதிகளைச் சார்ந்த ஒரு விடயமாகும்.
2. சட்டம் நிச்சயமானதும் தெளிவானதுமான தன்மையைக் கொண்டிருக்கும் ஆனால் ஒழுக்கம் மனிதனின் வெளிவாரியான செயற்பாடுகளை மாத்திரமே கட்டுப்படுத்துகின்றது.
3. அரச சட்டம் ஆணையதிகாரத்தை அடிப்படையாகக் கொண்டிருப்பதோடு அதனை மீறினால் தண்டனைக்குட்பட வேண்டி ஏற்படும் ஆனால் ஒழுக்க ரீதியான சட்டங்கள் மீறினால் அவ்வாறு தண்டிக்கப் படுவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அரச சட்டம் மனிதரின் வெளிவாரியான சமூக இருப்பை மட்டுமே கட்டுப்படுத்தும் ஆனால், ஒழுக்க ரீதியான சட்டங்கள் மனிதரின் உள்வாரியானதும் வெளிவாரியானதுமான இருப்பைக் கட்டுப் படுத்தும்.
5. ஒழுக்கத்தின் மூலம் அங்கீகரிக்கப்படாத சில செயற்பாடுகள் அரசின் மூலம் அங்கீகரிக்கப்படுகின்றது. சிலவேளை மரண தண்டணையை விதித்தும் ஒழுக்கத்திற்கு எதிரானதாயினும் அரச சட்டம் அதனை ஏற்றுக் கொள்வதில்லை.
6. சட்டம் என்பது அகில ரீதியான பொதுத் தளத்தைப் பெற்றிருக்கும் போது ஒழுக்கக் கொள்கைகள் சமூகத்திற்கு சமூகம் வேறுபடும்.

## சட்டமும் சுதந்திரமும்

சட்டத்தின் தன்மையை ஆராயும் போது இடம்பெறும் பிறிதொரு பிரச்சினை சட்டத்திற்கும் சுதந்திரத்திற்கும் இடையிலான தொடர்பாகும். குறிப்பாக "அராஜகவாதிகளும் சிண்டிகல் (sindical) வாதிகளும்" சட்டத்தின் மூலம் மனிதனின் சுதந்திரம் அழிவுறுகின்றது என்று குறிப்பிடு கின்றனர். அவர்கள் அரசை அழிப்பதன் மூலமே தனிமனிதனும் சமூகமும் சுதந்திரமாக தமது நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வழியினை ஏற்படுத்திக் கொடுக்கலாம். என்று நம்பினர். இவர்களும் மாக்ஸியவாதிகளைப் போன்று அரசை ஒரு வர்த்தக கருவியாகவும் பலவந்த சக்தியாகவுமே கருதினர். அதனால் சட்டம் அரசாங்கம் ஆகிய யாவற்றையுமே மனிதனின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் தாபனங்களாகவே கருதினர். அதனால், சுதந்திரத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமாயின் அதற்கு வரையறைகள் இருக்கக்கூடாது என்று அவர்கள் கூறினர். வெளிவாரியான வரையறைகளை நீக்குவதன் மூலமே மனிதன் தனது பூரண அபிவிருத்தியை அடைந்து கொள்ள லாம். லிபரல் பாதக் கருத்து தோன்றிய ஆரம்ப காலத்தில் கூட பூரண சுதந்திரம் பற்றிய கருத்து வலியுறுத்தப்பட்டதுடன் சுதந்திரத்தின் மீது எதுவித கட்டுப்பாடுகளும் இருக்கக் கூடாது என்று கூறப்பட்டது. உண்மையில் தற்கால அரசுகளில் சட்டம் என்பது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரத்தின் மீது ஒரு வரையறையாக இருப்பதன் காரணமாகவே இவ்வாறான கருத்துக்கள் காணப்படுவதுடன் அதற்கு எதிரான கருத்துக்களும் முன்வைக்கப்பட்டுள்ளன. முதலாளித்துவ சமூகத்தில் அரசு என்பது ஒரு வர்க்கத்தின் கருவியாக இருக்கும் நிலமையை பாதுகாக்கும் நோக்கில் மனித சுதந்திரத்தின் மீது சட்டரீதியான சில வரையறைகள் விதிக்கப்படுகின்றன. ஆனால், இந்த வரையறைகள் ஒரு பகுதியினருக்கு மட்டுமே பயனை ஏற்படுத்துவதனால் அந்நிலையை எதிர்க்கின்றனர். எனவே, வரையறையற்ற சுதந்திரமே சமூக வளர்ச்சிக்கு அத்தியாவசியமானது என்பது அவர்களது வாதமாகும்.

நவலிபரல் வாதம் பூரண சுதந்திரத்தை மறுக்கின்றது. ஜோன் ஸ்டுவட்மில்ஸ், அடம்ஸ்மித் போன்றோர் சமாதானத்தையும் ஒழுங்கையும் நிலை நாட்டுவதற்காக மனித சுதந்திரம் வரையறுக்கப் பட வேண்டும் என்று கூறினர். அவர்கள் சட்டத்தினூடாக இடம் பெறு கின்ற வரையறைகளையே நியாயப்படுத்தினர். சட்டத்தினால் விதிக்கப் படும் கட்டுப்பாட்டினூடாக மனிதன் சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான வாய்ப்பினைப் பெறுகின்றான்.

வரையறையில்லாத பூரண சுதந்திரம் என்பது சுதந்திரமற்ற நிலைக்கு சமனாகும். சட்டத்தின் நோக்கம் சமூகத்தின் பொது நலனாகும். அதனால், சட்டத்தினால் விதிக்கப்படும் கட்டுப்பாடுகளின் மூலம் தனிமனித வாழ்க்கையை முழுச் சமூகத்துடன் சமப்படுத்துவதே எதிர்பார்க்கப்படுகின்றது. சமூகத்தில் ஏனையவர்களுக்குப் பங்கம் ஏற்படாத வகையில் அவனது தனித் தன்மையை நிலைபெறச் செய்வதே அக்கட்டுப்பாடுகளின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது. அதனால், ஒருவன்தான் வாழும் பொதுச் சமூகத்தின் தன்மைக்கு ஏற்ற வகையில் எதைச் பொதுச் சமூகத்தின் நன்மைக்கு ஏற்ற வகையில் அதைச்செய்ய வேண்டும் எதைச் செய்யக்கூடாது என்று சட்டம் குறித்து நிற்கின்றது.

இக்கருத்தின் படி சட்டமே சமூக அபிவிருத்தியின் அடிப்படை யாகும்.அச்சட்டத்தின் மூலம் ஒரு நிலையான சமுகத்தை ஏற்படுத்தலாம். சட்டம் சமூகத்தின் பழக்க வழக்கங்களுக்கும் ஒரு தொடர்ச்சியான தன்மையைப் பெற்றுக் கொடுக்கின்றது. அதனால் தான் நாம் இன்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பழக்க வழக்கங்களையும் சம்பிரதாயங்களையும் சட்டங்களாக ஆக்கிக் கொள்ள விரும்புகின்றோம்.

சட்டம் என்பது சமூக அபிவிருத்தியுடனேயே வளர்ச்சியடைந்து வந்துள்ளது வேறுவகையில் சொன்னால் எங்கு சமூக அபிவிருத்தி இடம் பெற்றுள்ளதோ அங்கு சட்டமும் அபிவிருத்தி அடைந்துள்ளது. அதனால், மனித வாழ்க்கையின் மீது கட்டுப்பாடுகளும் பரிசீலனைகளும் இடம்பெற்று வந்துள்ளது. அந்தக் கட்டுப்பாடுகளும் பரிசீலனைகளும் இன்றி மனித சுதந்திரத்தை பாதுகாக்க முடியாது. நாகரீகமொன்றையோ இனமொன்றினையோ அவ்வாறான கட்டுப்பாடுகளின்றி கட்டியெழுப்ப முடியாது. கட்டுப்பாடில்லாத ஒரு சமூகம் இடையனில்லாத மந்தைக் கூட்டத்திற்கு ஒப்பாகிவிடும். மனிதனிடத்தில் காணப்படும் மிருகத் தன்மையை பரிசீலனைக்கு உட்படுத்தினால் மாத்திரமே அவனை நல்வழிப்படுத்தலாம். மனித சுதந்திரத்தின் மீது வரையறைகளையும் பரிசீலனைகளையும் ஏற்படுத்தாமல் அவனது சுதந்திரத்தினை சமூகத்திற்கு ஏற்றவகையில் பொருளுடையதாக்க முடியாது. அவ்வாறான நிலையிலேயே முன்னேற்றத்தினைக் காணலாம். சமூகத்தின் உயர் நலனை இவ்வாறு மேம்படுத்தாமல் மனிதனின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் உறுதிப்படுத்த முடியாது. அதனால், சட்டமே உரிமைகளையும் சுதந்திரங்களையும் தோற்றுவிக்கின்றது. அச்சட்டமே அவற்றை உத்தரவாதப்படுத்தியும் பாதுகாத்தும் தருகின்றது. சகல மனிதரும் சமூகத்தில் தனது தனித் தன்மையை அபிவிருத்தி செய்து கொள்வதற்கான வாய்ப்பினையும் சட்டம் பெற்றுக் கொடுக்கின்றது.

சமூகத்தில் சகலரும் அறிந்த வகையில் தெளிவான சட்டங்கள் இருக்கும் போது நியாயத்தினை நிலைநாட்டலாம். சமூகத்தில் மாற்றம் ஏற்படும் போது சட்டத்தின் மூலமே அம்மாற்றத்திற்கு தேவையான அமைதிச் சூழ்நிலை ஏற்படுத்திக் கொடுக்கப்படுகின்றது. எனினும் சட்டமானது நியாயத் தன்மை பொருந்தியதாகவும் சமூக அபிப்பிராயங்களுக்கு இடம் கொடுப்பதாகவும் இருக்கும் போது மட்டுமே மேற்கூறிய நிலமைகள் தோன்றும். எனவே, நியாயமான தெளிவான சட்டங்கள் இருக்கும் போது சமுகமாற்றம் என்பது அமைதியான முறையில் ஏற்படும். அவ்வாறு இல்லாவிடில் பலவந்தமும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அழிவும் ஏற்பட்டு அராஜக நிலை தோன்றிவிடும். அராஜக நிலையில் சட்டமோ சுதந்திரமோ இருக்கமாட்டாது. எனவே, சட்டம் என்பது பொதுஜன அபிப்பிராயத்தினை முறையான வகையில் வெளிப்படுத்து மாயின் மாற்றங்களும் அமைதியான முறையில் ஏற்படும். சட்டம் சமுகத்தில் ஒழுங்கையும் அமைதியையும் நிலைநாட்டும் போது சமூக அவிவிருத்தி ஏற்படும். அச் சந்தர்பத்தில் மனிதன் தனது சுதந்திரத்தை அனுபவிப்பதற்கான வாய்ப்புக்களையும் தடையின்றிப் பெற்றுக் கொள்வான். எனவே, சட்டம் என்பது சுதந்திரத் தின் மீது வரையறையாகவன்றி சுதந்திரத்தை அனுபவிப்பதற்கு தேவையான வாய்ப்பினையும் ஏற்படுத்திக் கொடுக்கின்றது.

## சட்டத்திற்கு மனிதன் ஏன் அடிபணிகின்றான்?

01. சட்டத்தின் தன்மை பற்றிய ஆய்விலே சட்டத்திற்கு மனிதன் ஏன் அடிபணிகின்றான் என்ற விடயமும் பிரதான இடத்தினை பெறுகின்றது. இது பற்றி நிச்சயமான கருத்துக்களைக் கூறுவது கடினம். அடிபணிவினைப் பாதிக்கின்ற காரணியை நிச்சயப்படுத்திக் கூறமுடியாது. சமூகத்தில் வாழும் மனிதருக்கு மனிதர் வேறுபட்ட மனப்பாங்குகளையும் கருத்தையும் நம்பிக்கையையும் வைத் திருப்பர். அதற்கேற்ப சட்டத்திற்கான அடிபணிவும் மனிதனுக்கு மனிதன் வேறுபடலாம். அடிபணிவதற்கான காரணம் அரசியல் ரீதியானதாகவோ ஒழுக்கவியல் ரீதியானதாகவோ, சமூகவியல் ரீதியானதாகவோ அல்லது உளவியல் ரீதியானதாகவோ இருக்கலாம். இந்தக்காரணி அரசியல் அதிகாரத்தன்மை, சமூகத்தின் நாகரீகப்பண்பு, மனிதனின் அறிவுமட்டம் போன்றவற்றில் மனிதனுக்கு மனிதன் நாட்டுக்கு நாடு வேறுபட லாம். அதனால், சட்டத்திற்கான அடிபணிவு சம்பந்தமான கருத்து அரசியலிலே வாதப்பிரதிவாதத்திற்குப்படுகின்ற ஒரு கருத்தாகக் காணப்படுகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

02. சட்டத்திற்கான அடிபணிவு பற்றிய விளக்கத்திலே பிரபல்ய மானதும் சர்ச்சைக்குரியதுமான ஒரு விளக்கம் இறைமைக் கோட்பாட்டாளர்களினால் முன்வைக்கப்பட்டது. அவர்களது கருத்துப்படி சட்டமென்பது இறையின் ஆணையாகும். அதனால், ஒவ்வொரு மனிதனும் அச்சட்டத்திற்குக் கட்டாயமாக அடிபணிய வேண்டும். அடிபணிய மறுத்தால் இறைமை அவனைத் தண்டித்தும் விடும். இங்கு அடிபணிவு என்பது மனிதன் மீது சுமத்தப்பட்ட ஒரு கட்டாயக் கடமையாகவே கருதப்படுகின்றது. ஏனெனில், முறைப்படி இறைமையானது கட்டுப்பாடற்ற அதிகார மாகும். அதனைக் கேள்விக்கிடமாக்க முடியாது. ஒவ்வொரு வனும் அவ்விறைமைக்கு அடிபணிய வேண்டியவன். இக்கருத்தின் படி அடிபணிவிற்கு அரசியல் காரணியே அடிப்படையாக அமைகின்றது. என்று கூறப்படுகின்றது. ஆனால் அரசியல் கட்டுப் பாடு பற்றிய இக் கருத்து ஒருதலைப்பட்சமானது. அது யதார்த்த நிலைக்கு ஒவ்வாதது. உண்மை நிலைக்குப் பொறுந்தாதது. ஏனெனில் அடிபணிவு என்பது அரசியல் காரணியால் மட்டுமன்றி ஏனைய காரணிகளாலும் இடம் பெறுகின்றது. எந்தவொரு சமூகத்திலும் இது உண்மையாகும். ஆகவே தற்காலத்தின் சட்டம் என்பது இறையின் ஆணை என்ற கருத்து வலுவிழந்து விட்டது.

03. தற்கால சமூகத்திலே சில மனிதர் தண்டனையின் மீதுள்ள பயத்தின் காரணமாகவும் சட்டத்திற்கு அடிபணிகின்றான். இங்கு பெரும்பாலும் அரசியல் அதிகாரத்தின் மீதுள்ள பயமே அவ்அடி பணிவிற்கு அடிப்படையாக அமைகின்றது. சூதாடுதல், களவெடு த்தல் போன்ற குற்றங்களைப் புரிந்தால் சட்டம் முறைப்படி என்னைத் தண்டித்து விடும் என்று சிலர் கருதுவதால் சட்டத்திற் கான அடிபணிவு ஏற்படுகின்றது. ஆனால், சமுகத்தில் பெரும்பாண் மையோரின் நிலை அவ்வாறு இடம் பெறுமா? தண்டனை மீதுள்ள பயணத்தின் காரணமாக குற்றங்கள் புரியாமல் இருப்பவர்களைப் பொறுத்து இது உண்மையாயினும் சகலருக்கும் இக்கருத்து பொருந்தமாட்டாது. மேலும், பலர் வேறும் காரணிகளினால் சட்டத்துடன் உடன்பட்டு சட்டத்திற்குக் கீழ்படியலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

04. சட்டத்திற்கான அடிபணிவில் சமூகக் காரணி பிரதான இடத்தினைப் பெறுகின்றது. அங்கு சட்டம் இறையின் ஆணையாக இருப்பதனாலோ தண்டனையின் மீதுள்ள பயத்தினாலோவன்றி தனது சமூக அந்தஸ்தின் மீது வைத்திருக்கின்ற நம்பிக்கை அதிகமானோர் மீது பாதிப்புச் செலுத்தலாம். தான் குற்றம் புரிந்து தண்டிக்கப்பட்டால் சமூகத்தினால் தூற்றப்படுவேன் என்றும் அதனால் தனது சமூக அந்தஸ்து பாதிக்கப்படும் என்றும் ஒருவன் கருதும் பொழுது அவன் சட்டத்தை மதிக்க முற்படுவான். நாகரீக சமூகமொன்றில் வாழும் பெரும்பாலான மனிதர்களைப் பொறுத்து இது உண்மையாகும். பொதுவாக சமூக ஒழுக்கங்களுக்குப் பயந்து மனிதன் தனது நடத்தையை ஒழுங்குபடுத்திக் கொள்ள முனையும் பொழுது சமூக அந்தஸ்து பிரதான இடத்தினைப் பெறுகின்றது.

05. உளவியல் காரணியும் சட்டத்திற்கான அடிபணிவைத் தூண்டுகிறது அதிலிருந்து சட்டத்திற்கு அடிபணிவது தமது வழக்கம். அதிலிருந்து நாம் மீறக் கூடாது என்று கருதும் பொழுது சட்டத்திற்கான அடிபணிவு இடம்பெறுகின்றது. பரம்பரையாக நம்து முன்னேற்றங்கள் சட்டத்திற்கு அடிபணிந்து வந்துள்ளனர் என்ற பழக்கமும் இங்கு பாதிப்புச் செலுத்தலாம். சமூகங்களில் பல வருடங்களாக நிலைபெற்றிருக்கும். பழக்க வழக்கங்களும் காணப்படுகின்றன. அவை அரசு தோன்றுவதற்கு முன்னரும் பின்னரும் இடம்பெற்றிருப்பதுடன் மனிதன் அவற்றை வழமையாக மீறாமல் பின்பற்றி வந்துள்ளான். காலப்போக்கிலே அப்பழக்க வழக்கங்கள் சட்டங்களாக உறுதியடைந்த பின்னரும் முன்னைய வழக்கத்தின் காரணமாக அடிபணிவு இடம் பெறுகின்றது.

06. சட்டம் சம்பந்தமாக மனிதனிடத்திலே தோன்றும் நம்பிக்கையும் அடிபணிவினை ஏற்படுத்துகின்றது. மனிதர் தமது நலன்களைப் பெறும் வகையில் அமைதியான சூழ்நிலையை சட்டம் ஏற்படுத்தி வைக்கின்றது என்றும் சமூகப் பெறுமதிகள் சட்டத்தில் அடங்கியிருக்கின்றன என்றும் சட்ட அமைப்புக்களும் தனி மனிதர்களுக்குமிடையே ஏற்படும் பிணக்குகளை சட்டம் தீர்த்து வைக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்றும் சமூகத்தின் குறிக்கோள்களையும் தனது சொந்தக் குறிக்கோள்களையும் அடைவதற்கான வாய்ப்பினை சட்டம் ஏற்படுத்திக் கொடுக்கின்றது என்றும் மக்கள் கருதுவார்களாயின் சட்டத்திற்கான அடிபணிவு ஏற்படுகின்றது. இக்கருத்து சட்டத்திற்கு புதியதொரு பரிமாணத்தைக் கொடுக்கின்றது. எனவே, சட்டத்தை மீறினால் தண்டனை கிடைக்கும் என்பதற்காகவன்றி சட்டத்தைத் தழுவுவதால் சமூகத்திற்கும் தனக்கும் பயன் ஏற்படுகின்றது என்பதனாலும் பெரும்பாலானோர் சட்டத்திற்கு அடிபணிகின்றனர்.

07. தற்கால ஜனநாயக சமூகங்களில் இறையின் ஊற்று மக்களாகும். அம்மக்களே இறைமையதிகாரத்தைப் பயன்படுத்தி சட்டத்தினைத் தோற்றுவிக்கின்றனர். ரூசோவின் கருத்துப்படி சட்டமென்பது பொதுச் சித்தத்தின் வெளிப்பாடு. எனவே, சட்டங்கள் தம்மிடமிருந்தே பிறக்கின்றன என்று மக்கள் கருதுவதனால் அவர்கள் சட்டத்திற்கு அடிபணிய விளைகின்றனர். அக்கருத்து தற்கால ஜனநாயக சமூகங்களில் பலம் பெற்றுக் காணப்படுகின்றது.

# சட்டத்தின் ஆட்சி

அரசறிவியலில் சட்டத்தின் ஆட்சி என்ற விடயம் மிக முக்கியமான ஒன்றாகக் கருதப்படுகின்றது. நவீன அரசுகளில் இந்த சட்டத்தின் ஆட்சி பற்றி அதிகளவில் பேசப்படுகின்றது. ஏனெனில், அனேகமான நாடுகள் எதிர் நோக்குகின்ற அதிகமான பிரச்சினைகளுக்கு இந்த சட்டத்தின் ஆட்சி இல்லாமையே அடிப்படைக் காரணமாக இருக்கின்றது. ஒரு நாட்டில் வாழுகின்ற எல்லாமக்களும் அந்த நாட்டின் சட்டத்தின் முன்னி லையில் சமமாகக் கருதப்படுவார்களாயின் அங்கு சட்டத்தின் ஆட்சி காணப்படுகின்றது எனலாம். எதுவிதமான இன, மத, மொழி, பிரதேச, பால் வேறுபாடுகளுமின்றி அந்நாட்டில் வாழ்கின்ற எல்லோரும் சமமான வர்ளாக மதிக்கப்பட வேண்டும். ஏனெனில், அரசு என்பது சமூக நலன் பேணுகின்ற ஒரு அமைப்பாகும். சமூக நலன்களுக்காக வேண்டி சட்டங்களை இயற்றுகின்ற போது அந்த சட்டங்கள் எல்லோராலும் மதிக்கப்பட வேண்டும். சட்டத்திற்கு யாவரும் அப்போதுதான் அடிபணி வார்கள். சட்டத்தை மீறுகின்றபோது அவர்கள் தண்டிக்கப்படுகின் றார்கள். சட்டம் சமூகத்தின் பெரும்பான்மையோரின் நன்மைக்காக



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்றப்படுவதாலேயே பெரும்பான்மையானோரின் நலன்கருதி சட்டத்தை மறுக்கின்ற சிறுபான்மையினர் தண்டிக்கப்படுகின்றனர். ஒரு நாட்டில் சட்டத்தின் முன்னிலையில் அனைவரும் சமமாகக்கருதப்படுகின்ற ஒரு நிலை காணப்படுமாயின் இவ்வாறான சட்ட மீறல்கள் நடைபெற சாத்தியங்கள் இல்லை. ஒரு அரசு சுதந்திர மாக, சுயமாக, எதுவித தடங்களுமின்றி செயற்பட வேண்டுமாயின் சட்டத்தின் ஆட்சி மிக முக்கியமானதாகும்.

ஜனநாயக அரசுகளில் சட்டவாட்சிக்கோட்பாடு மிக முக்கியமானதாக மதிக்கப்படுகின்றது. உலக அரசுகளில் காணப்படுகின்ற பல்வேறு சட்டங்களில் இரண்டு சட்டங்கள் மிக முக்கியமானவையாகும். அவற்றுள் ரோமானிய சிவில் சட்டம், இங்கிலாந்தின் பொதுச்சட்டம் என்பன அதி சிறப்புப் பெற்றவையாகும். இந்த இரு சட்டங்களுமே உலகில் அதிகளவிலான நாடுகளால் பின்பற்றப்படுகின்றன. பிரித்தானிய அரசியல் அமைப்பை எடுத்துக் கொண்டால் அங்கு சட்டத்தின் ஆட்சிக்கு மிகுந்த முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளது இதனால், பிரித்தானியாவில் மட்டு மன்றி அதனுடைய பொதுநலவாய அமைப்பு நாடுகளிலும் இந்த சட்டத்தின் ஆட்சி முக்கியத்துவம் பெறுகின்றது. தனி மனித அதிகாரங் களை விட சட்டங்களுக்கு முன்னுரிமை வழங்கி சட்டங்களின் அடிப் படையில் எவ்வித பாகுபாடுமின்றி ஆட்சி நடத்தப்பட வேண்டும். சுருக்க மாகக் கூறினால் சட்டத்தின் ஆட்சி இடம் பெறுகின்ற ஒரு நாட்டில் சட்டத்தினாலேயே ஆட்சி நடாத்தப்படும். தனிமனித அதிகாரங்கள் கையோங்கும் போது சட்டத்தின் ஆட்சி தடைப்படுவதோடு பல பிரச்சினைகளுக்கும் அது வழிவகுக்கும். சட்டத்தின் ஆட்சி என்ற கருத்து கிரேக்க அரசியல் சிந்தனை வரை நீண்டிருப்பதை நாம் காணலாம். அரிஸ்டோட்டில், பிளேற்றோ போன்றோர் கூட சட்டத்தில் ஆட்சி பற்றிக் குறிப்பிட்டுள்ளார்கள். அரிஸ்டோட்டிலின் கருத்துப்படி ஏற்றுக் கொள்ளப் பட்ட சட்டங்களுக்குக் கீழ்படிந்து நடப்பதானது அதி உயர்ந்த ஒருவரின் கருத்துக்களின் கீழ் வாழ்வதை விட சிறந்ததாகும் எனக் குறிப்பிட்டார். இதே போன்று பிளேற்றோ குறிப்பிடுகையில் சமூகத்தினை சட்டம் எனும் பொன் நூலினால் கட்டிவைக்கலாம் என்றார். இந்தவகையில் சட்ட ஆட்சி அல்லது சட்டவாட்சி என்பது நீண்ட வரலாற்றைக் கொண்டிருந்த போதிலும் அதனை ஒரு கோட்பாட்டு வடிவில் அமைத்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புதிய விளக்கமளித்தவர் England யைச் சேர்ந்த Prof. டைசி ஆகும் இவரது கருத்துப்படி ஒரு நாட்டில் சிறந்த சட்டத்தின் ஆட்சி இடம்பெற வேண்டுமாயின் பின்வரும் முக்கிய மூன்று அம்சங்களும் அந்நாட்டின் அரசியல் அமைப்பில் இடம் கொடுக்கப்பட்டு அவை நடைமுறையிலும் இருக்க வேண்டும் என்றார். அரசியல் அமைப்பில் எழுத்து ரீதியாக மட்டுமல்லாது நடைமுறை ரீதியாகவும் அவை பின்பற்றப்பட வேண்டும். என்பதிலேயே அவர் அதிக கவனம் கொண்டிருந்தார். அந்த மூன்று அடிப்படை அம்சங்களும் வருமாறு :

1. யார் என்ன குற்றத்தைச் செய்தாலும் அவர்கள் வழமையான நீதிமன்றங்களில் விசாரிக்கப்படல் வேண்டும். சாதாரண ஒரு குடிமகன் ஒரு குற்றம் செய்து எந்த விதத்தில் விசாரிக்கப்படுகின்றாரோ அதே போலவே நாட்டின் உயர் அதிகாரிகளும் குற்றங்களைச் செய்தால் விசாரிக்கப்பட வேண்டும். வித்தியாசமான நீதிமன்றங் களோ அல்லது விசேடமான நீதி மன்றங்களோ ஸ்தாபிக்கப்படுகின்ற நிலை இருக்கக் கூடாது. அவ்வாறு இருந்தால் ஒரு நாட்டில் யாவரும் சமமான நீதியினைப் பெற முடியாது என்றும் விசேட நீதிமன்றங்கள் தம்மை அமைத்தவர்களுக்கு சாாபாகவே செயல்படும் என்பதே டைசியின் பிரதானமான கருத்தாகும்.

2. சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்படுகின்ற ஒருவரை நீதிமன்றம் விசாரணை செய்து குற்றவாளிகளைக் காணுமுன்னர் அவரைத் தண்டிக்கவோ சிறையிலிடவோ கூடாது. ஏனெனில், ஒருவரைக் குற்றவாளியாகக் காணும் உரிமை நீதிமன்றங்களுக்கே உண்டு. தண்டித்தல், சிறையிடல் என்பன குற்றவாளியாகக் காணப்பட்ட பின்னர் புரியப்படல் வேண்டும். குற்றவாளி அல்லாத ஒருவர் வீணாகத் தண்டிக்கப்படும் போது அவர் அரசின் சட்டங்களை மீறி நடக்க முற்படுவதோடு உதாசீனமும் செய்வார்.

3. நாட்டின் பொதுச் சட்டத்திலிருந்து யாருக்கும் எதுவித விதிவிலக்கு களும் வழங்கப்படக் கூடாது. பிறப்புரிமை, வர்க்க வேறுபாடு, அதிகாரம் என்பவற்றைக் காரணமாகக் கொண்டு இவ்வாறான விதிவிலக்குகள் வழங்கப்பட்டால் அவர்கள் பொதுச் சட்டத்தை மதித்து நடக்க மாட்டார் கள். இதன் காரணமாக நாட்டின் பொதுச் சட்டத்தை எல்லோருக்கும் பொதுவான ஒன்றாக அமுல்படுத்த முடியாமல் போய்விடும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு கருத்துக்களைத் தெரிவித்த டைசி இங்கிலாந்து மக்களின் உரிமைகளைப் பற்றியும் குறிப்பிடத் தவறவில்லை. பிரித்தானியப் பிரஜைகள் தமது உரிமைகளை அரசியல் யாப்பின் மூலம் மட்டுமன்றி இயற்கையிலும், சமூகத்திலிருந்தும் பெற்றார்கள் என்றும் அவை காலத்திற்குக் காலம் நீதி மன்றங்களினால் உறுதிப்படுத்தப்பட்டு எழுத்துருவம் பெற்றன என்றும் குறிப்பிட்டார். இங்கிலாந்தைச் சேர்ந்த பேராசிரியர் டைசி இவ்வாறு சட்டத்தின் ஆட்சி பற்றி கருத்துக்கள் தெரிவித்த போது பிரித்தானியாவின் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியை அடிப்படையாகக் கொண்டே அவர் இவ்வாறான கருத்துக்களைத் தெரிவித்தார். ஒரு சட்டத்தின் ஆட்சியின் மூலமே மக்கள் உரிமைகளை யும், சுதந்திரங்களையும் பெறமுடியும் என இவர் நம்பினார். டைசியின் இக்கருத்து முழு உலகிற்கும் பொருந்தக்கூடிய ஒன்றாகக் காணப் படவில்லை. அவர் வாழ்ந்த இங்கிலாந்தில் கூட அவரது இக்கருத்துக் களுக்கு முக்கியத்துவம் வழங்கப்படவில்லை. டைசியின் இக்கருத்து உயர்ந்த இலட்சியங்களை அடிப்படையாகக் கொண்டிருந்த போதிலும் இதனை நடைமுறைப்படுத்துவது மிகவும் கடினமான ஒன்றாக இருந்தது. இவருக்குப் பின்னர் வந்த பெஸக்கி என்பவர் இச்சட்டவாட்சி பற்றிக் குறிப்பிடும் பொழுது டைசியினுடைய சட்டவாட்சியை அடிப்படையாகக் கொண்ட கொள்கைகளுக்குரிய காலப்பகுதி இப்பொழுது முடிந்துவிட்டது என்றார். ஏனெனில், பிரித்தானியாவில் காணப்படுகின்ற சில பண்புகள் அவர்களின் அரச குடும்பங்களுக்கு என சில விசேடமான சலுகைகளை வழங்கியிருக்கின்றன. பிரித்தானிய மக்கள் தமது அரச குடும்பத்தைப் பற்றி உயர்ந்த எண்ணங்களைக் கொண்டிருக்கின்றார்கள். அரசு தவறு செய்யமாட்டா என்பதே அவர்களது கருத்தாகும். எனவே, பிறப்பின் அடிப்படையில் அரச குடும்பம் சில சட்ட விதி விலக்குகளைப் பெறுவதை நாம் இங்கு காண்கின்றோம். மேலும், பிரித்தானியாவில் மட்டுமன்றி உலக நாடுகளைப் பொதுவாக நோக்குகின்ற போது வருமான ஏற்றத்தாழ்வு களை அடிப்படையாக வைத்து உயர் வர்க்கத்தைச்சார்ந்தவர்கள் சட்டத்தின் பிடியில் இருந்து தப்பித்துக்கொள்வதை நாம் காணலாம். அவர்கள் குற்றங்களைப் புரிந்தபொழுதிலும் தமது செல்வாக்கினைப் பயன்படுத்தி தமக்கு சார்பாக நீதியை மாற்றிக் கொள்வர். அதே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நேரம் ஏழைகள் குற்றமிழைக்காத போதிலும் தண்டிக்கப்படுகின்றனர். இந்தப் பண்புகளை அதிகமாக நாம் முதலாளித்துவ நாடுகளில் அவதானிக்கலாம்.

உலக நாடுகளில் வெளிநாட்டுத் தூதுவர்களுக்கு சில வகையான பாதுகாப்பு நடவடிக்கைகள் வழங்கப்படுகின்றன. ஒரு நாட்டிலுள்ள வெளிநாட்டுத்தூதுவர் ஒருவர் குற்றம செய்தால் அல்லது சட்டத்தை மீறினால் அந்த நாடு அவரைத் தண்டிக்க முடியாது. இது சர்வதேச மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு விடயமாகும். இதனால், நாட்டின் பொதுச் சட்டத்திலிருந்து இவர்களுக்கு விதிவிலக்குகள் வழங்கப் படுகின்றது. வெளிநாட்டுத் தூதுவர்கள் ஒரு நாட்டின் பொதுச் சட்டத்தை மீறுவதற்கு இது அடிப்படைக்காரணமாக அமைந்துவிடுகின்றது.

பல்வேறு விதமான நீதிமன்றங்கள் குறிப்பிட்ட ஒரு நாட்டுக்குள்ளேயே இருப்பதை நாம் காணலாம். மாவட்ட நீதி மன்றம், மாகாண நீதிமன்றம், மேல் நீதிமன்றம், உயர் நீதிமன்றம், கூட்டாச்சி நீதிமன்றம், இராணுவ நீதி மன்றம் என்று பல்வேறு வகையான வழக்குகளையும், பல்வேறு வகைப்பட்ட மனிதர்களையும் இவை விசாரணை செய்கின்றபோது ஒரு பாரபட்சமான தன்மையினை நாம் காணலாம். இது மாத்திரமன்றி சில நாடுகளில் குறிப்பிட்ட சில அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்கு நாட்டின் பொதுச்சட்டத்தில் இருக்கும் விதிவிலக்குகள் வழங்கப்படு கின்றன. அத்தோடு விசேட நீதிமன்றங்களை அமைக்கின்ற பண்பு களும் அதிகமான நாடுகளில் காணப்படுகின்றன. இந்த விசேட நீதி மன்றங்கள் எப்பொழுதும் தம்மை அமைத்தவர்களுக்கு சார்பாக செயல்படுகின்றன. இதனால், அந்த நாட்டின் சட்டம் நீதி என்பன ஒரு பக்கச்சார்பாக வழங்கப்பட இடமுண்டு. இவற்றை அடிப்படையாகக் கொண்டே டைசியின் சட்டத்தின் ஆட்சிபற்றிய கருத்துக்கள் மீள் பரிசீலனை செய்யப்படல் வேண்டும். என அண்மைக்காலத்தில் கூறப்பட்டு வருகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மரபு ரீதியான அணுகுமுறை

மரபு ரீதியான ஒப்பீட்டு ஆய்வானது விபரண ரீதியாக அமைந்ததே தவிர பிரச்சிணைகளுக்கு பரிகாரம் காண்பதற்காகவோ அல்லது விளக்கங்கள் தருவதற்காகவோ ஆய்வு நோக்கம் மிக்கதாகவோ அமையவில்லை. மேலும், அது கொள்கை ரீதியிலான அபிவிருத்தியை விரும்பியதாகவோ, எடுகோள்களை பரீட்சிப்பதற்காகவோ புள்ளி விபரங் களைக் கொடுப்பதற்காகவோ இருக்கவில்லை. அது அரசாங்க அமைப் புக்களுடன் மட்டும் தான் இருந்தது.

இவ்வணுகுமுறையின் மூலகர்த்தாக்களாக பிளோட்டோ, அரிஸ்டோட்டில் முக்கியமானவர்களாகும். அதேவேளை இவ்வணுகு முறையை மக்கியாவல்லி, மொன்டஸ்கியு, ஜே.எஸ்.மில், ஜீன்போடின், கொப்ஸ், லொக் போன்ற அறிஞ்ஞர்களும் பயன்படுத்தியுள்ளனர்.

மரபு ரீதியான அணுகுமுறை விருப்பு வெறுப்புகளுக்கு உட் பட்டது. இந்த அணுகுமுறை யாப்புக்கள் பற்றியும் அரசின் நிறுவனங் கள் பற்றியும் அவற்றில் ஒழுங்கமைப்புக்கள், அவற்றின் செயற்பாடுகள் கடமை, அதிகாரம் போன்றன பற்றி ஆராய்கின்றது. இது மாத்திரமன்றி குறுகியதாகவும் பரப்புக் குறைந்ததாகவும் நிலையானதாகவும் ஓரினத்தன் மையானதாகவும் காணப்படுகின்றது.

### மரபு ரீதியான அணுகு முறையின் பண்புகள்

1. ஆய்வுக்குரிய பொருள் :
மரபு சார் ஆய்வுகளில் அரசு, அரசசமூகம், இறைமை அரசாங்கம் முதலான பேரின் (macro) விடயங்களே ஆய்வுக்கு உட்படுத்தப் பட்டன. நடத்தை வாதிகளின் கருத்துப்படி அரசின் தோற்றம், தன்மை பற்றி வரலாற்று முறையிலான ஆய்வும், தத்துவார்த்த ஆய்வும் அரசறிவியலைப் பொருளுடைய பயன்மிக்க துறையாக ஆக்குவதில்லை என்பதாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

2. கருத்துப் பொருள் சார்ந்த அணுகுமுறையாக இருத்தல்
இவ்வணுகுமுறை அரசின் தோற்றம், தன்மை, கோட்பாடுகள் போன்றவற்றை கருத்துப்பொருள் சார்ந்த அடிப்படையில் ஆராய்கின்றது.

3. உய்த்தறி தன்மை கொண்ட அணுகுமுறையாக இருத்தல்
மரபு ரீதியான அணுகுமுறையில் தரவிலிருந்து உட்கிடையாக முடிவு பெறப்படுகின்ற விடயங்களுக்கே கூடுதலான முக்கியத்துவம் அளிக்கப்படுகின்றது. இதனாலேயே, பிளேட்டோ, அரிஸ்டோட்டில் போன்ற சிந்தனையாளர்கள் இந்த அணுகுமுறையை கூடுதலாக பயன்படுத்தியுள்ளனர்.

4. எல்லோராலும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கோட்பாடு இல்லை.
இவ்வணுகுமுறை அரசின் தோற்றம் பற்றிய கோட்பாடு, இறைமைக் கோட்பாடு, அரசின் தன்மை, வலுவேறாக்கற் கோட்பாடு போன்ற கோட்பாடுகளில் கவனம் செலுத்துகின்றபடியால் இக்கோட்பாடுகளில் உள்ள கருத்துக்கள் எல்லோராலும் ஏற்றுக்கொள்ளப்படுவதில்லை.
உதாரணம் : இறைமைக்கோட்பாடு தற்காலத்தில் வலுவிழந்துள்ளது.

## இவ்வணுகுமுறையின் குறைபாடுகள்

1. சோதனைக்குட்படுத்தி மெய்ப்பிக்க முடியாது.
அரிஸ்டோட்டில், பிளேற்றோ போன்ற தத்துவஞானிகள் பொது விதிகளை ஏற்படுத்தினாலும் அவற்றை சோதனைக்குட்படுத்தி மெய்ப்பிக்கவில்லை. இது ஒரு குறைபாடாகும்.

2. கோட்பாட்டுக்கும் நடைமுறைக்கும் இடையில் தொடர்பு காணப் படாமை.

3. நம்பகத்தன்மையை வளர்க்க முடியாமை.

4. துறையிடை அணுகுமுறைக்கு இடமளிக்காமை.

5. ஓரினத்தன்மையாகக் காணப்பட்டமை.

6. விஞ்ஞானத்தன்மை கொண்டதாக இல்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

7. விபரண ரீதியாகவும், வரலாற்று ரீதியாகவும் காணப்பட்டமை.

மரபு ரீதியான அணுகுமுறைக்குள் பின்வரும் அணுகு முறைகள் காணப்படுகின்றன.

**1. தத்துவார்த்த அணுகுமுறை**

இவ்வணுகுமுறை பற்றி அரசியல் சிந்தனையாளர்களான பிளேற்றோ, அரிஸ்டோட்டில், கரிங்டன், காண்ட், கெகல், றூசோ, சீர்ஜ்பிக் போன்றவர்கள் கருத்துக்களை வெளியிட்டுள்ளனர்.

**2. வரலாற்று அணுகுமுறை**

வரலாற்றை ஆய்வுசெய்து இவ்வணுகுமுறை பெறப்படுகின்றது. அரசு, ஏனைய நிறுவனங்களின் தோற்றம், வளர்ச்சி பற்றி இது ஆய்வுசெய்கின்றது.
அரிஸ்டோட்டில், தோமஸ் கொப்ஸ், அகஸ்டைன், கட்லின், குக் லஸ்கி, ஹெகல், மக்கியவல்லி போன்றவர்கள் இவ்வணுகு முறைக்கு ஆதரவு கொடுத்தனர்.

**3. நிறுவன அணுகுமுறை**

அரசின் பிரதான நிறுவனங்களாகிய சட்டத்துறை, நிர்வாகத்துறை, நீதித்துறை போன்றவற்றை ஆராய்கின்றது.
அரிஸ்டோட்டில், பொலிபியஸ், பிறைஸ், பைனர், போன்றோர் இவ்வணுகுமுறை பற்றி கூறியுள்ளனர்.

**4. சட்ட அணுகுமுறை**

சட்டமுறைகளை விளக்குவதன் மூலம் இவ்வணுகுமுறை நோக்கப் படுகின்றது. அத்தோடு நீதி, நிர்வாக முறையை ஆய்வு செய்கி ன்றது. சிசரோ, டைசி, கொப்ஸ், குரோசியஸ், பென்தம், ஜோன் ஒஸ்டின், சேர் ஹென்றிமெயின், போன்றோர் இவ் அணுகுமுறை பற்றி கூறியுள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**5. ஒப்பீட்டு அணுகுமுறை**

கடந்த கால, நிகழ்கால அரசியல் நிறுவனங்கள் ஒப்பீடு செய்யப் படுகின்றது. பொதுமுடிவுகளில் பெற இவ்வணுகுமுறை பயன் படுகின்றது. மொண்டஸ்கீயூ, பிறைஸ், மெயின், அல்மணட், மக்ஸ் வெபர், டேவிட் அப்பர் இதுபற்றி கூறியுள்ளனர்.

# நடத்தை வாதம்

## நடத்தைவாத அணுகு முறை

இரண்டாம் உலகப்போரின் ஆய்வுமுறை கருதுகோள்கள் சார்ந்த முறையில் அரசியல் ஆய்வு புரட்சிகரமான மாற்றத்திற்கு உட்பட்டது. இரண்டாம் உலகப்போரின் பின்னர் சமூகவியல், பொருளியல், விஞ்ஞானம், தொழிநுட்பம் போன்ற இன்னோரன்ன துறைகளில் உலகளாவிய வகையில் ஏற்பட்ட புரட்ச்சிகரமான மாற்றங் களின் விளைவாக மனித வாழ்க்கையையும் உலகையும் பற்றிய நோக்கு, மாற்றமுறும் சமூக எண்ணக்கருக்கள், அதிகாரம், சட்டரீதியான தன்மை, சுதந்திரமும் அதிகாரமும், உரிமைகளும், கடமைகளும் போன்றவை சம்பந்தமான மனித நோக்குகள் முழுமையாக மாற்றத்திற் குட்பட்டன. இந்நோக்குகள் விஞ்ஞான முறைகளை அடிப்படையாகக் கொண்டு இடம்பெற்றதுடன் அரசறிவியல் ஆய்வியல் ஒரு புதிய பரிமாணம் அறிமுகமாகியது. அரசறிவியல் ஆய்விற்கு ஒரு புதிய முகத்தையும், புதிய கருத்தையும், புதிய உருவையும் வழங்கிய வர்களில் நடத்தைவாத சிந்தனாவாதக் குழுவினர் குறிப்பிடத்தக்க வர்களாகும். இந் நடத்தைவாதிகள் அரசறிவியலை விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தமையால் அரசறிவியல் பற்றிய விஞ்ஞான ஆய்வு அரசியல் நடத்தை வாதம் என்ற பெயராலும் அழைக்கப்படுகின்றது.

அரசியலில் ஈடுபடும் மனிதனதும், மனிதக் குலங்களினதும் அரசியல் நடத்தைகள் விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி ஆராய்ந்து அதனூடாக அரசியலைப்பற்றி விளக்கும் ஆய்வு முறையே நடத்தை வாத அணுகுமுறை என்று அழைக்கப்படுகின்றது. நடத்தைவாதம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பது இருபதாம் நூற்றாண்டு முதல் அரைப்பகுதியில் அமெரிக்காவில் அறிமுகமாகி இரண்டாம் உலகப் போரின் பின்னர் அரசறிவியல் பிரபல்யமான ஒரு முறையாக பின்பற்றப்படுகின்றது. இம்முறையை அறிமுகப்படுத்தியவர்களில் Harrold, Lassvell, David Easton, David After, G.A. Almand, Robert Dale போன்றவர்கள் குறிப்பிடத்தக்கவர்களாகும்.

## நடத்தைவாத அணுகு முறையின் பண்புகள்

1. **ஆய்வுக்குரிய பொருள் :**
**நடத்தைவாதம் நுண்பாக (சிற்றின - micro) விடயங்களையே கவனத்தில் கொள்ளப்படுகின்றது. ஓர் அரசியல் சமூகத்தில் இடம்பெறும் மாணவப் போராட்டங்கள், வகுப்புவாத போராட்டங்கள், தேர்தல் நடத்தை, அரசியல் வன்செயல் போன்ற சிற்றின விடயங்களே ஆய்வுப் பொருளாகக் கொள்ளப்படுகின்றன.**

2. **ஆய்வில் விஞ்ஞான முறைகள் பயன்படுதல் :**
**நடத்தை வாதம் தத்துவார்த்த அணுகு முறைக்குப் பதிலாக விஞ்ஞானம் சார்ந்த அல்லது செயல்முறை சார்ந்த அணுகு முறைக்கு இடம் வழங்குகின்றது. நடத்தை வாதிகள் பொது விதிகளை அமைப்பதோடு நின்றுவிடாது அவற்றை மெய்ப்பிக்கவும் முயன்றனர். இந்த முயற்சியில் மனித நடத்தையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளை பகுப்பாய்வு செய்வதற்குத் துல்லியமான முறைகளைப் பயன்படுத்தினர். இதுவே அரசறிவியலின் விஞ்ஞானத் தன்மையாகும். நடத்தைவாதிகள் தமது ஆய்வில் நேர்முகப் பேட்டி மாதிரிக்கூறு அளவாய்வுகள் ஆய்வு வினாக்கொத்து முறை, அகரவரிசைத் தொகுப்பு, அட்டவணைத் தயாரிப்பு போன்ற விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி அரசறிவியல் ஆய்வை விஞ்ஞானமாக்கி உள்ளனர்.**

3. **துறையிடை அணுகு முறை :**
**நடத்தை வாதம் அரசறிவியலுக்கும் பிற சமூக விஞ்ஞானங்களுக்கும் இடையே நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துகின்றது. மனித**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் நடத்தையை ஆராயும் போது அவற்றை பாதிக்கும் சமூக பொருளாதார உளவியல் காரணிகளை சுட்டிக்காட்டுகிறது. அவனது மொத்த நடத்தையுடன் தொடர்புபடுத்தி ஆராயப் படுகின்றது. இவ்ஆய்வு முறையை அரசியல் முறை பற்றிய ஆய்விலும் பயன்படுத்தி அவற்றை பாதிக்கும் பல்வேறு காரணி களையும் ஆராய்கின்றனர். இதன் விளைவாக அரசறிவியலுக்கும், சமூகவியல், மானிடவியல், பொருளியல், வனவியல் போன்ற துறை களுக்கும் இடையில் நெருங்கிய தொடர்பு வளர்ந்துள்ளது. இதுவே துறையிடை அணுகுமுறை என்று அழைக்கப்படுகின்றது.

4. **தொகுத்தறி முறையை பின்பற்றுகின்றது :**
அனுபவ ரீதியான தரவுகளையும் தகவல்களையும் கொண்டு ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட முடிவு நடத்தை வாத அணுகுமுறை மூலம் பெறப்படுகின்றது.

5. **நம்பகத்தன்மை கொண்ட எதிர்வு கூறலை தரக்கூடிய தன்மையை கொண்டிருத்தல் :**
எதிர்வு கூறல் விஞ்ஞானத்திற்குரிய பண்பாகும். இதனால் நடத்தை வாத அணுகுமுறையில் மக்கள் நம்பக்கூடிய உண்மையான எதிர்வுகூறல் கூறப்படுகின்றது. இதனால் அரசியல் விஞ்ஞானமா வதற்குரிய தன்மை ஏற்படுகின்றது.

6. **அரசாங்க ஸ்தாபனங்கள் தொடர்புபடுகின்ற மனித நடத்தையை ஆராய்கின்ற ஒரு துறையாக இருத்தல் :**
மக்களின் நடத்தையோடு தொடர்புடைய வாக்களிப்பு கட்சியமைத் தல், குழுக்கள் அமைத்தல், மாணவர் போராட்டம் போன்ற நடவடிக்கைகளை ஆராய்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடத்தை வாதம் ஏற்படுத்திய சாதனைகள்

1. **அரசியல், விஞ்ஞானமாக மாற்றமடைதல் :**
நடத்தைவாதிகள் பொதுவிதிகளை அமைப்பதோடு நின்றுவிடாது அவற்றை மெய்ப்பிக்கவும் முயன்றனர். இந்த முயற்சியில் மனித நடத்தையோடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகளும் பகுப்பாய்வு செய்வதற்கு துல்லியமான முறைகளைப் பயன்படுத்தினர். இதுவே அரசறிவியலின் விஞ்ஞானத்தன்மை ஆகும். நடத்தை வாதிகள் தமது ஆய்வில் பேட்டிமுறை, வினாக்கொத்து முறை, கல ஆய்வு முறை, மாதிரிக்கூறு கலாஆய்வு, அகரவரிசை தொகுப்பு அட்டவணை தயாரிப்பு போன்றன விஞ்ஞான முறைகளைப் பயன்படுத்தி அரசியலை விஞ்ஞானமாக்கி உள்ளனர்.

2. **அரசியலின் பாடப்பரப்பு விரிவாக்கம் அடைந்தமை :**
காலம் காலமாக அரசு அரசாங்கம், சமூகம், அரசும் சமூகமும், அரசும் சங்கங்களும் போன்றவை அரசியல் ஆய்வின் மையப் பொருளாக இருந்த நிலைமாறி அரசியலில் மனித நடத்தை ஆய்வுப் பொருளாக இடம்பெறக்கூடிய வாய்ப்பு நடத்தை வாதம் மூலம் ஏற்றபட்டதனால் அரசறிவியலின் பாடப்பரப்பு விரிவுபடுத்தப் படலாயிற்று

3. அரசியல் என்பது வரலாறு கற்கின்ற பாடமாக இருந்த நிலைமாறி தற்போது மனிதனோடு சம்பந்தப்பட்ட நாளாந்தப் பிரச்சினையை ஆராய்கின்ற துறையாக மாறியுள்ளது.

4. பிரச்சினையைத் தீர்க்கும் கற்கைநெறியாக மாற்றமடைந்ததற்குக் காரணம் நடத்தை வாதம் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நடத்தை வாதத்தின் குறைபாடுகள்

1. நடத்தை வாதம் வினைவைக் காட்டிலும் செயல் முறைகள் மூலமே அதிக ஆர்வம் காட்டுகின்றது. இதனால் அரசியல் கோட்பாட்டின் முக்கியத்துவம் குறைகின்றது.

2. நடத்தை வாதம் முடிவுகளை விட தொழிநுட்ப உத்திகளில் கூடிய கவனம் செலுத்துகின்றது. சில நடத்தைவாதிகள் ஆராய்ச்சிக்கான விடயங்களைத் தெரிவு செய்யும் போது விடயத்தின் முக்கியத் துவத்தைக் கருத்தில் கொள்ளாது அது எந்தளவு நல்ல தொழி நுட்ப உத்திகளுக்கு இடமளிக்கிறது என்பதை கருத்திற் கொள் கின்றனர்.

3. நடத்தை வாதம் போலி அரசியலாக காணப்படுகின்றது : அரசியல் உலகம் அனைத்திலும் விருப்பங்களைக் கவனத்திற் கொள்ளவேண்டும். ஆனால், நடத்தை வாதம், அமெரிக்க நிறுவனங் களை நிலைநிறுத்துவதிலேயே கவனம் செலுத்துகின்றது. மேற் குலக அரசியல் நடைமுறைக்கு சார்பாக அவை இயங்குவதாக குற்றம் சாட்டப்படுகின்றது.

4. நிறுவனங்களை முற்றுமுழுதாக ஒதுக்கிவிட்டு, தனிமனித நடத்தை யிலேயே நடத்தை வாதம் கவனம் செலுத்துகின்றது : தனிமனித நடத்தை மீதான கவனத்தை விட, நிறுவனங்களுக்கான கவனம் மிகவும் குறைவாகவே இருந்தது. உதாரணமாக மக்கள் வாக்களிக்கும் நடத்தையை ஆராயும் போது நிறுவன உண்மை களான வாக்குச் சீட்டின் வடிவம், வாக்காளர்களைப் பதிதல், வாக்குகளை செல்லுபடியற்றதாக்கல், வாக்களிப்பு சம்பந்தமான நடைமுறையில் இருக்கும் சட்டவிதிகள் போன்றன முக்கியமான வையாக இருந்தாலும் நடத்தை வாதிகள் சிலவேளை இவற்றை கவனியாது விட்டுவிடுதல்.

5. நடத்தை வாதிகள் தேங்கிய சூழ்நிலைகளை ஆய்வு செய்வதில் கவனம் செலுத்தியமையால் சச்சரவு, வன்முறை சார்ந்த புரட்சி சூழ்நிலைகள், அரசியல் மாற்றங்கள் ஆகியவை பற்றிய ஆய்வினை மேற்கொள்ளத் தவறிவிட்டனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. நடத்தை வாதிகள் குறிப்பிடுவது போல் மனித நடத்தைகளை பொதுவாக வகுக்கமுடியாது. மனித நடத்தைகள், விசேடமாக அரசியல் நடத்தைகள், மாறுபடக்கூடியவை; வேறுபட்டவை. ஆகவே, ஒரு சந்தர்ப்பத்திலிருந்து கொடுக்கப்படும் முடிவுகள், வேறொரு சந்தர்ப்பத்திற்கு ஒத்துவராது.

7. நடத்தை வாதிகள் சொல்வது போல் அரசியல் ஆராய்ச்சிகள் பெறுமானம் அற்றதாக ஒரு போதும் இருக்க முடியாது. ஆராய்ச்சிக் கான விடயத்தை தெரிவு செய்தல், ஒருவரின் பெறுமான முன்னுரி மையினாலேயே தீர்மானிக்கப்படுகிறது.

## டேவிட் ஈஸ்டனின் நடத்தைவாதம் பற்றிய பண்புகள்

1. **ஒழுங்கமைப்பு :**

அரசியல் நடத்தை வாதம் சம்பந்தமான மனிதர்களுக் கிடையே வேற்றுமைகள் இருந்தாலும் பல ஒற்றுமையான ஒழுங்க மைப்புக்களும் காணப்படுகின்றன இவற்றை பொதுவான மூலகங் கள் அல்லது கொள்கைகள் வடிவில் விளக்கலாம். இந்தப் பொது வான தன்மைகள் ஒரு நிகழ்வைச் சுட்டிக் காட்டுவதோடு நின்று விடாமல் எதிர்கால செயற்பாடுகளை நிர்ணயிற்பதற்கும் உதவுகின்றன. உதாரணம், வாக்களிக்கும் நடத்தை:- வாக்காளர்கள் அநேகமாக ஒரு கட்சிக்கு அல்லது தனிப்பட்ட நபருக்கு தொடர்ச்சியாக வாக்களிப்பர். வாக்களிக்கும் நடத்தையுடன் ஒருவரின் அந்தஸ்து, வருமானம், கல்வி, தொழில், சமய ஈடுபாடு போன்றவற்றை இணைந்து ஆராயும் போது, பொதுவான கொள்கை ஒன்றை கூறக்கூடிய அளவுக்கு ஒரு நடத்தைப் போக்கை காணலாம். இது எதிர் காலத் தில் விடயங்களை நிர்ணயிப்பதற்கு உதவுவதால் விஞ்ஞான பூர்மானதாகவும், இறுக்கமானதாகவும் மாறத் தலைப்படுகின்றது.

2. **உண்மைகாணல் அல்லது சரி பார்த்தல் :**

நடத்தை வாதிகள் எதையும் உள்ளவாறே இலேசாக எடுத்துக் கொள்வதில்லை அவர்கள் விஞ்ஞான பூர்மான உண்மைகாணலில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். அறிவு பெறுமதியினதாக மாறு வதற்கு அவை அனுபவ பூர்வமாக சோதனைக்கு உட்படுத்தப்பட்டு அச் சோதனையின் அவதானிப்பின் அடிப்படையில் சாட்சிகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அல்லது விளைவுகள் பெறப்பட வேண்டும். அவதானிக்கக் கூடிய வையில் மட்டுமே அவர்கள் கவனம் செலுத்துவார்கள். அவர்கள் அனுபவபூர்வமான பரிசோதனை முறையில் நம்பிக்கை கொள்வதால், எந்த விடயம் விஞ்ஞான பூர்மான ஆராய்ச்சியும், உறுதிப்படுத்தலும், இன்றிக் காணப்படுகின்றதோ அவை விஞ்ஞான பூர்வமானதாகக் கொள்ளப்படமாட்டா, மாறாக, உறுதியான பிடிவாதமுள்ள தீர்மானமாக கொள்ளப்படும்.

3. தொழிநுட்ப உத்திகள் :

நடத்தை வாதிகள் சரியான தொழிநுட்ப உத்திகளைக் கையாளுவதில் கூடிய முக்கியத்துவம் வழங்குகின்றார்கள். இவ் உத்திகள், தகவல்களைப் பெறுவதற்கும், அவற்றை விளக்குவதற்கும் ஆராய்ச்சிக் கருவிகளின் பயன்பாடுகளை அளவிடுவதற்கும் நம்பத்தகுந்த, ஒத்துப் பார்க்கக்கூடிய தகவல்களைக் தரக்கூடிய முறைகளை அளவிடுவதற்கும் (கணக்கெடுப்புக்கள், கணித கட்டுமான முறைகள் பல வேறுபட்ட பகுப்பாய்வு, சமகால ஆய்வு) உதவுகின்றன.

4. அளவை செய்தல் .

நடத்தை வாதிகள், அளவுபடுத்தல் இன்றி ஒரு ஆராய்ச்சியாளர் ஒரு நிகழ்வைச் சரியாக விளங்கப்படுத்த முடியாது என்றும் எதிர்காலதிற்காக விடயங்களை எதிர்வு கூற முடியாது என்றும் நம்புகின்றனர். பிழையான அளவு உறுதியுரைகளை, மிகச் சரியான, உறுதியான அளவுகளால் அவர்கள் மாற்றியமைத் தார்கள். எவ்வித கண்டுபிடிப்புக்களும் அளவு சார்பான தகவல் களின் அடிப்படையிலேயே (எண்ணிக்கை சார்பான) அமைய வேண்டும்.

5. பெறுமானங்கள் :

நீதி வழியின்றி ஒன்றை சோதனையிடல், அனுபவ பூர்வமாக விளக்கத்துக்கு வேறுபட்டதாகும். பெறுமானங்களும் உண்மைகளும் இரு வேறுபட்ட விடயங்களாகும். ஜனநாயகம், சுதந்திரம், சமத்துவம் என்பன நடைமுறையில் கடைப்பிடிக்க கூடிய பெறுமானங்களாகும். ஆனால், அவற்றின் உண்மை, பொய்த்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்மைகள் விஞ்ஞான பூர்வமாக நிறுவப்பட முடியாதவை. விஞ்ஞான பூர்வமான ஆராய்ச்சி பெறுமானங்களை கருத்திற் கொள்வதில்லை; நோக்கங்களை கருத்தில் கொள்கின்றது. நீதி ஒழுக்க பூர்மான பெறுமானங்கள், அனுபவ பூர்வமான எதேச்சாதிகாரமான பெறுமானங் களுடன் கணக்கிட முடியாது, ஒருவர் ஒரு தேர்தல் மாவட்டத்தில் வேட்பாளர் B யை விட A யை தெரிவு செய்தாலும் ஒரு பெறுமான மாகும். ஆனால், அப்பெறுமானம் பகுப்பாய்வுக்கு உட்படுத்தக் கூடியதும் அளக்கக்கூடியதுமாகும். ஆகவே, இப் பெறுமானம் அனுபவ பூர்வமான எதேச்சாதிகாரமானதாகும்.

6. முறைப்படுத்தல் :

அரசியல் ஆய்வுகள் ஒழுங்கமைப்புக்கு உட்பட்டதாக இருக்க வேண்டுமென நடத்தை வாதிகள் நம்புகின்றனர். இது என்னவென்றால், ஆய்வுகள், கொள்கை பற்றியதாகவும், கொள்கை யால் வழிப்பட்டதாகவும் இருக்க வேண்டும். கொள்கையும் ஆய்வும் ஒன்றுடன் ஒன்று நெருக்கமாக இணைந்ததாக இருக்க வேண்டும். இங்கே 'கொள்கை' என்று கருதப்படுவது யாதெனின், பெறுமான கொள்கை அல்ல. நடைமுறைக் கொள்கையாகும்.

7. தூய விஞ்ஞானம் :

நடத்தை வாதிகள் தூய விஞ்ஞான அணுகுமுறைகளில் நம்பிக்கை கொண்டுள்ளார்கள். கொள்கை விளக்கம், அவ்வாறா னவை மனித வாழ்க்கைக்கும், மனித இனத்திற்கும் பயன்படுத்து வதற்கு உதவும். கொள்கையும் பயன்பாடும் விஞ்ஞானத்தின் பகுதிகளாகும். நடத்தை வாதிகள் சமூகத்தின் பிரச்சினைகள் சம்பந்தமாக ஆராய்ச்சிகளை மேற்கொள்கின்றார்கள். இச் சமூக பிரச்சினைகளை தீர்ப்பதற்கு தங்களால் உருவாக்கப்பட்ட விஞ்ஞான கொள்கைகளின் பயன்படுத்தலை நடத்தைவாதிகள் ஏற்கிறார்கள்.

8. ஒன்றுகலத்தல் அல்லது ஒருமைப்பாடு

நடத்தை வாதிகள் அரசியல் விஞ்ஞானத்தை சமூக விஞ்ஞானங்களோடு கலந்து நோக்க வேண்டும் என்கிறார்கள். மனிதன் ஒரு சமூக பிராணியாக இருப்பதனால் அவனது பொருளா தார, அரசியல் நடவடிக்கைகளுக்கிடையில் ஒரு எல்லைக்கோடு போடுவது முடியாத காரியமாகும். அத்துடன், இவற்றுள் எந்த ஒன்றும், மனிதனின் முழு வாழ்க்கையிலும் சம்பந்தப்படாத வரை சரியாக விளங்கிக் கொள்ள முடியாததாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனநாயகம்

Democrasy என்ற ஆங்கிலப் பதம் தமிழில் ஜனநாயகம் என்று வரைவிலக்கணப்படுத்தப்படுகிறது. கிரேக்க மொழியில் Demos என்ற மக்கள் என்ற சொல்லும் Ktatos என்ற அதிகாரம் என்ற சொல்லும் இணைந்த Democrasy என்ற ஆங்கிலச் சொல் உருவாகியுள்ளது. இதன் பொருளை தமிழ்மொழியுடன் தொடர்புபடுத்தும் போது ஜனநாயகம் என்பதன் பொருள் மக்கள் அதிகாரம் என்பதாகும்.

ஒரு நாட்டின் ஆட்சியாளருக்கும் ஆளப்படுவோருக்கும் இடையிலான தொடர்புகளை அடிப்படையாகக் கொண்டு ஆட்சி முறைகளை வகைப்படுத்துவது அரசறிவியலின் ஒரு முக்கிய பகுப்பாய்வாகும்.

ஜனநாயகம் பற்றி உலகத்தில் பொதுவான கருத்து நிலவுவதில்லை. ஏனெனில், தராண்மைவாதிகளும் சோசலிச வாதிகளும் சிலவேளை பாசிசவாதிகளும் தத்தமது அரசியல் கருத்துக்களுக்கு ஏற்ப ஜனநாயகத்தை வரைவிலக்கணப்படுத்துவதாகும்.

இவ்வகையில் ஜனநாயகத்தைப் பற்றி பல்வேறு அறிஞர்கள் பல்வேறு கருத்துக்களைக் கூறியுள்ளனர்.

1. 1863ம் ஆண்டு அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த ஆபிரகாம்லிங்கன் ஜனநாயகத்தைப் பற்றி கூறுகின்றபோது :
”ஜனநாயகம் என்பது மக்களால் மக்களுக்காக கொண்டு நடாத்தப்படும் மக்களின் அமைப்பாகும்” எனக் கூறினார்.
2. ஒரு சமூகத்தில் மனிதன் ஆளப்படும் முறைக்கு மேலதிகமாக அம்மனிதரிடையே அரசியல், பொருளாதார, சமூக, கலாச்சார உறவுகளை மேற்கொள்ளும் முறை பற்றிய விழுமியங்களும் ஜனநாயகத்தின் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றன என்று A.D. லின்ட்சே, H.J. லஸ்கி, மக்ஜவர் போன்றோர் கூறுகின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. எல்லோருக்கும் உரிமைகளை உறுதிப்படுத்தும் ஆட்சி முறையே மக்கள் ஆட்சியாகும் என்று சீலி கூறுகிறார்.

4. சாதாரண மனிதர்களும் அரசியல் தலைவர்களை கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரத்தை பெற்றுள்ள ஆட்சிமுறை ஜனநாயகம் ஆகும் என்று ராபர்ட்டால் என்பவர் கூறுகிறார்.

## ஜனநாயகத்தின் தோற்றமும் வளர்ச்சியும்

ஜனநாயகம் என்பது மிகச் சிக்கலான ஒரு புதுமைக்கலையாகும். எனினும், அதன் ஆரம்பத்தைக் குறிப்பிடுதல் மிகவும் இலகுவான தாகும். கி.மு. 5ம் நூற்றாண்டளவில் எதென்ஸ் நகர அரசில் ஜனநாயகம் தோன்றியது. உலகத்தின் ஏனைய பகுதிகள் தொடர்ந்தும் ஏகாதிபத்தியமும் கடும் அதிகார வர்க்கமும் கொண்ட சமூகங்களாக இருந்த போது எதென்ஸிலுள்ள ஜனநாயக முறை நவீன காலத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது. அங்கு குடியுரிமையானது பூர்வீக, வயது வந்த ஆண்களுக்கு மட்டுமே மட்டுப்படுத்தப்பட்டிருந் தாலும் (பெண்கள், குழந்தைகள் அந்நாட்டில் தங்கியுள்ள அந்நியர்கள், அடிமைகள் போன்றோர் அரசியல் வாழ்க்கையிலிருந்து விலக்கப்பட்டிருந்தனர்) அவர்கள் உருவாக்கிய அரசியல் சமூகத்திற்குட்பட்ட சமத்துவ கொள்கை யானது பிரான்ஸின் மறுமலர்ச்சிக் காலத்தில் பெருகி, உலகளாவிய நவீன மனித சமத்துவ எண்ணக்கருவுக்கு வித்திட்டது. என்றாலும், கிரேக்கத்தில் அன்று உருவான இவ் ஜனநாயகமானது பெரும்பாண்மை வாக்குகளால் தீர்மானிக்கப்படும் நேரடி ஜனநாயக முறையாகவே பெரிதும் அடையாளம் காணப்படுகின்றது.

ஆனால், மக்கள் தொகையும், தேவைகளும் பெருகிவிட்ட இன்றைய கால கட்டத்தில் நிலவும் மறைமுக அல்லது பிரதிநிதித்துவ ஜனநாயகமானது, பெரிதும் அமெரிக்க, பிரான்ஸ் புரட்சிகளை அடிப் படையாகக் கொண்டு எழுந்ததாகக் காணப்படுகிறது.

18ம் நூற்றாண்டு தொடக்கம் இம்முறை வளர்ந்து வந்துள்ளது. எனினும், ஜனநாயகச் சிந்தனையின் வலுவானது பண்டைய எதென்ஸின் பெரிக்கில்ஸிலிருந்து (Pericles) இன்றைய நவீன செக்கோஸ்லாவி யாவின்வெக்ல்வ் ஹேவல் (Vaclav Havel) வரை 1776ல் வெளியிடப்பட்ட



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோமஸ் ஜெபர்ஸனின் (Thomas Jefferson) சுதந்திரப் பிரகடனத்தில் இருந்து (Declaration of Independence) 1989 ம் ஆண்டில் இடம்பெற்ற அந்தரே செக்ரோவின் (Andrei Sakharov) உறைகள் வரை மிளிர்கிறது. மேலும், மனிதனின் மன வலிமைக்கும், புத்திக்கூர்மைக்கும் உரைகல் லாகத் திகழும் வரலாற்றின் பண்பட்ட சில சிந்தனைத் துளிகள் வெளிவரக் காரணமாயும் அமைந்தது.

## ஜனநாயகத்தின் வகைகள்

ஜனநாயகம் இரண்டு வகையாக பாகுபாடு செய்யப்படுகிறது. ஒன்று நேரடி ஜனநாயகம் மற்றது பிரதிநிதித்துவ ஜனநாயகம் ஆரம்ப காலங்களில் ஆட்சியில் நேரடி ஜனநாயகமுறை பின்பற்றப்பட்ட போதும் தற்காலங்களில் இம்முறை காணப்படவில்லை. தற்போது பிரதி நிதித்துவ ஜனநாயக முறையே பின்பற்றப்பட்டு வருகின்றது.

நேரடி ஜனநாயகத்தில் (Direct democrasy) குடிமக்கள் தெரிவு செய்யப்பட்ட அல்லது நியமிக்கப்பட்ட ஒரு இடையீட்டாளரின் துணை இல்லாமலேயே பொதுத் தீர்மானங்களை மேற்கொள்ளும் நடவடிக் கையில் பங்கு கொள்ள முடியும் இத்தகைய ஒரு முறைமை ஒப்பீட் டளவில் ஒரு சமூக நிறுவனத்தில் அல்லது குழுக்கள் சார்ந்த சபை (Tribal council) போன்ற சிறு எண்ணிக்கையான அங்கத்துவம் கொண்ட நிறுவனங்களிலேயே செயற்படமுடியும். உலகின் முதலாவது ஜனநாய கத்தை கொண்டிருந்த பண்டைய எதென்ஸ் 5000 அல்லது 6000 பேர் கொண்ட ஒரு மன்றத்தைக் கொண்டு நேரடி ஜனநாயகத்தை நடத்துவதற்கு பௌதீக ரீதியில் ஓரிடத்தில் கூடக்கூடிய ஆகக்கூடிய தொகையினராக இவ் எண்ணிக்கை இருந்திருக்கலாம்.

ஆனால், இன்றைய நவீன சமூதாயத்தில் அதன் பருமன் உட்சிக்கல் நிலைகளை (complexity) கொண்டு நோக்கும் போது நேரடி ஜனநாயகம் சாத்தியமானதல்ல. இங்கு, பொது நன்மைக்காக அரசியல் தீர்மானங்களை மேற்கொள்ளவும் சட்டங்களை உருவாக்கவும், வேலைத் திட்டங்களை நிர்வகிக்கவும் அலுவலர்களை தெரிவு செய்யவும் மக்க ளுக்கு வாய்ப்பு வழங்கப்படுகிறது. இவ்வாறு தெரிவு செய்யப்படும் அலுவலர்கள் மக்களின் பெயரால் காரியமாற்று கின்றனர். எனினும் அம் மக்கள் பிரதிநிதிகளைத் தெரிவு செய்யும் தேர்தல் முறையானது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்டுக்கு நாடு வேறுபடுகின்றது.

உதாரணம் : தொகுதி வாரித்தேர்தல் முறை, விகிதாசார பிரதிநிதித்துவ முறை போன்றன.

இவ்வாறாக தெரிவு செய்யப்படும் மக்கள் பிரதிநிதிகள் தமது செயல்களுக்கும் மக்களுக்கும் பொறுப்புடையோராகவும் இருக்க வேண்டும்.

என்றாலும், தற்காலத்திலும் கூட நேரடி ஜனநாயகப் பண்புகள் சுவிட்சர்லாந்திலும், அமெரிக்காவிலும், மற்றும் ஸ்கண்டினேவிய நாடுகளிலும், இலங்கையின் 1978ம் ஆண்டு இரண்டாம் குடியரசு யாப்பிலும் காணப்படுகின்றன.

உதாரணம் : மக்களின் தீர்ப்பு, மக்கள் தொடக்கம், திருப்பியழைத்தல் போன்றன.

## ஜனநாயகத்தின் பிரதான பண்புகள்

1) இன்றைய ஜனநாயக ஆட்சி முறையில் சமத்துவம், சுதந்திரம் போன்றன முக்கிய இடத்தினைப் பெறுகின்றது.

**சமத்துவம்**

1. இதன் கருத்து உரிமைகளைப் பொறுத்தமட்டில் எல்லோரும் சமம் என்பதாகும்.
2. அமெரிக்க சுதந்திரப் பிரகடனத்தில் பின்வருமாறு குறிப்பிட்டுள்ளது. "சகலரும் சம உரிமைகளுடன் படைக்கப்பட்டுள்ளனர் என்பதை ஒப்புக் கொள்கின்றோம்.
3. 1789 இல் பிரான்சின் உரிமைப் பிரகடனம் பின்வருமாறு கூறுகின்றது. " மனிதன் பிறந்தது முதல் இறக்கும் வரை சம உரிமைகளை உடையவன்"
4. இவற்றின் கருத்து, குடிகள் என்ற வகையில் ஒவ்வொருவருக்கும்

   எல்லோருடைய உரிமைகளும் சமமாகும் என்பதாகும். குடியாட்சி வெற்றியளிக்க வேண்டுமானால் மக்களிடையே சமத்துவநிலை வேண்டியது அவசியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சுதந்திரம்

அ) குடியாட்சி முறையில் மக்களுக்கு சுதந்திரம் இருத்தல் வேண்டும். எவ்வாறாயினும் ஒருவரது சுதந்திரத்தால் இன்னொருவரின் சுதந்திரம் பாதிப்படைதல் கூடாது.

சுதந்திரத்தைப் பின்வருமாறு வகைப்படுத்தலாம்.

1) அரசியல் சுதந்திரம்
2) பொருளாதார சுதந்திரம்
3) சமய சுதந்திரம்

2) மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.
ஜனநாயக நாட்டின் அரசியல் அமைப்பில் மக்களின் அடிப்படை மனித உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்.
உதாரணம் : இலங்கை, இந்தியா, பிரித்தானியா

3) மக்கள் இறைமை
ஜனநாயக நாட்டில் மக்கள் இறைமை தெளிவாகவும் விளக்கமாக வும் அரசியல் யாப்பில் கூறப்பட்டிருக்க வேண்டும்.

உதாரணம் : இலங்கையில் 1978ம் ஆண்டு 2ம் குடியரசு யாப்பில் மக்கள் இறைமை என்ற விடயம் சேர்க்கப்பட்டுள்ளது.

4) பிரதிநிதித்துவ அரசாங்கம்

5) காலத்துக்குக் காலம் நடைபெறும் சுதந்திரமானதும் நியாயமானது மான தேர்தல்கள்.
ஜனநாயகத்தை பின்பற்றும் சகல நாடுகளிலும் காலத்துக்கு காலம் தேர்தல் நடைபெறுவது அவசியமாகும்.

உ-ம் அமெரிக்கா, பிரித்தானியா, இலங்கை, இந்தியா, அவுஸ்தி ரேலியா போன்ற நாடுகளில் தேர்தல் காலத்துக்குக் காலம் நடைபெறுகின்றது. இலங்கையில் ஜனாதிபதி தேர்தலும், பொதுத் தேர்தலும் 6 ஆண்டுக்கு ஒரு முறை நடைபெறுகின் றது. இதே போல இந்தியாவில் 5 ஆண்டுக்கு ஒருமுறை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுத் தேர்தலும், அமெரிக்காவில் 4 வருடத்துக்குஒரு முறை ஜனாதிபதித் தேர்தலும், பிரித்தானியாவில் 5 வருடத் துக்கு ஒரு முறை பொதுத் தேர்தலும் நடைபெறுகிறது. இந்தத் தேர்தல் சுதந்திரமாகவும் நீதியானதாகவும் நடை பெறுவது அவசியமாகும்.

6) யாப்புறு அரசாங்கம்
7) பொறுப்புடைய அரசாங்கம்
8) சட்டத்தின் ஆட்சி பின்பற்றப்பட வேண்டும்.
"சட்டத்தின் முன் யாவரும் சமன்" என்ற தத்துவத்தை அடிப்படை யாகக் கொண்டது.
ஆளப்படும் மக்களும் ஆட்சி செய்வோரும் சட்டத்தின் கீழ் சமமான வர்கள். சட்டத்தில் யாவருக்கும் சமமான பாதுகாப்புக் கிடைக்கப்பட வேண்டும் என்ற கருத்தையும் தருகின்றது.

ஜனநாயக நாடுகளில் ஒன்றான பிரித்தானியாவில் சட்டத்தின் ஆட்சி அதிகமாக பின்பற்றப்படுகின்றது.

9) நீதித்துறை சுதந்திரம்
ஜனநாயகம் அரசாங்கத்தின் சிறப்பான செயற்பாடுகளுக்கு பாரபட்ச மற்ற நிர்வாகமும் நீதித் துறையின் சுதந்திரமும் முக்கியமானதாகும் நீதிபதிகள் சுதந்திரமாகவும், நியாயமாகவும், பக்கச்சார்பின்றி நீதி வழங்குவதை உறுதிப் படுத்துவதே நீதித் துறைச் சுதந்திரமாகும். இதனை மேற்கொள்வதற்கு நீதிபதிகளின் சம்பளம், ஓய்வூதியம், வயது எல்லை, கட்டுப்பாடற்ற நிலை போன்றன தெளிவாக கூறப் பட்டிருக்க வேண்டும். நீதிபதிகள் நீதியை வழங்குவதற்கு எவ்வித தடையும் இருக்கக் கூடாது.

10) போட்டித்தன்மை வாய்ந்த அரசியல் கட்சி முறை இருத்தல் வேண்டும். ஒரு பொதுவான அரசியல் பொருளாதார கோட்பாட்டின் கீழ் ஒன்றி ணைந்து அரசியல் அதிகாரத்தினைக் கைப்பற்றுவதற்கு போராடு கின்ற அதிகாரத்தைப் பெற்றதன் பின்னர் தமது அரசியல் பொருளா தார கொள்கைகளை நடைமுறைப்படுத்துவதனை நோக்கமாகக் கொண்ட மக்கள் குழுவே அரசியல் கட்சிகளாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜனநாயக நாடுகளில் போட்டித் தன்மையுள்ள கட்சிகள் காணப்படுதல் அவசியமாகும். இவ்வகையில் இந்தியா, இலங்கை, அமெரிக்கா, பிரித்தானியா போன்ற நாடுகளில் அரசியல் கட்சி முறை போட்டித் தன்மை வாய்ந்ததாகவுள்ளது. இலங்கையில் U.N.P. உம், S.L.F.P. யும் வித்தியாசமான முறையில் போட்டித்தன்மை உள்ள கட்சிகளாகும். இந்தியாவில் இந்தி தேசிய காங்கிரஸ் B.J.P போன்ற கட்சிகளும், பிரித்தானியாவில் பழமை பேணும் கட்சி, தொழில் கட்சிகளும், அமெரிக்காவில் குடியரசுக்கட்சி, ஜனநாயக கட்சிகளும் போட்டித் தன்மை வாய்ந்த கட்சிகளாக இருக்கின்றன.

11) சுதந்திர ஊடகங்கள்
ஜனநாயக நாட்டில் பத்திரிகை, சஞ்சிகை, வானொலி, தொலைக் காட்சி போன்ற தொடர்பு சாதனங்கள் சுதந்திரமாக செயற்பட வேண்டும்.

12) அமுக்கக்குழுக்களின் செயற்பாடுகள் :
அரசியல் ரீதியாக எந்தக் குறிக்கோளோ நோக்கங்களோ அற்ற மக்கள் தொகுதியாக அமுக்கக்குழுக்களை குறிப்பிடலாம்.

ஜனநாயக நாடுகளில் அமுக்கக் குழுக்களின் செயற்பாடுகள் முக்கியமானதாகும். வளர்ச்சியடைந்துவரும் ஜனநாயக நாடுகளை விட வளர்ச்சியடைந்த ஜனநாயக நாடுகளில் அமுக்கக் குழுக்களின் செயற்பாடுகள் அதிகமானதாக காணப்படுகின்றது.

13) ஜனநாயகத் தன்மையிலான செயற்பாடுகள்

14) பொதுசன அபிப்பிராயம்
அரசாங்கம் மற்றும் அதன் செயற்பாடுகள், அரசியல் ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள், அரசியல் ரீதியான முக்கியத் துவம் மிக்க நிகழ்வுகள், என்பன பற்றி பொதுமக்கள் வெளிப் படுத்தும் கருத்துக்களில் பொதுமைப்படுத்தப்பட்ட நிலையே பொதுசன அபிப்பிராயமாகும்.

பொதுவாக ஒரு ஜனநாயக அரசின் வெற்றி பலம் வாய்ந்த பொதுசன அபிப்பிராயத்திலேயே தங்கியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

15) அரசாங்கக் கட்சியும் எதிர்கட்சியும்

பெரும்பான்மை மக்களின் விருப்பத்தை பெற்ற கட்சி அரசாங்கக் கட்சியாகும். அரசாங்க கட்சிபெற்ற விருப்பத்தை விடக் குறைவாக விருப்பத்தைப் பெற்ற கட்சி அல்லது கட்சிகள் எதிர்க்கட்சி எனப்படும். அரசாங்கக் கட்சியும் எதிர்கட்சியும் மாறான கருத்துக் களை சகிக்கும் பண்பு, அக்கருத்துக்கள் பற்றி சிந்தித்தல் ஆகியன ஜனநாயக நாட்டுக்கு முக்கிய பண்புகளாகும்.

அரசாங்கக்கட்சி எதிர்கட்சியின் கருத்துக்களை செவிமடுப்பதைப் போலவே எதிர்கட்சியும் பயனுறுதி வாய்ந்த கருத்துக்களையே முன்வைக்க வேண்டும். அரசாங்கக் கட்சியின் சகல திட்டங் களையும் எதிர்ப்பதுதான் எதிர்க்கட்சியின் கடமையாக இருத்தல் கூடாது.

## ஜனநாயகத்தின் நன்மைகள்

1. ஆண், பெண் இருபாலாருக்கும் வாக்குரிமை என்றபேரில் சமத்து வம் வழங்கப்படுகின்றது.
2. மக்களுக்கு ஆட்சியாளர்கள் பொறுப்புச்சொல்ல வேண்டும்.
3. மக்கள் நன்கு அரசியல் பயிற்சியை பெறுகின்றனர்.
4. பொருளாதார வளர்ச்சி, முன்னேற்றமும் அபிவிருத்தியும் ஏற்படும்.
5. அரசியலில், பொருளாதார, சமூக விளைவுகளை மக்கள் நேரடி யாகவும் மறைமுகமாகவும் அனுபவிப்பர்.
6. சூழ்ச்சிகள், வன்செயல்கள், ஆர்ப்பாட்டங்கள், யுத்தம் ஏற்பட வாய்ப்புக்கள் குறைவு.
7. மக்கள் அரசியலில் பங்குபற்றுவதற்கான வாய்ப்பு அதிகரிப்ப தோடு அரசில் அறிவும் ஜனநாயகத்தில் ஏற்படும்.
8. ஜனநாயகம் அறிமுகப்படுத்தப்பட்டதால் உரிமை, சுதந்திரம், சமத்துவம் சகோதரத்துவம் போன்ற எண்ணக்கருக்கள் வளர்ச்சி அடைந்தன.
9. அரசியலிலும் கல்வியிலும் விழிப்புணர்ச்சிகள் ஏற்பட்டன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஜனநாயகத்தின் குறைபாடுகள்

1. பழமை வாதப் பண்புடைய ஒரு கோட்பாடு அல்லது அரசாங்க முறை என இது கண்டிக்கப்படுகிறது. ஏனெனில், ஆட்சியதிகாரம் மக்களிடமுள்ளதால் தீர்மானமெடுக்கும் முழுப் பொறுப்பையும் சராசரி மனிதர்களே கொண்டுள்ளனர். ஆகவே, புதிய நவீன வளர்ச்சிப் போக்குக்கேற்ப தம்மை அவர்கள் இலகுவில் மாற்றிக் கொள்வதில்லை.

2. ஜனநாயகம் மக்களாட்சி என வர்ணிக்கப்பட்டபோதும் அதன் உள்ளார்ந்த தன்மை குறித்து சந்தேகம் தெரிவிக்கப்படுகிறது. ஏனெனில், இங்கு வாக்குகளின் எண்ணிக்கை மட்டுமே கவனத்தில் எடுக்கப்படுகிறது. ஏனைய விடயங்களுக்கு குறைந்த முக்கியத்துவத்தையே வழங்கப்படுகிறது.

3. அநேக ஜனநாயகங்களில் மக்கள் அரசுடன் அல்லது அரசாங்கத்துடன் மிக குறைந்த தொடர்புகளையே கொண்டுள்ளனர். அவர்கள் தம் சொந்த விடயங்களில் கொண்டுள்ள அக்கறையை ஆட்சிமுறை குறித்து செலுத்துவதில்லை. மக்கள் தமது ஆட்சி முறையில் தாமே ஆட்சியாளர்கள் என்பதை அநேக சந்தர்ப்பங்களில் தெளிவர புரிந்து கொள்வதில்லை.

4. அநேக ஜனநாயகங்களில் மக்கள் போதியளவு கல்வியறிவற்றவராக இருப்பதாலும் அதன் வழி தம்மை எதிர் நோக்கும் நெருக்கடிகளில் சரியான தீர்மானத்துக்கு வர முடியாதிருப்பதும் கூட குறைபாடுகளேயாகும்.

5. மக்கள் போதியளவு கல்வியறிவு அற்றவர்களாக இருக்கும் போது இனவாதம், வகுப்பு வாதம் போன்ற புறக் காரணிகள் தேசிய தீர்மானங்களில் தாக்கம் செலுத்தக் கூடுமெனவும் மக்கள் இலகுவாக பேச்சாற்றலுடைய நபர்களின் விருப்புக்கிணங்க தீர்மாணங்களை மேற் கொள்ளவும் அல்லது திசை திருப்பப்படவும் அல்லது தவறான வழி நடத்தப்படவும் சந்தர்ப்பம் உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. ஜனநாயகம் கட்சி முறையில் அதிகம் தங்கி இருக்கின்றமையால் அது இலகுவாக " குழு ஆட்சியின் இரும்புச் சட்டங்களை" பின்பற்று கிறது எனக் குறைகூறப்படுகிறது. தலைவர்கள் தீர்மானமெடுத்து அதை செயற்படுத்துகின்றனர். மக்கள் அதனை விரைவில் ஏற்றுக் கொள்கின்றனர். இதன் மூலம் அரசியல் கட்சிகளும், தலைவர் களும் ஜனநாயகத்தை குழுஆட்சி போலவே மாற்றிக் கொள்கின் றனர் எனக் கண்டிக்கப்படுகிறது.

7. தற்கால ஜனநாயகம் பிரதிநிதித்துவ ஜனநாயகமாகவே மாறிவிட்டுள்ள நிலையில் அதன் பிரதிநிதித்துவப் பண்பே குறைபாடுடையது என வர்ணிக்கப்படுகின்றது.

8. நவீன ஜனநாயகமானது முதலாளித்துவத் தன்மைமிக்கது. அது உண்மையில் பொருளாதாரம் வளம் மிக்க ஒரு குழுவினரின் நலன்களை மட்டுமே பிரதிபலிக்கின்றது எனக் கண்டிப்பவர்களும் உள்ளனர். இது குறிப்பாக மாக்ஸிய சித்தாந்தவாதிகளினால் முன்வைக்கப்படுகின்றது எனில் உண்மையில் இது தொழிலாளர் வர்க்கத்தினரை அடக்குவதற்கான சொத்துடைய வர்க்கத்தின் சர்வதிகாரமே என வாதிடுகின்றனர்.

9. ஜனநாயக முறைகளில் வாக்காளர்கள், பாராளுமன்ற உறுப்பினர் கள், உத்தியோகத்தர்கள் போன்றவர்கள் மிக இலகுவாகப் பணச் செல்வாக்குக்கு உட்படக்கூடிய தன்மையும் அதன் வழி மக்களுக்கு இடையில் அரசின் நலன்களில் பாராபட்சம் காட்டப் படக்கூடிய நிலை போன்றவற்றையும் சுட்டிக் காட்டப்படுகின்றன. அத்துடன், ஊழல், லஞ்சம் அதிகார துஷ்பிரயோகம் போன்ற வற்றுக்கும் வழிவகுக்கும் எனப்படுகிறது. இவ்விடத்தில் வாக்கு கள் பணமூலம் கொள்வனவு செய்யப்படுகிறமை, பணவலிமை உடையவர்கள் பிரச்சாரங்களில் ஏற்படுத்திக்கொள்ளக் கூடிய சாதக நிலை போன்றவையும் எடுத்துக் காட்டப்படுவது உண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10. ஜனநாயகத்தின் குறைபாடாக கால தாமதமும் சுட்டிக் காட்டப்படு கிறது. ஜனநாயக முறைமைகளில் அதிகாரமையம் தெளிவற்ற தாகவும், அகலமானதாகவும் இருப்பதுடன் தீர்மானம் எடுக்கும் செய்முறையில் நாட்டிலுள்ள பல்வேறு நலன்களினதும் அபிப்பிரா யத்தை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமானதாகையால் காலதாமதம் ஏற்படுகின்றது.

## ஜனநாயகம் தோல்வியடைவதற்கான காரணங்கள்

1. பாரம்பரிய அரசியற் சட்ட அமைப்பினுள் பயன்தரும் அரசியற் தலைமை உருவாகும் ஆற்றலின்மை.

2. பலவீனமுள்ள நிர்வாக அதிகாரிகளுக்கெதிரான எதிர்ச் செயல்கள்.

3. கடுமையான பொருளாதார இடர்பாடுகள்
உதாரணம் : வேலையில்லாப் பிரச்சினை.

4. அடிப்படை விடயங்களில் உடன்பாடின்மை.

5. பொது விவகாரங்களில் மக்கள் அக்கறை காட்டாதிருத்தல்.

6. ஜனநாயகத்திற்கு அவசியமான நன்கு வளர்ச்சியடைந்த பாரம் பரியங்கள் இல்லாதிருத்தல்.

7. மக்களிடையே ஒழுக்கக்கேடும், பயனற்ற தன்மை பற்றிய உணர்ச்சியும் நம்பிக்கை இழந்த நிலையும்.

## ஜனநாயகத்திற்கும் பாசிசத்திற்கும் உள்ள வேறுபாடுகள்

அரசறிவியல் கோட்பாடுகளுள் பாசிசம் தொடர்பான கருத்துக்கள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. மிகுந்த திட்டவட்டமான வரைவிலக் கணம் பாசிசத்திற்கு விளக்கப்படவில்லை தனியுரிமை முதலாளித்துவத் தின் தேய்ந்த நிலையைக் கட்டுப்படுத்துவதே பாசிசம் என்பர். இத்தாலியில் இடம்பெற்ற அரசியல் அமைதியின்மையால் அரசியல் வன்செயல்கள் தலைவிரித்தாடிய வேளையில் அரச அதிகாரத்தைக் கைப்பற்ற பெனிட்டோ முசோலினி முனைந்தபோது தான் "பாசிசம்" தொடர்பான எண்ணக்கரு பிரபல்யமடைந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெனிடோ முசோலினி 1833 இல் ஒரு ஏழ்மையான கொல்லர் குடும்பத்தில் பிறந்தவர். இளம் பிராயம் முதலே மாக்ஸிய கொள்கை களில் கவரப்பட்ட இவர் பின்னர் மாக்ஸிஸத்தை வெறுத்து 1919 இல் ஒரு கட்சியை அமைத்தார். சோசலிசத்துக்கு எதிராக இருந்த இவரது பாஸிஸக் கட்சி 1921 இல் பாராளுமன்றத் தேர்தலில் போட்டி யிட்டு ஓரளவு வெற்றிபெற முடிந்தாலும் கூட 1922இல் இத்தாலியில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களைப் பயன்படுத்தி நாட்டின் பிரதமரானார். பின்னர், தனது நிலையை திடம்படுத்திக் கொண்டு சர்வாதிகாரியாகி பாஸிஸத்தை நடைமுறைப்படுத்தத் தொடங்கினார். இவ்வாறாக இவரது பாஸிஸக் கட்சியும் இவனது பாஸிஸக் கொள்கைகளும் வெற்றியடைந் தமைக்கான காரணிகளால் பின்வருவனவற்றைக் குறிப்பிடலாம்.

1) 1ம் உலகப் போரில் இத்தாலி போதிய நன்மையைப் பெறாமை.
2) இத்தாலிய சமூகத்தில் மூலாதாரமான ஒற்றுமை நிலவியிராமை.
3) நாட்டில் ஏற்பட்ட பொருளாதார தோல்விகளுக்கும் பஞ்சநிலையும்
4) பாராளுமன்ற ஜனநாயகம் வேர்கொள்ளாமை.
5) சோசலிச நடவடிக்கைகளால் மத்தியதர வர்க்கம் சந்தேகப்பட்டமை.
6) வேலையில்லாப் பிரச்சினை.

இந்நிலைகளைப் பயன்படுத்தி இத்தாலிக்கு ஒரு உயர்ந்த நிலையைப் பெற்றுத் தருவதாகவும், இத்தாலியின் பழமையைப் பேணுவ தாகவும், மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதாகவும் மக்களுக்கு அளித்த வாக்குறுதிகளால் பாஸிஸக் கட்சி மீது மக்கள் நம்பிக்கை கொள்ளலாயினர். பாஸிஸம் வளர இது முக்கிய காரணியாகும்.

1. பாசிசம் என்பது சர்வாதிகாரநிலையாகும். ஆனால், ஜனநாயகம் அவ்வறானதல்ல.

2. மக்கள் இறைமை, மனித உரிமைகள், உறுதிப்படுத்தப்படுதல், நீதித்துறை சுதந்திரம், சுதந்திரமான தேர்தல், ஊடகத்துறைச் சுதந்திரம், சமத்துவம், சுதந்திரம் போன்ற எவ்விதப்பண்பும் பாசிச முறையில் காணப்படுவதில்லை ஆனால், இப்பண்புகள் ஜனநாயகத் தில் காணப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. பாசிசத்தில் மக்களன்றி அரசும் தேசமுமே முக்கிய இடத்தைப் பெறுகின்றது. அரசுக்கும் தேசத்துக்குமான மனித சுதந்திரத்தை அர்ப்பணம் செய்ய வேண்டும். ஆனால், ஜனநாயகத்தில் மக்களே முக்கியம் பெறுகின்றனர், மக்களுக்காகவே அரசாங்கம்.

4. ஜனநாயகம் ஏன்பது மனிதன் மிகக் குறைந்தளவு கட்டுப்படுத்தப் படும் ஒரு நிலையாகும். ஆனால் பாசிசத்தில் மனிதன் அதிகளவு கட்டுப்படுத்தப்படுகின்றான்.

5. ஜனநாயகம் முழுமையான ஒரு சமூக வாழ்க்கையை மனிதனுக் குப் பெற்றுச் கொடுப்பதற்குத் தேவையான அரசியல், பொருளா தார, சமூகச் சூழலை உருவாக்கித்தர முயல்கின்றது. ஆனால், பாசிசம் அரசு எனும் பலீபீடத்தில் மனிதனைப் பலியிடுகிறது.

6. பாசிசம் அரசின் உயர் தன்மையை வெளிப்படுத்துவதுடன் சகல வழிகளிலும் தமக்கு அதிகாரத்தைப் பெற்றுக் கொடுக்கிறது. இதன்படி அரசின் நோக்கம் அரசேயாகும். அரசின் அதிகாரத்தைப் பலப்படுத்துவதும் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதும் அரசின் கடமையாகும்.

## பாசிசக் கோட்பாட்டின் சாராம்சம்

- ✦ பாசிசத்தில் ஆட்சிமுறைகள் தனிமனிதனிடம் அல்லது ஒரு சிறு குழுவினருடைய கையில் எல்லா அதிகாரங்களும் இருக்கும்.
- ✦ சர்வஜன வாக்கெடுப்பு முறை பயன்படுத்தப்படமாட்டாது.
- ✦ மக்கள் விரும்பியவாறு அரசியல் கட்சி அமைக்கவோ செயற்படவோ முடியாது.
- ✦ பேச்சு, கருத்து வெளிப்பாடு, கூட்டம் கூடுதல், சுதந்திரம், கட்டுப்பாடு, சமத்துவம் போன்றன முற்றாக தடைசெய்யப்பட்டதாக காணப்படும்.
- ✦ அரசு மனமுவந்து ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்ததல்ல. அரசின் அடிப்படையே வுன்முறையின் வலிமைதான் வன்முறைக் குப் பயந்துதான் மனிதர்கள் சில விடயங்களை ஒப்புக் கொள்ளு கின்றார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

✦ இறைமை மக்களிடம் இல்லை. அது, அரசிடமே இருக்கின்றது. மக்களாட்சி ஒரு மூடத்தனமான ஊழல் நிறைந்த மிகவும் மெது வாகச் செயல்படுகின்ற நடைமுறைக்கு ஒவ்வாத திறமையற்ற ஆட்சி முறை. அதுவொரு அழுகிக் கொண்டிருக்கும் பிணத்தைப் போன்றது.

✦ பாராளுமன்றங்கள் வெறும் பேச்சுச் சந்தைக்கூட்டங்கள்.

✦ சிந்தனைத் தெளிவற்ற பலரும் வாக்குரிமை பெறுவதால் மக்களாட்சியில் நல்ல அரசாங்கம் அமைய முடியாது.

✦ முதலாளித்துவமும், சோசலிசமும் தவறான கொள்கைகள் போர் உலகில் தவிர்க்க முடியாத ஒன்று. சர்வதேச அமைதி என்பது கோழையின் கனவு.

## நேரடி ஜனநாயகக் கருவிகள்

1. பொதுசன அபிப்பிராயம்

ஜனநாயகக் கருத்துக்கள் உலகிலே பரவுவதற்கு முன்னர் பொதுசன அபிப்பிராயத்திற்கு தேவையிருக்கவில்லை. ஆட்சியாளர் கள் தெய்வீக உரிமையுள்ளவர்கள் என்று மக்கள் நம்பியதால் அவர்கள் ஆட்சியாளர்களைத் தண்டிக்கவோ நிர்வாகத்தை விமர்சிக்கவோ இல்லை. 19ம் நூற்றாண்டின் பின்பு மக்கள் நலனை செயல்படுத்தும் கருவியே அரசாங்கம் என்றும் மக்களின் சேவகர் அரசாங்க உத்தியோகத்தர்கள் என்றும் ஜனநாயகக் கருத்துக்கள் பரவலாயிற்று. இக்கருத்துக்களைச் செயல்படுத்த அரசாங்கத்தை வழிநடத்திச் செல்ல உதவுகின்ற ஒன்றே பொதுசன அபிப் பிராயமாகும்.

மேலும், அரசாங்கம் மற்றும் அதன் செயற்பாடுகள், அரசியல் ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த நபர்கள், அரசியல் ரீதியாக முக்கியத்துவமிக்க நிகழ்வுகள் என்பன பற்றி பொதுமக்கள் வெளிப்படுத்தும் கருத்துக்களின் பொதுமைப்படுத்தப்பட்ட நிலையே பொதுசன அபிப்பிராயமாகும். மேற்குறிப்பிட்ட மூன்று விடயங்களில் ஏதேனும் ஒன்றுடன் தொடர்புபடும் நிகழ்வினை அடிப்படையாகக் கொண்ட சிறந்த முறை என விளங்கிக் கொள்ளலாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுசன அபிப்பிராயத்தின் இயல்புகள்

1. மேற்குறிப்பிடப்பட்ட ஏதேனும் ஒரு விடயம் தொடர்பாக ஆதரவாகவும் எதிராகவும் பொதுஜன அபிப்பிராயம் உருவாகலாம். என்றும் அவ்விடயம் தொடர்பாக உடன்பாடு ஏற்பட்டதன் பின்னர் பொதுசன அபிப்பிராயம் முடிவுறும் என்றும் தெரிகிறது. இதனால், பொதுசன அபிப்பிராயத்தின் சிறப்பு நிகழ்காலத்தோடு மட்டும் சுருங்கிக் காணப்படுவதால் அதற்கு இறந்த காலமோ எதிர்காலமோ இல்லை.

2. அரசியல் சமூகரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த சகல நிகழ்வுகள் தொடர்பாகவும் பொதுசன அபிப்பிராயம் உருவாகாமையாகும் சிலவேளை அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒரு நிகழ்வு பற்றிக்கூட பொதுசன அபிப்பிராயம் உருவாகாதிருக்கலாம். சிலவேளை முக்கியம் குறைந்த ஒரு சிறிய நிகழ்ச்சி பற்றி பலம்வாய்ந்த பொதுசன அபிப்பிராயம் தோன்றலாம்.

3. பொதுசன அபிப்பிராயம் என்பது மக்களின் குரலாயினும் சிலவேளை சமூகத்தின் சக . ரும் ஒரு குறிப்பிட்ட நிகழ்வு சம்பந்தமாகத் தப ! தனிப்பட்ட அபிப்பிராயத்தை வெளிப்படுத்தாது இருத்தல் பிறிதொரு பண்பாகும். ஒருவிடயம் பற்றி மனிதர் பெற்றுள்ள அறிவு புரிந்திருக்கும் தன்மை, விருப்பு, வெறுப்பு, போன்ற அம்சங்களிலேயே அவ்விடயம் பற்றி தமது அபிப்பிராயத்தை வெளிப்படுத்தல் தங்கியுள்ளது.

## பொதுஜன அபிப்பிராயம் உருவாகுவதில் பாதிப்புச் செலுத்தும் காரணிகள்

1. குடும்பம்
2. கல்வி
3. சமயம்
4. சமூகத் தாபனங்கள்
5. தொடர்புச் சாதனங்கள்
   Eg : வானொலி, தொலைக்காட்சி, பத்திரிகைகள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

6. அரசியல் கட்சிகள்
7. அமுக்கக் குழுக்கள்
8. அபிப்பிராயத் தலைவர்கள்
9. பொருளாதார விடயங்கள்
10. சுவரொட்டிகள்
11. துண்டுப்பிரசுரங்கள்
12. பிரச்சார செய்தி வெளியீடுகள்
13. மேடைப்பேச்சு
14. சஞ்சிகைகள்
15. புத்தகங்கள்

## பொதுஜன அபிப்பிராயம் தாக்கமானதாகவும் பலமானதாகவும் இருக்க வேண்டிய முன் நிபந்தனைகள்

1. பொதுமக்கள் புத்தியசாலிகளாகவும் பொது விடயங்களில் ஈடுபாடு உள்ளவர்களாகவும் இருத்தல்.
2. மக்கள் ஒருமைப்பாடு உள்ளவர்களாகவும், பொதுநலனுடையவர் களாகவும் இருத்தல்.
3. இன, மத, வர்க்க வேறுபாடுகள் பாரிய அளவில் இடம்பெறாது இருத்தல்.
4. அரசாங்க இயல்புகள் பற்றியும், தேசிய இலக்குகள் பற்றியும் மக்களிடையே ஒருவித ஒருமைப்பாடு நிலவுதல்.
5. பொதுசன தொடர்பு சாதனங்கள் நடு நிலமைப்போக்குடன் செயலாற்றுதல்.
6. அபிப்பிராயம் தெரிவிக்கும் உரையாடும் சுதந்திரம் நிலவுதல்.
7. சிறுபாண்மைத் குழுக்களுக்கு சமாதானமான முயற்சியில் தமது கருத்துக்களை வெளியிடக்கூடிய உரிமை இருத்தல்.
8. அபிப்பிராயங்களை சுதந்திரமாக வெளியிடக்கூடிய சூழல் இருத்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பொதுசன அபிப்பிராயத்தின் நன்மைகள்

1. அரசாங்கம் மற்றும் அதன் செயற்பாடுகள், அரசியல் ரீதியாக முக்கியம் வாய்ந்த நபர்கள், நிகழ்வுகள் என்பன பற்றி மக்கள் கொண்டுள்ள கருத்துக்கள் வெளிப்படுத்தப்படுதல்.
2. பொதுக் கொள்கைகளை வகிக்கும் போது பொதுசன அபிப்பிராயத்தின் முக்கியத்துவம் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது.
3. ஜனநாயக ஆட்சி முறையின் சிறப்பான இருப்புக்கு பொதுசன அபிப்பிராயம் அவசியம்
4. இரு பொதுத் தேர்தல்களுக்கிடைப்பட்ட காலப்பகுதியில் அரசியல் செய்முறையில் பங்குபற்றுவதற்கு மக்களுக்குள்ள ஒரு வழி முறையாக இது அமைதல்

## பொதுசன அபிப்பிராயத்தின் குறைபாடுகள்

தர்க்க ரீதியானதும் பிழையற்றதுமான கருத்தை வெளியிடும் அளவுக்கு அறிவோ, ஞானமோ புரிந்து கொள்ளும் தன்மையோ சாதாரண மக்களிடம் காணப்படுவதில்லை என்றும் அதனை மக்கள் முன்வைக்கும் அபிப்பிராயம் முழுமையாகச் சரியாக இருக்கமாட்டாது என்றும் குறை கூறப்படுகின்றது.

## அமுக்கக் குழுக்கள்

அரசியல் அதிகாரத்தை அடைவதனை பிரதான நோக்கமாகக் கொண்டிராத, ஆனால், அரசியல் தீர்மானங்களில் சக்திமிகு பங்களிப்பை ஆற்றும் குழுக்கள் அமுக்கக் குழுக்கள் எனப்படும்.

அரசாங்கத்தின் கொள்கைகளை விமர்சித்து அரசாங்க நடவடிக்கைகளை ஸ்தம்பிதம் அடையச் செய்யும் ஆளுமைப்போக்கு இக்குழுக்களுக்கு உள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் ரீதியாக ஒத்த குறிக்கோளோ அற்ற மக்கள் தொகுதியாக அமுக்கக் குழுக்களைக் குறிப்பிடலாம். ஒரு நாட்டில் செயற்படும் எல்லா அமுக்கக் குழுக்களும் ஒத்த தன்மை வாய்ந்தவையாக இருப்பதில்லை. மாறாக, சில அமுக்கக் குழுக்கள் தனித்துவ அபிலாசைகளையும் வேறு சில அமுக்கக் குழுக்கள் பிரத்தியேக அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் எழுந்துள்ளன. ஆனால், இதன் முக்கியம் அரசியல் முறையில் மிகவும் அவசியமாகும்.

சில அமுக்கக் குழுக்கள் தேர்தல் தொகுதிகளில் பிரச்சாரங்களையும் வேறு நிர்வாக நிரூபணத் துறைகளிலும் கட்சிகளின் முக்கியத்தை திருப்புகின்றன. வேறு சில நடைமுறையில் தீவிரத்தன்மையை கையாள்வதோடு தமது நடவடிக்கைகளில் வெற்றி காணும் பொருட்டு கூடிய செலவுகளையும் செய்கின்றன.

அரசியல் ஆய்வில் அமுக்கக் குழுக்களானது எதிர்பார்க்கும் அளவிற்கு எற்ப முடிவுகளை அளித்த போதும் இரு விதங்களில் முக்கியத்துவம் பெறுகின்றன.

1. அமுக்கக்குழுக்கள் பிரதிநிதித்துவ முறையில் செல்வாக்குச் செலுத்தி அதனூடாக முக்கியம் பெறுகின்றன.
2. சில துறைகளில் அமுக்கக் குழுக்களின் முக்கியத்துவம் ஒரு சமூகம் எந்தளவுக்கு நவீனத்துவம் அடைந்துள்ளது என்பதில் தங்கியுள்ளது. அரசியல் துறையில் அமுக்கக் குழுக்களது முக்கியத்துவத்தை நவீனத்துவம் அளிக்கின்றது.

## அமுக்கக் குழுக்கள் எழுச்சியடைவதற்கான காரணங்கள்

1. சனத்தொகை அதிகரிப்பாலும்
2. புதிய பிரச்சினைகள், புதிய தேவைகள் எழுவதாலும், புதிய குழுக்கள் எழுவதற்கு வழி ஏற்படுகிறது.
3. அமெரிக்காவில் காணப்படும் நெகிழா யாப்பும் வலுவேறாக்கத் கொள்கையும் அமுக்கக் குழுக்களது முக்கியத்துவத்தை அதிகரித்துள்ளன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

4. அரசின் கடமைகள் நாளுக்கு நாள் அதிகரிப்பதால் அரசு மக்களது அபிலாசைகளை பூர்த்தி செய்யமுடியாத போது மக்கள் சமூகக் குழுக்களை நாடுகின்றனர்.

## அமுக்கக் குழுக்களது கடமைகள்

பிரஜைகட்கு உபயோகப்படும் நோக்கிலேயே இவை எழுகின்றன.

1. இன்று இவை மக்களுக்குப் பொதுவிடயங்களைப்பற்றி அறிவிப்ப தோடு அறிவும் புகட்டுகிறது.
2. அரசுக்கும், மக்களுக்கும் இடையே உறவை ஏற்படுத்தும் பாலமாக வும் அமைகிறது.
3. சட்டவாக்கத்தில் ஈடுபடுவோருக்கும், வேறு உத்தியோகத்தவர் களுக்கும் ஆலோசனை கூறுவதோடு அரசு செயற்படும் விதத் தையும் விமர்சிக்கிறது.
4. இவை தனிப்பட்ட பிரஜைகளது பிரச்சினைகளை அதிகாரிகட்கு எடுத்துச்செல்ல உதவுகிறது.
5. அரசியல் தலைவர்களுக்கு பயிற்சியளிக்கிறது.
6. சிலவேளை கட்சிகளை விட சிறப்பாக அரசியற் பொறுப்புக்களை வெற்றிகரமாக செயற்படுத்துகின்றன.
7. பொதுமக்கள் தகுந்த முறையில் தீர்மானங்களை மேற்கொள்ள சில குழுக்கள் உதவுதல்.

## பிரச்சாரம்

சில அமுக்கக் குழுக்கள் சொந்த குறிக்கோளை நிறைவேற்ற எழுவதால் அவற்றை நிறைவேற்றத் தகாத வழிமுறைகளையும் பின்பற்றலாம். இவை தர்க்கம் செய்தல், சொற்களால் விளக்குதல் பகிரங்கப்படுத்தல் போன்ற முறைகளில் மக்களை தம்வயம் இழுக் கின்றன. தர்க்க ரீதியாக விவாதித்து மக்கள் ஆதரவை பெற முயல் கின்றன. மேலும், செய்திப்பத்திரைகை மூலம் தமது கொள்கைகளை விளக்க முற்படுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**குறைபாடுகள் :**

1) பொதுநலன் பேணாது சுயநலமிக்கது.
2) குறிக்கோள்களை அடைய இலஞ்சம், ஊழல் போன்றவற்றில் ஈடுபடுகின்றன.
3) பெரும்பாண்மை அமுக்கக் குழுக்கள் ஜனநாயக முறையில் நிறுவப்படாதவை.
4) அமுக்கக் குழுக்களது தவறுகளை தெரியும் உரிமை மக்களுக்கு இல்லை.
5) அமுக்கக் குழுக்கள் கொள்கைகளை உருவாக்கும் போது மக்களது பங்குபற்றல் இருப்பதில்லை.
6) சமூகத்திலும், தேசத்திலும் பிளவுகளையும் ஒற்றுமையீனத்தையும் வளர்க்கிறது.
7) அரச ஜனநாயகப் பாதையில் இயங்கவிடாது தடுக்கிறது.

அரசியற் கட்சிகளும் அமுக்கக்குழுக்களுக்கு ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்றன. இக் குழுக்கள் கட்சிகள் மூலம் அதிகாரத்தை தடுக்கின்றன. அதேவேளை, கட்சிகள் தமது அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக அமுக்கக் குழுக்களது ஆதரவையும் பக்கபலத்தையும் நாடுகின்றன.

சில இவற்றிக்கு இடையிலான ஒரு தொடர்பை எந்த நாட்டிலும் காணப்படும் குறிப்பாக அமெரிக்காவில் கட்சிகளது தளர்பான கட்டமைப்பினாலும் சமஷ்ட்டித் தன்மையினாலும் கட்சிக்கும் அமுக்கக் குழுக்களுக்கும் இடையில் ஓர் நெருக்கமான உறவு காணப் படுகின்றது. கட்சிகள் தளர்வாக உடைய நாட்டில் அமுக்கக் குழுக்கள் பலமாகவும் கட்சிகள் பலமாய் உள்ள நாட்டில் அமுக்கக் குழுக்கள் தளர்வாக இருப்பதையும் காணலாம்.

அமுக்கக் குழுக்கள் கொள்கைகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு கட்சி அலகுகள் ஊடாக அரசியல் செல்வாக்கைச் செலுத்த முற்படுகின்றன. இவ்விரண்டும் அரசியல் அதிகாரத்தை பகிர்ந்து கொள்வதே அவற்றினது அபிலாசைகளும் குறிக்கோளும் ஆகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமுக்கக் குழுக்களும் அரசியற் கட்சிகளுக்கும் இடையிலான வித்தியாசங்கள் வருமாறு :

| அரசியற் கட்சிகள் | அமுக்கக் குழுக்கள் |
|---|---|
| 1 நேரடியாக அரசியலில் ஈடுபடுபவை | 1. நேரடியாக அரசியலில் ஈடுபடாதவை |
| 2. பொதுநல நோக்கங்களைக் கொண்டவை | 2. குறிப்பிட்ட நோக்கத்தை மட்டும் கொண்டவை Eg : சினிமா, மதம்(சுயநலம்) |
| 3. ஆளும் கட்சி, எதிர்க்கட்சி என்ற வேறுபாடு காணப்படும் | 3. அவ்வாறில்லை ஆனால், தங்களது நலனுக்கு ஆதர வளிப்போரோடு சேர்ந்திருக் கும். இது எதிர்க்கட்சியிலோ ஆளும் கட்சியிலோ இருக்கலாம். |
| 4. நிரந்தரமான அமைப்புக்களாக செயற்படும் | 4. தங்களின் நோக்கம் நிறை வேறியவுடன் கலைந்துவிடும். |

# ஒப்பங்கோடல் அல்லது மக்கள் தீர்ப்பு

ஒப்பங்கோடல் ஒரு பிரதான நேரடி ஜனநாயக முறையாகும். ஓர் அரசாங்கம் பிறப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் முக்கியமான சட்டங்கள் அல்லது கொள்கைகள் மற்றும் அரசியல் யாப்புச் சீர்திருத்தங்கள் பற்றிய தீர்மானங்களை மக்களிடம் சமர்ப்பித்து அவர்களின் அபிப்பிராயத்தை அளவிட்டறியும் முறையே ஒப்பங்கோடலாகும்.

கிட்லர், நெப்போலியன், அன்வர் சதாத் போன்றவர்கள் தமது பதவிக் காலத்தை நீடிப்பதற்கு இதனை பயன்படுத்தியுள்ளனர். இலங்கையில் 1978ம் ஆண்டு 2ம் குடியரசு யாப்பில் ஒப்பங்கோடல் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ் 2ம் குடியரசு யாப்பின் நான்காம் சரத்தின்படி மக்களின் சட்டவாக்க அதிகாரம் மக்களின் பிரதிநிதிகள் கொண்ட பாராளுமன்றத்தினூடாகவும் ஒப்பங்கோடலின் போதும் மக்களினால் நடைமுறைப்படுத்தப்படும் அரசியல் யாப்பின்படி பின்வரும் சந்தர்ப்பங்களில் ஒப்பங்கோடல் நடாத்தப்படல் வேண்டும்.

1. யாப்பின் ஒன்று, இரண்டு, மூன்று, ஆறு, ஏழு, எட்டு, ஒன்பது, பத்து ஆகிய சரத்துக்களை திருத்தும் ஒரு சட்டமூலம்.

2. யாப்புக்கு முரணானது என்று உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ள ஒரு மசோதாவை திருத்துவதற்கு ஒப்பங்கோடலில் பொதுமக்களின் அங்கீகாரத்தையும் பெற்றுக்கொள்ள வேண்டும். என உயர் நீதி மன்றம் குறிப்பிடும் ஒரு சட்டமூலம்.

3. ஒப்பங்கோடலுக்கு விடப்படல் வேண்டும் என அமைச்சரவை தீர்மானிக்கும் ஒரு சட்டமூலம்.

4. பாராளுமன்றத்தினது அல்லது ஜனாதிபதியினது பதவிக் காலத்தை நீடிப்பது சம்பந்தமானதொரு சட்டமூலம்.

5. பாராளுமன்றத்தினால் அங்கீகரிக்கப்படாத ஆனால், நடைமுறைப் படுத்தப்படுவது அத்தியவசியமானது என ஜனாதிபதி கருதும் ஒரு சட்டமூலம் மக்களின் அங்கீகாரத்துக்கு விடப்படல் வேண்டும் என ஜனாதிபதி தீர்மானித்தல்.

6. தேசிய நலனுக்கு அவசியமானது என ஜனாதிபதி கருதும் எந்த வொரு சட்டமூலமும்.

ஒப்பங்கோடலை நடத்துவது பற்றிய தீர்மானத்தை எடுக்கும் அதிகாரம் ஜனாதிபதிக்கேயுண்டு. தேர்தல் ஆணையாளரே ஒப்பங்கோடலை நடாத்துவார். அவ்வொப்பங்கோடலில் வாக்களித்த மொத்த வாக்குகளில் அறுதிப் பெரும்பாண்மையைப் பெற்றால் மக்களின் அங்கீகாரம் கிடைத்ததாக கருதப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒப்பங்கோடலின் நன்மைகள்

1. அரசாங்கம் பிறப்பிப்பதற்கு எதிர்பார்க்கும் அல்லது பிறப்பிக்கும் ஒரு சட்டம், முக்கியமான அரசியல், பொருளாதார, சமூகக் கொள் கைகள் என்பன பற்றி நாட்டு மக்களின் அபிப்பிராயத்தை அறிய முடிதல்
2. பாராளுமன்றத்தில் கட்சிச் சார்புடைய வகையில் சட்டம் நிறை வேற்றப்படும் குறைபாட்டை நிவர்த்தி செய்தல்.
3. பெரும்பான்மையினரின் ஆதிக்கத்தில் இருந்து சிறுபாண்மையினர் பாதுகாப்பு பெறுவதற்கான வாய்ப்பு.
4. மக்களின் அரசியல் அறிவு வளர்ச்சியுறுதல்.
5. மக்கள் தாம் விரும்பும் சட்டங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கும் தாம் விரும்பாத சட்டங்களை நிராகரிப்பதற்குமான வாய்ப்பு.

## ஒப்பங்கோடலின் தீமைகள்

1. பலம் வாய்ந்த கட்சிமுறை நிலவும் போது ஒப்பங்கோடலில் உண்மையான மக்கள் அபிப்பிராயம் வெளிப்படாமை.
2. முற்போக்கான சட்டங்களைப் பிறப்பிப்பதற்கான வாய்ப்பு குறை வாகக் காணப்படுதல்.
3. சட்டத்துறையின் முக்கியமும் கௌரவமும் குறைதல்.
4. அதிக செலவினை ஏற்படுத்தும் முறையினதாக இருத்தல்.
5. காலதாமதம் ஏற்படுதல்.
6. அறிவுள்ள மக்கள் இல்லாத போது சிறந்த சட்டங்களையும் கொள்கைகளையும் பிறப்பிப்பதற்கான வாய்ப்பு குறைவாகக் காணப்படுதல்.
7. ஒப்பங்கோடலில் பரந்த மக்கள் பங்குபற்றுதல் இடம்பெறாவிடின் அதன் மூலம் பிறப்பிக்கப்படும் சட்டங்களுக்குத் தார்மீகத்தளம் கிடைக்காமை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

8. ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தை முறையற்ற வகையில் பிரயோகிப்பதற்கான வாய்ப்பை பெறுதல்.

9. அதிகாரத்தில் இருக்கும் அரசாங்கம் இதன் மூலம் முறையற்ற பாதிப்பை செலுத்த முடிதல்.

## ஒப்பங்கோடல் வெற்றிகரமாக அமைவதற்குரிய முன் நியந்தனைகள்

1. அரசியல், பொருளாதார, சமூகப் பிரச்சினைகள் பற்றிய போதிய அறிவுடைய அரசியல் ரீதியான செயற்பாடுமிக்க பகுத்தறிவுள்ள மக்களின் இருப்பு.

2. நிலப்பிரதேசத்தின் அடிப்படையில் அரசு சிறிதாக அமைதல். உதாரணம் : இலங்கை

3. சுதந்திரமானதும் நேர்மையானதுமான ஊடகத்துறையின் செயற் பாடு அமைய வேண்டும்.

4. சட்டத்தின் முன் சகலரும் சமன் எனும் தன்மை இருத்தல் வேண்டும்.

## குடிமுனைப்பு

ஜனநாயகத்தின் சில குறைபாடுகளைப் போக்க மக்களே நேரடியாக முனைவது (முயற்சிப்பது) குடியமைப்பு ஆகும். அரசாங்கம் தேர்தலின் போது கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்ற தவறினால் அக்காரியத்தை செய்யும்படி மக்கள் நேரடியாக அரசாங்கத்தை வற்புறுத்துவர். இதனை கையொப்பங்கள் சேர்த்தல் மூலம் செய்வர் மக்கள் எல்லோரும் சேர்ந்து சேகரித்த கையொப்பப் பட்டியல் (LIST) அரசாங்கத் தலைவருக்கு அனுப்பி வைக்கப்படும்.

இம்முறை மக்கள் கருத்தை சரியாகக் காட்டாது என்று குறை கூறப்படுகிறது. இதற்குக் காரணம் பொய்யான கையொப்பங் களை உட்படுத்த இடமுண்டு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தொடக்கிவைத்தல் அல்லது திருப்பியழைத்தல்

- தொடக்கி வைத்தல் ஒரு நேரடி ஜனநாயக முறையாகும். சட்டங்களை ஆரம்பித்து வைப்பதற்கு மக்களுக்கும் அதிகாரமுண்டு என்பதே இதன் பொருளாகும்.
- நடைமுறையில் உள்ளதொரு சட்டத்தை திருத்துவதற்கும் இம் முறையைப் பயன்படுத்தலாம்.
- ஒரு குறிப்பிட்ட வாக்காள எண்ணிக்கையினர் கைச்சாத்திட்டு கோரிக்கை விடுப்பதன் மூலம், சட்டத் தீர்மானத்தை அரசாங்கத்திடம் சமர்ப்பித்தல் உதாரணமாக சுவிற்சர்லாந்தில் 50,000 பிரஜைகள் கைச்சாத்திட்டு விடுக்கும் வேண்டுகோள் மூலம் தொடக்கி வைத்தல் தீர்மானம் ஒன்றை முன்வைக்கலாம்.
- மக்களின் இறைமை பாதுகாக்கப்படுதல் தொடக்கி வைத்தலின் பிரதான நன்மையாகும். அதிகாரத்தில் அமர்ந்திருக்கும் அரசாங்கம் பொறுப்புடன் சட்டங்களைப் பிறப்பிப்பதற்கு இம்முறை தூண்டுதலாக அமைகிறது.
- சட்டத்துறையின் அதிகாரமும், ஆளுமையும் வீழ்ச்சியுறுதல் இதன் பிரதான குறைபாடாகும். மறுப்பும் சிக்கலான அரசியல், பொருளாதார சமூகப் பிரச்சினைகளைச் சரியாக விளங்கிக் கொண்டு தர்க்க ரீதியாகச் செயற்படும் ஆற்றல் உண்டா என்ற கேள்வி எழுகின்றது.
- மக்களால் தெரிவு செய்யப்பட்ட ஒரு பிரதிநிதி அல்லது அதிகாரி தனது பொறுப்புக்களை உரிய முறையில் நிறைவேற்றாத போது அவர்களைத் திருப்பியழைக்க மக்களுக்குள்ள அதிகாரமே திருப்பி அழைத்தல் என்பதாகும்.
- ஒரு குறிப்பிட்ட எண்ணிக்கையினராக வாக்காளர்கள் அடிப்படைத் தீர்மானத்தை முன்வைத்து அதன்படி நடைபெறும் தேர்தலில் அத்தீர்மான்த்திற்குப் பெரும்பாண்மை ஆதரவு கிடைக்கப்பெறின், சம்பந்தப்பட்ட பிரதிநிதியோ, அதிகாரியோ தமது பதவியிலிருந்து விலக வேண்டும்.
- மக்கள் பிரதிநிதிகள் பொறுப்புடன் செயற்படுவதைத் தூண்டுவதற்கு திருப்பியழைத்தல் பயனுடையதாயினும் அவர்கள் பக்கச் சார்பற்ற வகையில் அச்சமின்றி செயற்படுவதை இம்முறை பலவீனப்படுத்துகின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உரிமைகள்

ஒரு அரசியல் சமூகத்தில் ஒன்றாகக் கூடும் மக்கள் ஒரு சிறந்த வாழ்க்கையை அனுபவிப்பதற்காக அவர்கள் மனித செயற்பாடு சம்பந்தமாக ஏற்றுக் கொள்ளப்பட்ட சில விதிகளைப் பின்பற்ற விரும்பு கின்றனர். அவர்கள் சில தடைகளையும், பொறுப்புக்களையும் ஏற்றுக் கொள்கின்றனர். வேறு வார்த்தையில் கூறினால் அவர்கள் தமது தனிப்பட்ட சுதந்திரத்தைப் பாதுகாத்துக் கொள்வதற் கான வாய்ப்பை பெற்றிருக்கும் அதேவேளை சமூகத்தில் சகலரதும் உயர் சுதந்திரத்தை அபிவிருத்தி செய்து கொண்டு நடாத்துவதற்கான வாய்ப்பினையும் பெற்றிருக்க வேண்டும். இதன் காரணமாக அச் சமூகத்தில் உரிமைகள் அத்தியாவசியமாக வேண்டி நிற்கின்றன.

அரசியல் எண்ணக்கருக்களில் உரிமை பிரதான இடத்தைப் வகிக்கின்றது. ''மனிதன் இன்புற்று வாழ்வதற்கு தேவையான சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட நிபந்தனைகளே உரிமைகளாகும். வேறுவிதமாக கூறுவதாயின் சிறந்த வாழ்க்கைக்காக மனிதனால் அனுபவிக்கக்கூடிய வாய்ப்புக்களே உரிமையாகும்' எனக் கூறலாம்.

உரிமைகள் வரையறையற்றவை. அன்று, ஏனையோரின் உரிமைகளுக்கு பங்கம் விளைவிக்காத வகையிலேயே அதனை அனுபவிக்க வேண்டும். உரிமைகளை முறைகேடாகப் பிரயோகித்துச் சமூகத்திற்கு தீங்கிழைக்கும் உரிமை எவருக்கும் கிடையாது. எவரும் தனது நலனுக்காக மட்டும் உரிமைகளை பயன்படுத்தக்கூடாது. அவற்றை சமூகத்திற்குப் பொது நன்மையை ஏற்படுத்தும் வகையிலேயே அனுபவிக்க வேண்டும்.

உரிமைகள் கட்டாயமாகக் கடமைகளுடன் இணைந்தவையாகும். கடமைகளின்றி உரிமைகளை அனுபவிக்கமுடியாது. உரிமைகள் சமூகத்திலிருந்தே தோன்றுகின்றன. சமூகத்திற்கு வெளிவாரியாக உரிமைகள் இருக்க முடியாது. ஜனநாயக முறைகளில் சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளைப் பாதுகாத்து சகலருக்கும் சமமான வகையில் உரிமைகளை அனுபவிப்பதற்குத் தேவையான சூழலை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உருவாக்குதல் அரசின் கடமையாகும். சமூக அபிவிருத்தியோடு உரிமைகளும் வளர்ச்சியுறுகின்றன.

உரிமைகளுக்கு ஒரு நிலையான பொருளை கொடுக்க முடியாது அரசறிவியலாளரும் தத்துவஞானிகளும் பல விடயங்களை விளக்குவதற்கு உரிமை என்ற சொல்லை பயன்படுத்தி உள்ளனர். லஸ்கியின் (Luski) கருத்துப்படி "மனிதன் தனது சமூக வாழ்க்கையை சிறப்பாக மேற்கொள்ளத் தேவைப்படும் நிபந்தனைகளே உரிமை யாகும்" என்று கூறுகின்றார்.

Hophouse யின் கருத்துப்படி "சிறந்த சமூக வாழ்க்கையை மேற்கொள்ளத் தேவையானதும் ஏனையோர் எம்மிடம் இருந்தும் நாம் ஏனையோரிடமிருந்தும் எதிர்பார்ப்பதுமான சமூக வாய்ப்புக்களே உரிமை களாகும்" என்று கூறுகின்றார்.

மனிதனின் சிறப்பான வாழ்க்கைக்கு தேவையான அம்சங் கள் அவசியமாகின்றன. அத்தன்மைகளுக்கான சமூகத்திலே மனிதனால் கோரிக்கை விடுக்கப்படுகின்ற விடயங்கள்தான் உரிமை கள் ஆகும்.

மனிதன் நாகரீக சமூகத்திலே தனியாக வாழ முடியாது. மற்றவர்களோடு சேர்ந்து வாழும் போது அவனுக்கு தனிப்பட்ட உரிமைகளும் சமூக உரிமைகளும் தேவைப்படுகின்றன. இதனடிப் படையில் சமுகமும் மனிதனும் முன்னேற வேண்டுமாயின் அனைவ ருக்கும் பொதுவான உரிமைகள் அவசியமாகும்.

சமூகத்தில் மனித ஆளுமை விருத்திக்கும் சமூகத்தில் இன்புற்று வாழ்வதற்குத் தேவையான உரிமைகளை மனிதன் விண்ணப்பிக்கின்றான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமையின் பண்புகள்

01. உரிமைகள் தனிமனிதனின் உரித்தாக இருப்பதாகும். ஆனால் சகல உரிமைகளும் உரிமைகளல்ல. அவை, ஒருவனின் தனிப்பட்ட நலன்களிலிருந்து விடுபட்டு உலகப் பொதுவான வகையில் பொருந்தக் கூடிய உரிமைகளாக இருக்க வேண்டும். தனிமனித நலன்கள் கூட சமூகத்தில் அனைவருக்கும் பொதுவானதாக இருக்க வேண்டும். அதேவேளை, தனிமனிதனின் இந்த உரித்து சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படவும் வேண்டும். அவை, சகலரது நன்மைக்கும் உதவுவதாக இருத்தல் மட்டுமே சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்படும். எனவே, வாழும் உரிமை சகலருக்கும் ஒரே சமமான பெறுமதியினைத் தருகின்றது என்ற அடிப்படையிலேயே ஒரு மனிதன் வாழும் உரிமையை ஏற்றுக்கொள்கின்றான்.

02. உரிமைகள் அரசியல் ஏற்புத்தன்மையினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும் :

உரிமைகள் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு வெளியிடப்படும் வரை அவை ஒரு ஒழுக்க ரீதியான வெளியீடாகவே இருக்கும். ஒருவனின் உரித்து சமூகத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்டாலும் அவை நடைமுறையில் மனிதனின் எதிர்பார்க்கைகள்; சுயநலமனப் பாண்மை போன்றவற்றினடிப்படையில் ஒழுங்கு படுத்தப்படலாம். பலம் வாய்ந்த மத்திய அதிகாரத்தின் மூலம் அவற்றை தனிப்பட்ட வகையிலும் பொதுவான வகையிலும் ஏற்றுக்கொள்ளப்படும் வகையில் வெளியிடப் பட்டால் மட்டுமே மேற்கூறிய நிலையைத் தவிர்க்கலாம். அந்நிலையை அரசே மேற்கொள்ள வேண்டும். அரசு இந்த ஒழுக்க ரீதியான ஒப்புதலை சட்டரீதியாக மாற்றி அவற்றுக்கு சட்டத்தன்மையை வழங்குகின்றது. இதன் மூலம் உரிமைகளை தனிப்பட்ட நலன்களினடிப்படையில் ஒழுங்கு படுத்தப்படுதல் தவிர்க்கப்படுகின்றது.

03. மகிழ்ச்சியாக, நிறைவுடன் வளமாக வாழ்க்கை வாழச் சமுதாய அடிப்படையில் ஏற்கப் பெற்றவை உரிமைகள். அவை, அரசுக்கும் முற்பட்டவை. சமூக வாழ்க்கையை நிறைவு செய்வன. எனவே,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உரிமைகள் சமூதாயத்தில்தான் தோன்றுகின்றன. சமூதாயமின்றி உரிமைகள் இல்லை.

04. அரசு உரிமைகளை உருவாக்குவதில்லை. அது உரிமைகளை ஏற்று நிருவகித்து ஒருங்கிணைக்கின்றன. அப்போதுதான் அத்தகைய உரிமையின் பயனை அனைவரும் பெறவியலும், மீறினால், அவர்களைக் காக்க முடியும். எனவே, அரசு ஒவ்வொரு குடி மகனுக்கும் உரிமையை உறுதிப்படுத்துகின்றது.

05. உரிமைகள் இவ்வளவு தான் என்று வரையறை செய்ய இயலாது. பிறரின் உரிமைகளை கருத்தில் கொண்டு ஒவ்வொரு குடிமகனும் உரிமைகளைப் பயன்படுத்த வேண்டும். அறிவுத்திறன், நல்ல ஒழுக்கம் ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டவை. சமுதா யத்தில் கெடுதலை விளைவிக்க யாருக்கும் உரிமை இல்லை.

06. உரிமைகள் சமூதாயத்தில் எந்த ஒருவரின் சுயநலத்திற்காக இல்லை. பொது நலனை ஒட்டியே உரிமைகள் பயன்படுத்தப்பெற வேண்டும். சமுதாயத்தின் பொது நலனைப் பாதிக்குமாயின் தன் உரிமையை யாரும் வலியுறுத்தவியலாது.

07. உரிமைகள் தெளிவற்றவையாக இல்லாமல் உறுதியானவையாக அமைதல் வேண்டும். அப்போது தான் சமூதாயத்தில் அடிக்கடி பூசல்கள் ஏற்படாது.

08. உரிமைகளுடன், கடமைகளும் ஒன்று சேர்ந்தவை. ஒவ்வோர் உரிமைக்குப் பின்னும் கடமைகள் உள்ளன. கடமையில்லாத உரிமை நிழல்கள் இல்லா மனிதர்கள் போன்றவை. சமூதாயத் தேவைகள் பெருகப் பெருக உரிமைகளும் பெருகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உரிமைகளின் வகைகள்

சிலர் உரிமைகளை அரசியல், பொருளாதார, சமய, கலாச்சார உரிமைகள் என்று பாகுபாடு செய்கின்றனர். வேறு சிலர் சிவில் உரிமை, அரசியல் உரிமை என இரண்டாகப் பிரிக்கின்றனர். இங்கு பொருளாதார, சமய, கலாச்சார உரிமைகள் அனைத்தும் சிவில் உரிமைகள் உள்ளடக்கப்படுகின்றன.

### சிவில் உரிமைகள்

சிவில் உரிமை சமூக வாழ்க்கைக்கான நிலைகளை ஏற்படுத்திக் கொடுக்கின்றது. அதே நேரம் நாகரீக வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுப்பதால் அவை சிவில் உரிமை என அழைக்கப்படுகின்றது. ஜனநாயக நாடுகளில் சிவில் உரிமைகள் உத்தரவாதப்படுத்தப் படுகின்றன.

சிவில் உரிமைகளை பின்வருமாறு பாகுபாடுத்தலாம் :

(அ) உயிர்வாழும் உரிமை

சகல உரிமைகளிலும் வாழும் உரிமையே மிகவும் முக்கியமானதாகும் இவ்வுரிமைபற்றி மனிதன் ஏனைய உரிமைகளை அனுபவிக்க முடியாது. இவ்வுரிமை காரணமாக ஒருவன் இன்னொருவனின் வாழ்க்கையை இல்லாமல் செய்வதற்கும் தனது உயிரை மாய்த்துக் கொள்வதற்கும் உரிமை இல்லை. இன்னொருவன் தன்னை கொலை செய்யவரும் பொழுது தனது உயிரை பாதுகாத்துக்கொள்ள உரிமை பெற்றுள்ளான்.

(ஆ) தனிமனித சுதந்திரத்திற்கான உரிமை

ஒருவன் சிறப்பான வாழ்க்கையை அனுபவிப்பதற்கு தனிமனித சுதந்திரம் அவசியமாகும். Mill, Russell, Rooso போன்ற அறிஞர்கள் அடிப்படை உரிமைகளில் தனி மனித சுதந்திரம் பிரதான இடத்தை பெறுகின்றது என்று கூறுகின்றான். தனி மனித சுதந்திரம் நடமாடும் சுதந்திரத்தை கொண்டிருக்கின்றது. Rooso வின் தத்துவப்படி நடமாட்டம் இல்லாத வாழ்க்கை பொருளற்றதாகும். தனிமனித சுதந்திரம் சட்டப்படியன்றி கைது செய்யப்படாமல் இருப்பதற்காக சுதந்திரத்தை வழங்கியது. வேறு வகையில் சொன்னால் எவரும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சட்டத்தை மீறாத வரையில் கைது செய்யப்பட முடியாது. சட்டப்படி குற்றவாளியாகாதவரை எவரும் சிறையில் இடப்படவும் கூடாது. தனி மனித சுதந்திரத்திற்கான உரிமைகளுள் பெரும்பாலானவை தனி முதன்மை வாய்ந்தவை அல்ல. சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் பொறுத்து அரசு சில கட்டுப்பாடுகளை அவற்றின் மீது விதிக்கலாம். யுத்த காலங் களிலும், அவசர காலங்களிலும் அவை கட்டுப்படுத்தப்படலாம். எனினும் ஜனநாயக நாடுகளிலும் அமைதியான சூழ் நிலைகளில் அக்கட்டுப் பாடுகள் விதிக்கப்படுவதில்லை.

(இ) சுதந்திரமாக சிந்தனை செய்யும் உரிமையும், கருத்து வெளியீட்டு உரிமையும் :

இதுமனித உரிமைகளுள் மிகவும் பெறுமதி வாய்ந்தது. இது பத்திரிகைச் சுதந்திரத்தையும், பேச்சுச் சுதந்திரத்தையும் உள்ளடக்கு கின்றது. பேச்சுச் சுதந்திரமும், கருத்து வெளியீட்டுச் சுதந்திரமும், சிந்தனை செய்யும் சுதந்திரமும் இன்று இல்லை. பேச்சுச் சுதந்திரமின்றி ஜனநாயகம் செயற்பட முடியாது. பேச்சுச் சுதந்திரமும், கருத்து வெளி யீட்டுச் சுதந்திரமும் ஒருவனின் ஆளுமையை ஆட்சி செய்கிறது. பேச்சுச் சுதந்திரம் என்பதன் மூலம் பொது விடையங்கள் சம்பந்தமாக ஒருவன் தனது கருத்தை வெளியிடும் சுதந்திரத்தை குறிக்கும். ஒருவன் தனது பேச்சுச் சுதந்திரத்தை பிரயோகிக்கும் போது அவன் மட்டுமன்றி சமூகமும், அரசாங்கமும் பயனடைகின்றன. பத்திரிகை சுதந்திரம் பேச்சு சுதந்திரத்தின் நெருங்கிய தொடர்புடையதாகும். பத்திரிகைகள் உண்மைகளை பிரசுரிக்காவிட்டால் ஜனநாயகம் பல பிரச்சினைகளை எதிர் நோக்கவேண்டிய ஏற்படும். நாட்டு மக்களின் மனக் குறைகளை வெளியிடவும், அரசாங்கத்தை கட்டுப்படுத்தவும் சுதந்திரமான பத்திரிகைச் சுதந்திரம் அவசியமாகின்றது. என்றாலும், இன்று பத்திரிகை சுதந்திரம் தணிக்கை செய்யப்படுகின்றது. தணிக்கையும், ஜனநாயகமும் ஒன்றுக்கொன்று முரணானது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## (ஈ) சொத்துரிமை

சொத்து வைத்திருப்பதற்கான உரிமை சிவில் உரிமைகளில் பிரதான மானதும் ஏனைய உரிமைகளைப் போன்று இவ்வுரிமையும் சமூகத்தால் ஏற்றுக் கொள்ளப்படுவதால் அதுவும் ஒரு உரிமையாகக் கொள்ளப் படுகின்றது. அவ்வுரிமை சோஷலிச சிந்தனையாளரால் எதிர்க்கப்படு கின்றது. ஒருவன் எந்தளவு சொத்தினை வைத்திருக்கலாம் என்ற கேள்வியும் எழுப்பப்படுகின்றது. ஆனால், அரசியல் சிந்தனையா ளர்களிடமிருந்து இதற்கு திருப்திகரமான பதில் வரவில்லை. லஸ்கியின் கருத்துப்படி ஒருவன் சமூக, பொருளாதார நோக்கத்திலிருந்து விடுபட்டு சுதந்திரமுடையவனாக இருப்பதற்கு அவனிடம் போதியளவு சொத் துரிமை இருக்க வேண்டும்.

சொத்துமடையில் தனியார் சொத்துடமையும் காணப்படுகின்றது. இதனை ஆதரிப்போரின் கருத்துப்படி சொத்துடமை மனிதனுக்கு பாதுகாப்பை வழங்குகின்றது. கைத்தொழில் சமூகமொன்றில் தனியான சொத்துடைய இல்லாத ஒரு மனிதன் அடிமையை விட மோசமாகி விடுவான். சொத்துடையவன் நாட்டில் அக்கறையுடையவனாக இருப் பான் என்றும் கூறப்படுகின்றது. இலட்சிய வாதிகளின் கருத்துப்படி சொத்துடைமை ஆளுமையை அபிவிருத்தி செய்கிறது.

## (உ) நம்பிக்கையை பின்பற்றும் சுதந்திரம் அல்லது சமய சுதந்திரம்

ஜனநாயக மரபுரிமைகளுள் சமய சுதந்திரமும் ஒன்றாகும். இது, ஒரு அத்தியாவசிய மனித உரிமையாகும். ஒரு ஜனநாயக சமூகத்தில் சகலரும். இவ்வுரிமையை பெற்றிக்க வேண்டும். அவர்கள் தாம் விரும்பும் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும். தமது சமயங்களை பிரச்சாரம் செய்வதற்கும் சுதந்திரம் வழங்கப்பட வேண்டும். ஆனால், அவை ஒழுக்கவியலுக்கும் பொது சுகாதாரத்திற்கும் முரணான தாக இருக்கக்கூடாது. அரசு சமய விவகாரங்களில் பாரபட்சம் காட்டக்கூடாது. ஒரு குறிப்பிட்ட சமயத்திற்கு பிரத்தியேக சலுகைகள் வழங்கக் கூடாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஊ) சமத்துவ உரிமை :

ஜனநாயக நாடு சமத்துவம் பற்றிய கொள்கையை அடிப்படையாகக் கொண்டுள்ளது. எவருக்கும் எந்தக் குழுவுக்கும் பிரத்தியேக அந்தஸ்துக்கள், சலுகைகள் வழங்கக் கூடாது. அது, சட்டத்தின் முன் சமத்துவம், சமமான சட்டப் பாதுகாப்பு போன்ற உரிமைகளை வழங்குகின்றது. ஜனநாயக நாட்டு அரசுகளில் பிரஜைகளிடையே சாதி, சமயம், நிறம், செல்வம், பால் போன்றவற்றின் அடிப்படையில் வேறுபாடு காணப்படமாட்டாது.

(எ) சங்கங்களாகக் கூடும் உரிமை :

சங்கங்களை அமைக்கும் சுதந்திரம் அங்கீகரிக்கப்பட்ட தொன்றாகும். தனிப்பட்டவர்கள் பல தரப்பட்ட சமூக, பொருளாதார, கலாச்சார, சமயச் சங்கங்களை அமைத்துள்ளனர். தற்கால அரசு சங்கங்களுள் ஒரு சிங்கம் என்று கருதப்படுகின்றது. மேற்கூறிய சங்கங்கள் மனிதனின் பலதரப்பட்ட நோக்கங்களையும், தேவைகளையும், வெளிப்படுத்துகின்றது. எவ்வாறாயினும் அச்சங்கங்கள் அரசியல் அதிகாரத்திற்கு சவாலாக இயங்குகின்றது. அவை, அரசின் கட்டுப்பாட்டுக்கு உட்பட்டே செயற்பட வேண்டும்.

(ஏ) குடும்ப உரிமை :

குடும்பம் என்பது ஆரம்ப அலகாக இருப்பதால் குடும்ப உரிமை சமூகத்தின் அத்தியாவசியமானது. இது, திருமண உரிமையையும் திருமண உறவுகளின் தூய்மையை பேணுவதில் எதிர்க்கும் உரிமையையும், மரபுரிமைகளை பெறுவதற்கான உரிமையையும் கொண்டுள்ளது. அரசு திருமணம், குடும்பம் போன்ற தாபனங்களின் தூய்மையினை அங்கீகரிக்கின்றது. அரசு தனது சட்டத்தின் மூலம் குடும்ப அங்கத்தவர்களுக்கிடையிலான தொடர்பை ஏற்படுத்துகின்றது. இது, இருபதிமணம், பலதாரமணம், பலபதிமணம், விவாகரத்து போன்றவற்றுடன் தொடர்புடையவையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(ஐ) **வேலை செய்யும் உரிமை :**

ஒவ்வொரு குடிமகனும் வேலை செய்யும் உரிமையைப் பெறுகின்றான். அவ்வுரிமை உயிர்வாழ் உரிமையை பூரணப்படுத்து கின்றது. டைசியின் கருத்துப்படி வேலை செய்தால் தான் சாப்பிடலாம். அதனால், ஒருவனுக்கு வேலை வழங்குதல் சமூகத்தின் கடமையாகும். அது, ஒரு குறிப்பிட்ட கடமையை செய்வதற்கான உரிமை. என்று பொருள்படமாட்டாது. சமூகத்திற்குத் தேவையான பொருட்களையும் சேவைகளையும் உற்பத்தி செய்வதில் சகலரும் பங்குபற்ற வேண்டு மென்பதை இதன் மூலம் பொருள் கொள்ளப்படுகின்றது. வேலை செய்யும் உரிமை தனது வேலைக்கேற்ற கூலியைப் பெறும் உரிமை யையும் வழங்குகின்றது. ஒருவன் இன்புற்று வாழ்வதற்கு வேலை செய்யும் உரிமை அவசியமானதாகும்.

**கல்வி உரிமை**

கல்வி உரிமை சிவில் உரிமைகளுள் முக்கியமானதாகும். தனது பிரஜைகளுக்கு கல்வி வழங்குதல் ஒவ்வொரு ஜனநாயக அரசினதும் கடமையாகும். ஒரு பிரஜை தனது குடியுரிமையின் கடமையை நிறைவேற்றுவதற்குத் தேவையான கல்வி உரிமையை பெற்றுள்ளான். அவன் தனது தேவைகளை வெளியிடுவதற்காக இதனை பெற்றிருக்க வேண்டும். தற்கால சமூகத்தில் கல்வியறிவற்றவன் 2ம் தரப்பிரஜை யாகக் கருதப்படுகின்றான். கல்வி இல்லாதவன் தனது ஆளுமையை விருத்தி செய்யமுடியாது.

கல்வி இல்லாதவன் அரசியல் நிலைமைகளை சரிவரப் புரிந்து கெள்ள முடியாது. கல்வியறிவற்ற ஒரு சமூகத்தில் ஜனநாய கத்தை வெற்றிபெறச் செய்யமுடியாது. லஸ்கியின் கருத்துப்படி கல்வி யுரிமை சகலரையும் புத்தி ஜீவிகளாக்கும் உரிமை என்று பொருள் படமாட்டாது. அதன் மூலம் ஒவ்வொருவருக்கும் குறைந்த பட்ச கல்வியை கட்டாயமாக பெற்றுக் கொடுக்கவேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. அரசியல் உரிமைகள்

அரசியல் உரிமைகள் சிவில் உரிமைகளுக்கு ஆதாரமான வையாகும். ஒரு பங்கேற்கும் ஜனநாயகத்தில் இவ்வுரிமைகள் தவிர்க்க முடியாதவையாகும். இவ்வுரிமைகள் பிரஜைகள் அரசாங்க விடயங்கள் பங்குபற்றுவதற்கான வாய்ப்பை வழங்குகின்றன. அவை, அரசியல் மனிதனின் அபிவிருத்திக்காக அரசு வழங்கும் நிலமையாகும். இவற்றுக்குள் பின்வரும் உரிமைகள் உள்ளடக்கப்படுகின்றது :

1. வாக்குரிமை
2. தான் விரும்பும் அரசியல் கட்சியில் சேரும் உரிமை
3. தேர்தல்களில் போட்டியிடும் உரிமை
4. அரசாங்கப் பதவிகளை வகிக்கும் உரிமை
5. மனக்குறைகளை முன்வைக்கும் உரிமை
6. அரசாங்கத்தை விமர்சிக்கும் உரிமை

### உரிமைகளைப் பாதுகாக்கும் வழிமுறைகள்

ஜனநாயக முறையயை சிறப்பாகச் செயற்படுத்துவதற்கு உரிமைகள் அவசியமாகையால் தற்கால அரசுகள் அவற்றை பாதுகாப்பதற்கு பல ஏற்பாடுகளைப் பின்பற்றுகின்றன.

1. அடிப்படை உரிமைகள் அரசியல் யாப்பில் உள்ளடக்கப்படுதல். (Eg) இலங்கையின் 1978ம் ஆண்டு 2ம் குடியரசு யாப்பில் அடிப்படை உரிமைகள் என்ற விடயம் சேர்க்கப்பட்டுள்ளது.
2. சட்டவாட்சியின் செயற்பாடும் அது உறுதிப்படுத்தலும்.
3. ஊடகத் துறையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்
4. அதிகாரத் துஷ்பிரயோகத்தை தடுக்கும் வகையில் அரசியல் அதிகாரம் ஓரிடத்தில் குவிவதைத் தடுத்தல்
5. நீதித்துறையின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துதல்.
6. அரசு சமயச்சார்பற்றதாக இருத்தல்.
7. பொருளாதார நீதியைப் பேணுதல்.
8. உரிமைகளை நடைமுறைப்பத்திப் பாதுகாக்கும் நிறுவனங்களின் செயற்பாடு இருத்தல் வேண்டும் உதாரணமாக: மனித உரிமை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆணைக்குழு, ஓம்புட்ஸ்மன், உயர்நீதிமன்றம் போன்றவை இத்தகைய பல்வேறு வழிமுறைகள் மூலம் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன.

9. உரிமைகளை அனுபவிப்பது பற்றி மக்களுக்கு அறிவூட்டல்.

## மனித உரிமைகள்

மனித இருத்தலுக்கு அவசியமானதும் அவர்களின் சுய கௌரவத்தை பாதுகாப்பதுமான வாய்ப்புக்களே மனித உரிமைகளாகும். இவை இயற்கை உரிமைகளினதும் சிவில் உரிமைகளினதும் கலவையாகும்.

எளிமையான பொருளில் கூறுவதாயின் மனிதப் பிறவிகளாகிய ஆண், பெண் இருபாலாருக்கும் பொதுவானதும் சட்டரீதியானதும் ஒழுக்க ரீதியானதுமான கோரிக்கைகளும் உரித்துக்களுமே மனித உரிமைகளாகும்.

இப்பொருள் விளக்கமானது மனித உரிமையை சரியாக விளங்கிக் கொள்ள போதுமானதல்ல. இது, மனிதப் பிறவி என்ற வகையில் கிடைக்கப்பெற்றது.

Maurice cransten என்பவரின் பொருள் விளக்கத்தின்படி மனித உரிமைகள் என்பது அகில ரீதியான ஒழுக்க உரிமைகளாகும். அவை சகல ஆண்களுக்கும் பெண்களுக்கும் எவ்விடத்திலும் எப்போதும் உரித்தாக வேண்டிய நியாயமானது கடுமையாக மீளப்படுவதன் மூலம் அன்றி வேறு வகையில் இல்லாதொழிக்கமுடியாத மனிதப் பிறவி என்ற வகையில் சகல மனிதருக்கும் உரித்தாகும் உரிமைகளாகும். இதன்படி;

1. இவை அகில ரீதியான நியாய அடிப்படையில் உருவாகியுள்ள உரிமைகளாகும்.
2. இவை ஆண், பெண் வேறுபாடுகளின்றி சகல மனிதருக்கும் உரித்தாகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. இவை வேறொன்றிலும் அன்றி மனிதனை அடிப்படையாக கொண்டே நிலவுகின்றன.
4. இவை அகில ரீதியான சமத்துவத்தின்படி உரித்தாக வேண்டும். எவ்வகையிலும் மீள முடியாதவையாகும்.
5. இவை மீளப்படின் அங்கு கடுமையாக அநீதி நிலவும்
6. காலம், இடம் என்ற வேறுபாடின்றி அகில ரீதியான உரித்து களாகும்.

1945 இல் ஐக்கிய நாடுகள் சபை தாபிக்கப்பட்டதோடு அதன் சாசனத்திலும் சர்வதேச மனித உரிமைகள் சட்டதிலும் ஏனைய பொருத்தனைகளிலும் சமயவாயங்களிலும் ஏனைய வெளியீடு களிலும் மனித உரிமைகள் அங்கீகரிக்கப்பட்டு சர்வதேசமயப்படுத் தப்பட்டுள்ளன. சர்வதேச மனித உரிமைகள் சட்டம், 1948 ல் நிறைவேற்றப்பட்ட அணைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் (UDHR), 1996 ல் நிறைவேற்றப்பட்ட குடியியல் மற்றும் அரசியல் உரிமைகள் மீதான பொருத்தனை (ICCHR) பொருளாதார சமூக கலாச்சார உரிமைகள் மீதான சர்வதேச பொருத்தனை (ICESCR), குடியியல், அரசியல் உரிமைகள் மீதான பொருத்தனைக்கான விருப்புக்குரிய கூட்டு ஒப்பந்த மூலப்படி (optional protocol to the covenant on civil and political rights) என்னும் நான்கு ஆவணங்களை உள்ளடக்கியதாகும்.

அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம் (உறுப்புரை -2) இன்படி;
இனம், நிறம், பால், மொழி, மதம், அரசியல் அல்லது வேறு அபிப்பிராயங்கள் தேசிய அல்லது சமூகத் தோற்றம், சொத்து, பிறப்பு, அல்லது பிற அந்தஸ்து ஆகிய வேறுபாடுகளின்றி சகலரும் சகல உரிமைகளுக்கும் சுதந்திரங்களுக்கும் உரித்துடையோராவர். ஐக்கிய நாடுகள் சாசனம் தனது முகப்புரையில் ஆண்களதும் பெண்களதும் சமமான உரிமைகளையும் மனித ஆணின் கௌரவத்தையும் பெறுமதிகளையும் வெளிப்படுத்தும் அடிப்படை மனித உரிமைகளையும் பற்றிய நம்பிக்கைகளை மீள உறுதிப்படுத்தியுள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமையின் முக்கியத்துவம்

1. ஜனநாயக நிறுவனங்களின் செயற்பாட்டுக்கு மனித உரிமைகள் அதிக அவசியமாகும்.
2. ஜனநாயகம் இல்லாத இடத்தில் மனித உரிமைக்கு இருப்புக் கிடையாது. தற்கால சமூக அமைப்பில் ஜனநாயகமும் மனித உரிமைகளும் பிரிக்க முடியாதது.
3. தனிமனிதனினதும் சமூகத்தினதும் பொதுநலன் ஜனநாயகத்தில் தார்ப்பரியம், சமூக நீதி இதனைப் பாதுகாக்கத் தேவையான சகல அம்சங்களும் மனித உரிமைக்குள் உள்ளது. சமூக நீதி இல்லாதவிடத்தில் மனித உரிமைகள் மீறப்படும்.
4. தற்கால சமூகங்கள் ஜனநாயகத்தை பாதுகாத்தல், பிரஜைகளின் பொதுநலனை விருத்தி செய்தல் சமூக நீதியை நிலை நிறுத்தல் என்பவற்றுக்கு மனித உரிமைகள் கல்வி அவசியமாகும்.
5. மனித உரிமைகளின் முக்கியத்துவத்தை வலியுறுத்தப் பிறிதொரு காரணி அரசுக்கிடையான தொடர்பையும் அரசின் இயல்பையும் அளப்பதற்கான அளவுகோளை மனித உரிமைகளில் உள்ளது.
6. மனித உரிமைகளை மீறும் அரசு தான்தோன்றித் தனமான சர்வாதி கார அரசு எனப்படும்.
7. மனித உரிமைக்கு பரிகாரங்களை வழங்கினால் அது ஜனநாயக அரசு ஆகும்.
8. மனித உரிமைகள் இனம், பால், வம்சம், சமயம், வகுப்பு அல்லது அத்தகைய பிற வேறுபாடுகளின்றி சகல மனிதனுக்கும் இருக்க வேண்டும் என நம்பப்படும் உரிமைகளாகும்.

## மனித உரிமைகளின் பண்புகள்

1. மனிதப் பிறவிகளுக்கு மட்டும் உரித்தானவை.
2. அனைத்துலக தன்மை (universatity) பொருந்தியது. இதனால் சமமானதாகவும் பாராதீனப்படுத்த முடியாததாகவும் உள்ளது.
3. சட்டரீதியான கட்டுப்பாடுகளுக்கும் மட்டுப்பாடுகளுக்கும் உட்படுத் தாத வரை மீற முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மனிதனின் பொதுநலன், சமூகத்தின் பொது ஒழுங்கு, மனித ஒழுக்கத்துக்கும், கௌரவம் ஆகியவற்றுக்கு பாதிக்காத வகையில் மீற முடியாது.

4. பரஸ்பர தங்குநிலை (interdependary) ஒவ்வொரு மனித உரிமையும் ஒன்று இன்னொன்றில் தங்கியிருக்கும் பொருளாதார உரிமைகளை அனுபவிக்க அரசியல் உரிமை தேவையானது. அரசியலில் சமத்துவம் இருக்கவேண்டுமாயின் பொருளாதார சமத்துவம் இருக்க வேண்டும். இதனால், ஒரு உரிமையை இன்னொன்றுக்காக தியாகம் செய்யமுடியாது.

5. சகல உரிமைகளையும் மனித உரிமையாக கொள்ள முடியாது. ஆனால், மனித உரிமைகள் அனைத்தும் உரிமைகளே.

## மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளும்

மனிதனின் உய்வையும் கௌரவத்தையும் பாதுகாப்பதற்கான வாய்ப்புக்களே மனித உரிமைகளாகும். இது, இயற்கை உரிமைகளினதும், சிவில் உரிமைகளினதும் கலப்பாகும். இவை, உலகின் சகல இடங்களுக்கும் சகல மனிதர்களுக்கும் பொதுவானவை.

மனித உரிமைகளில் ஒன்றை அத்தியாவசியமாகப் பாதுகாக்க வேண்டும் என்ற ஒவ்வொரு அரசும் தீர்மானித்து தம் அரசியல் யாப்பில் உள்ளடக்கும் உரிமைகளே அடிப்படை உரிமையாகும்.
உதாரணமாக : இலங்கையின் 1978ம் ஆண்டின் 2ம் குடியரசு யாப்பில் அடிப்படை உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் விரிவாக குறிப்பிடப் பட்டுள்ளது.

அரசுகள் இவ்வுரிமையைப் பாதுகாப்பதற்கு சட்டரீதியாக கடமைப் பட்டுள்ளது. வேலைசெய்யும் உரிமை, கல்வி உரிமை, பேச்சுரிமை கருத்து வெளியீட்டுரிமை, தான் விரும்பும் மதத்தை பின்பற்றும் உரிமை, வாக்களிக்கும் உரிமை, அரசாங்க பதவிகளை வகிக்கும் உரிமை, போன்றவற்றைப் பாதுகாக்க வேண்டியது அரசின் கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சகல அடிப்படை உரிமைகளும் மனித உரிமைகளாகும். ஆனால், சகல மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளில் உள்ளடக்கப் படுவதில்லை.

உதாரணமாக: இலங்கையின் அரசியல் யாப்பில் வாழும் உரிமை குறிப்பிடப்படவில்லை. அடிப்படையுரிமை நாட்டுக்கு நாடு வேறுபடுகின் றன. மேற்கத்திய நாடுகள் அரசியல், சிவில் உரிமைகளுக்கு முக்கியத்துவம் வழங்கும் போது கம்யூனிச நாடுகள் சமூக பொருளா தார உரிமைகளுக்கு முதலிடத்தை வழங்குகின்றன.

## உரிமைகளும் மனித உரிமைகளும்

சட்டரீதியான ஒப்புதலுக்கு உட்படும் கோரிக்கைகளே உரிமைகளாகும் பொது மனிதத்துவத்திலிருந்து தோன்றும் உரிமை களே மனித உரிமைகளாகும்.

சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்ட சகல உரிமைகளும் மனித உரிமைகளாவதில்லை. அவை பக்கச் சார்புடையதாகவும். பிறிதொரு பகுதிக்கு எதிரானதாகவும் இருப்பதனால் உரிமைகளா வதில்லை. மனித உரிமைகள் பொதுவானதாக, பக்கச்சார்பற்றதாக, சமத்துவத்துடன் இருக்கும்.

உதாரணமாக: 1776 இல் அமெரிக்கா சுதந்திரத்திற்குப் பின்னர் பிரஜைகளுக்கு ஆயுதங்களை வைத்திருப்பதற்கும் 1945 வரை இங்கிலாந்தில் சில பிரஜைகள் 2 வாக்குகளைப் பெறுவதற்கும் இருந்த உரிமைகள் மனித உரிமைகளன்று.

- பல்வேறு சமூகங்களில் தனி மனிதனும், சமூகக் குழுக்களும் பெற்றுக்கொள்ள சலுகைகளும் உரித்துக்களுமே உரிமைகளாகும். இவை சகல சமூகங்களினதும் ஒரே வகையில் நிலவப்படமாட்டாது.
- மனித உரிமைகள் அகில ரீதியானவை, சகலருக்கும் பொது வானவை, சர்வதேச சமூகத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டவை.
- சகல மனித உரிமைகளும் உரிமைகளாகும். சகல உரிமைகளும் மனித உரிமைகளாவதில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனித உரிமைகளும் கடமைகளும்

உரிமைகளும் கடமைகளும் ஒன்றுக்கொன்று இணைந்தவையாகும். இவை, ஒரு நாணயத்தின் 2 பக்கமாகும். உரிமையை அனுபவிப்பவர் கடமையை செய்யாவிடின் குழப்பம் ஏற்படும். அதேவேளை, தனிமனிதனுக்கு உரிமைகளின்றி கடமை மட்டும் இருப்பின் அவன் அடிமையாவான். கடமையை நிறைவேற்றாது உரிமையை எதிர் பார்க்கவோ உரிமைகளை வழங்காது கடமையை செய்ய வேண்டும் என எதிர்பார்க்கவோ கூடாது.

மரபுப் பொருளில் உரிமையோடு இணைந்த கடப்பாட்டின் காரணமாகவே உரிமையை வழங்குபவன் உரிமையை பெறுபவனிடம் இருந்து கடமையை எதிர்பார்க்கிறான். மனித உரிமைப் பொருளில் மனித உரிமைகள் மனிதருக்குள்ள சட்டரீதியான உரிமைகளாகையால் உரிமையை பெறுபவன் உரிமையை வழங்குபவனுக்கு பொறுப்புக் கூறத் தேவையில்லை. அவன் உரிமைகள் தொடர்பாக சமூகத்திற்கும் பிற மனிதர்களுக்குமே பொறுப்புக்கூற வேண்டும். உரிமைகள் தொடர் பாக ஒவ்வொரு மனிதனும் பிற மனிதன் சார்பாகவும், சமூகம் சார்பாகவும் பொறுப்பையும், கடமையையும் பெறுகிறான் தனக்குள்ள உரிமை ஏனையோருக்கும் உண்டு என்று ஏற்றுக்கொண்டு மதிக்க வேண்டும். "நீங்கள் குறிப்பிடும் கருத்தை நான் முழுமையாக எதிர்க்கிறேன். நான் அதனை பெறுகின்றேன். ஆனால், கருத்து வெளியிடுவதற்கு உங்களுக்குள்ள உரிமையை உயிரைப்போன்று மதிக்கிறேன்." என்று வோல்டேயர் கூறிய கருத்து உரிமைக்கும் கடமைக்கும் உள்ள தொடர்பை விளக்குகின்றது. பிறரின் கருத்தை சகிப்புத் தன்மையோடு நோக்க வேண்டும் என்ற மூலக்கொள்கை கருத்து வெளியீட்டு உரிமையோடு சட்டரீதியாக இணைந்துள்ள கடமையாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சமூகத்தின் பொது நன்மைக்கும் பொது இருத்தலுக்கும் பங்கம் ஏற்படாதவாறும் ஒவ்வொருவரும் தனது உரிமையை அனுபவிக்க வேண்டும். உணவை உற்பத்திசெய்யும். விவசாயியும் அதை பங்கீடு செய்யும் வியாபாரியும், அரிசியை கொள்வனவு செய்யும் நுகர்வோனும், தமக்கிடையிலான தொடர்பை சமூகத்தின் சகலரினதும் உணவுக்கான உரிமையை பூர்த்தி செய்ய வேண்டும் என்ற சமூகப் பொறுப்பை நிறை வேற்றும் வகையில் மேற்கொள்ள வேண்டும்.

மனித உரிமை தொடர்பாக அரசும் சில பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவேற்ற வேண்டும், பிரஜைகளுக்கு உரிமையையும், சுதந்திரத்தையும் பெற்றுக் கொடுத்து அவற்றை உறுதிப்படுத்தி பாதுகாப்பது அரசின் கடமையாகும். தனியுரிமை அதிகாரத்தை பெற்ற ஒரு தாபனம் என்ற வகையில் பிரஜைகள் தனக்கு கட்டுப்பட வேண்டும் என்று எதிர் பார்க்கவோ பிரஜைகளின் உரிமைகளை மீறும் வகையில் செயற்படவோ முடியாது.

எனவே, உரிமைகள் மீதான கடமைப்பாடு என்பது தனிமனிதன், சமூகம், அரசு என்பவற்றை இணைந்த செயற்பாடாகும். அது உயிர் வாழும் உரிமை, கௌரவத்துக்குமான உரிமை என்று பொது மனிதத்துவத் தோடு இணைந்த கடப்பாடாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கையின் மனித உரிமை ஆணைக்குழு

உலகில் மனித உரிமை எனும் கருத்தியல் 1945ம் ஆண்டு வரை வளர்ச்சி இல்லாத ஒன்றாக இருந்தது. இன்று ஐக்கிய நாடுகள் தாபனத்தின் முயற்சியால் மனித உரிமைகள் தொடர்பான கருத்துக்கள் சர்வதேச சட்டங்களாகமாறி உள்ளன. இன்று உலகெங்கும் நாடுகள் தமது யாப்புக்களில் மனித உரிமைகள் பற்றி குறிப்பிடுகின்றன.

இலங்கையில் 1947ம் ஆண்டின் சோல்பரி யாப்பில் மனித உரிமைகள் பற்றி குறிப்பிடப்படவில்லை. ஆனால், சிறியோர் காப்பீடுகள் இடம் பெற்றிருந்தன. 1972ம் ஆண்டு முதலாம் குடியரசு யாப்பிலே முதன் முதலாக அடிப்படை உரிமைகள் பற்றிய ஏற்பாடுகள் குறிப்பிடப்பட்டன. அதேபோல் 1978ம் ஆண்டு யாப்பிலும் அடிப்படை உரிமைகள் பற்றி குறிப்பிடப்பட்டதோடு அவ் உரிமைகள் மீறப்பட்டால் நீதிமன்றங்கள் மூலம் வழக்கு தொடரவும் அதிகாரம் வழங்கப் படுகின்றது.

இவ்வாறு நீதிமன்றங்களைத் தவிர மக்கள் குறைகளை களைவதன் நோக்கமாகக் கொண்டு இரண்டு நிறுவனங்கள் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் ஒன்றுதான் மனித உரிமை ஆணைக்குழு ஆகும்.

மனித உரிமை ஆணைக்குழு இலங்கையில் 1996ம் ஆண்டில் ஸ்தாபிக்கப்பட்டு மனித உரிமைகளை கவனத்தில் எடுக்கும் மிக முக்கியமான அரசாங்க நிறுவனமாக இருந்து வருகின்றது. இவ் ஆணைக்குழு ஒருவரைத் தலைவராகக் கொண்ட 5 உறுப்பினர்களை உள்ளடக்கியுள்ளது. இவ் மனித உரிமை ஆணைக்குழு இலங்கை முழுவதிலும் அலுவலகங்களை கொண்டுள்ளது. வடகிழக்கில் மன்னார், யாழ்ப்பாணம், வவுனியா, திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய இடங்களில் அது உப அலுவலகங்களை கொண் டுள்ளது. புத்தளத்திலும் உப அலுவலகம் உள்ளது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் அதிகாரங்கள்

1. மீறல் தொடர்பான விசாரணைகள் மேற்கொள்ளல்
2. மனித உரிமை மீறப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தில் விசாரணை நடந்து கொண்டிருக்கும் வழக்கில் நீதி மன்றத்தின் அனுமதியுடன் தலையிட முடியும்.
3. சட்ட ரீதியாக அல்லது அவ்வாறின்றித் தடுத்து வைத்திருக்கும் நபர்களிற்காகச் செயல்படல். தடுத்து வைக்கப்பட்ட பிரதேசங்களை சோதனையிடல் வசதிகளைப் பெருக்க அரசுக்கு விதந்து கூறல்.
4. உயர் நீதிமன்றத்தின் ஆணைப்படி நடவடிக்கைகள் எடுத்தல்.
5. மனித உரிமைக்கல்வி கருத்தரங்கு, ஆய்வு மேற்கொள்ளவும் இக் குழுவினால் முடியும். (அண்மையில் காணாமற் போனோர்) தொடர்பான பரிசோதனைகளில் ஈடுபட்டது இக்குழு

## மனித உரிமை ஆணைக்குழுவின் கடமைகள்

1. அரசியல் அமைப்பில் ஏற்றுக்கொள்ளப்பட்ட மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல் மற்றும் அபிவிருத்திக்கேற்ப நிர்வாகச் செயல்கள், நிகழ்ச்சி நிரல் என்பவற்றை முன்வைக்கும்.
2. மனித உரிமை மீறல் அல்லது மீறலுக்குள்ளாகும் சந்தர்ப்பம் போன்ற முறையீடுகளை ஆய்ந்து தனது அதிகாரத்திற்கேற்ப சமாதானமாகத் தீர்த்துவைக்கும்.
3. மனித உரிமைகளை பாதுகாத்தல் தேவைக்கேற்ப யாப்புத் தயாரிக்கும் நடவடிக்கைகளில் அரசுக்கு உதவியாக இருக்கும்
4. தேசியச்சட்டம் சர்வதேச மனித உரிமைகளை ஒழுங்குபடுத்தல் தொடர்பாக அரசுக்கு விதப்புரைகள் முன்வைக்கும்.
5. மனித உரிமைகள் தொடர்பான கல்வியை முன்னேற்றுதல்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நடைமுறையில் மனித உரிமை ஆணைக்குழு பின்வருவனவற்றை மேற்கொண்டுவருகிறது:

1. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் மீள் திரும்புவோர் ஆகியோர் எதிர்கொள்ளும் சட்டப்பிரச்சினைகளையும் மனித உரிமை மீறல்களையும் இனங்கண்டு கவனத்தில் எடுக்கப் படுகின்றது.

2. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் மீள் திரும்புவோர் ஆகியோரின் உரிமைகள் குறித்த விழிப்புணர்வைத் தூண்டும் பொருட்டு பொலிசாருடன் இணைந்து பயிற்சித் திட்டங்களை நடத்துதல்.

3. உள்நாட்டில் இடம்பெயர்ந்த மக்கள் மற்றும் மீள் திரும்புவோர் ஆகியோர் தொடர்பான செய்திகளை வெளியிடுதல்.

யு. என். எச். சி. ஆர் இன் பாதுகாப்பு வலையமைப்பைப் பொறுத்த வரையில் மனித உரிமை மீறல்கள் தொடர்பாக விசாரணை நடத்துவதற்கான அதிகாரத்தை மட்டுமே மனித உரிமை ஆணைக் குழு கொண்டுள்ளது. என்பதனை இங்கு முக்கியமாக குறிப்பிடுதல் வேண்டும் உள்நாட்டில் இடம் பெயர்ந்திருக்கும் ஒரு நபர் தொடர் பான உரிமை மீறல் சம்பவம் ஒன்று இனங்காணப்பட்டால் அந்த விடயத்தை நீதிமன்ற நடவடிக்கைக்கு ஊடாக முன்னெடுத்துச் செல்லும் பொருட்டு மனித உரிமை ஆணைக் குழு வின் பாதுகாப்பு வலையமைப்பின் பங்காளியான சட்ட உதவி மன்றத்துக்கு அதனை எடுத்துச் செல்ல வேண்டும்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூலாசிரியரின்
## ஏனைய வெளியீடுகள்...

- அளவையியலும், விஞ்ஞானமுறையும் (பகுதி II)
  A-Level / GAQ

- பிரான்ஸ் (France)
  A-Level / GAQ

- அரசறிவியல்
  (அரசியல் எண்ணக்கருக்களும், மனித உரிமைகளும்)
  A-Level / GAQ / BA

- அளவையியலும் விஞ்ஞானமுறையும் (பகுதி II)
  (விஞ்ஞானக் கொள்கைகளும், கட்டுரைகளும்)
  A-Level / GAQ

- பிரதிநிதித்துவம் (பகுதி I)
  A-Level / GAQ / BA

- இலங்கையின் அரசியல் திட்ட வளர்ச்சி
  (1796 - 1931 வரை)
  A-Level / GAQ / BA


**தொடர்புகளுக்கு:**

**ACM. Faleel** BA, MA, Dip. in. Ed.,
Dip. in. Mass Communication,
Zahira National School,
Kalmunai.
(067 - 2221401)



**Royal Offset Printers - Sainthamaruthu**
**Mobile : 0777 488477**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org